பக்கங்கள் 24

# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

புதுமை : 01 | 25 மார்ச் 2017 | விதி : 41



**இந்த மனிதருக்காக நாம் என்ன செய்வது?**



**இளையராஜா செய்தது சரியா?**



**ஆசை காட்டி மோசம் செய்தல்**



**கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்**

# கூட்டமைப்பும் புலிகளும்




**'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாவடு

## 40

■ சயந்தன்

திடீரென்று பண்டார வன்னியன் என் பக்கம் திரும்பினான். நாம் இன்னும் பழரசத்தைக் குடித்து முடிக்கவில்லை. "அடேய் காக்கை வன்னியா" என்றான் அவன். நான் கிளாஸை வாயினின்றும் எடுத்து "என்ன" என்பதைப் போலப் பார்த்தேன். ஏனெனில் இது சீனிலே இல்லாத காட்சியாயிருந்தது. இதற்கு முன் எந்த "ரிகர்சலிலும்" பண்டாரவன்னியன் என்னை இப்படி அழைத்ததில்லை.

"பதவிக்கு ஆசைப்பட்டு என்னைக் காட்டிக் கொடுத்து விட்டாயல்லவா.." இதற்கு என்ன பதிலைச் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. நான் மேலும் கீழும் தலையை ஆட்டி "ஓம்"என்றேன். இதற்குப் பிறகு பண்டாரவன்னியன் என்னைக் கண்டபடிக்குத் திட்டத் தொடங்கினான். வெள்ளைத் துரை கூட எங்களிருவருக்குமான இந்தச் சண்டையில் என்ன ரியாக்ஷன் கொடுப்பது எனத் தெரியாமல் விழித்தபடி நின்றார். எனக்குத் தலை சூடாகிக்கொண்டு வந்தது.

"துட்டனே, ஆங்கிலேய நாய் களோடு சேர்ந்ததுமல்லாமல் காலம் காலமாய் நாம் கட்டிக்காத்த எமது கலாசாரத்து ஆடையை துறந்து அவர்களின் குழல்களை அணிந்திருக்க உனக்கு வெட்கமில்லையா.."

எனக்குப் புரிந்துவிட்டது. பண்டாரவன்னியன் திட்டமிட்டுப் பழிவாங்குகிறான். தலைக்குள் நிறைந்து குமைந்திருந்த சூடு ஒரு கட்டத்தில் தாங்காமல் கொள்ளாமல் என் வாயில் வெளியேறத் தொடங்கியது. முதற் சொல் ஒரு தூசணமாகத் தொடங்கி "ஆண்டி" என்று முடிந்தது.

"அடே வேசை மகனே! பண்டார வன்னியா! உனக்குப் பெரிய நினைப்பா, நாடகம் பழகும்போது சொல்லித்தராத கண்டறியாத வசனங்களை நீ கதைக்கிறாய். விரும்பினால் நீயும் ஒரு ஜீன்சைப் போட்டுக்கொண்டு வா, யார் உன்னைப் போடவேண்டாம் என்றது. அதைவிட்டு விட்டு தேவையில்லாமல் கதைத்தால் உன் செவிட்டைப் பொத்தி அறைவேண்டா... "இறுதிச் சொல்லும் ஒரு தூசணமாகி "மகனே" என்று முடிந்தது. சிலையென்றாகிய பண்டாரவன்னியன் சுதாகரித்து ஓடிப்போய் திரைச் சீலையை இழுத்து முடினான். ஓட்டமும் நடையுமாய் வந்து, மேடையில் ஏறிய அதிபர் என்னை இழுத்துக் கொண்டு தன்அறைக்குள் போனார். நான் அவர் கைளினின்றும் விடுவித்துக் கொள்ளப் போராடினேன். அதிபர் கதவை இழுத்து மூடினார். தோல் சீவப்பட்டுக் காய்ந்திருந்த கொழுத்த கிளுவம் தடியொன்று முறிய முறிய என் பின்னங்கால்களிலும் முதுகிலும் விளாசப் பட்டபோது அவர் சொல்லிக் கொண்டிருந்த வார்த்தைகள் இப்படியாயிருந்தன. "எளிய நாயே, நீ மேடையில தூசணம் கதைக்கிறியோ..."

இதற்குப்பிறகு நான் பள்ளிக்கூடத்தை தவிர்க்கத் தொடங்கினேன். இடையில் ஒரு காலம் மூன்று மாதம் பள்ளிகள் இயங்காதிருந்தன. அவை மீள இயங்கத் தொடங்கியபோது நான் அவற்றை மறந்து விட்டிருந்தேன். பண்டாரவன்னியனையும் மறந்திருந்தேன். இயக்கத்தில் இணைந்த நெடுங்காலத்தின் பிறகு அவனின் கல்வெட்டொன்றைக் கற்சிலைமடுவில் கண்டேன். "இங்கே பண்டாரவன்னியன் ஆங்கில அதிகாரி ட்றிபேக்கினால் தோற் கடிக்கப்பட்டான் என்று அதில் எழுதப் பட்டிருந்தது. அதற்குப் பிறகுபோன வருடம் வல்வெட்டித்துறை அம்மன் கோயிலில் நான் பண்டாரவன்னியனைப் பார்க்க வேண்டியதாய்ப்போனது.

நீண்ட காலத்தின் பிறகு அந்தக் கோயிலில் திருவிழா பெரும் கொண்டாட்டமாக விடிய விடிய நடந்தது. முன்னைய காலங்களில் இந்தியாவிலிருந்து கடலால் அழைத்து வரப்பட்ட பெரும் இசைக் கலைஞர்கள் அங்கு கச்சேரிகள் வைத்துச் செல்வார்களாம். ஒவ்வொரு வீதியையும் குறுக்காக மறித்து மேடைகள் அமைத்திருந்தார்கள். ஒவ்வொரு மேடைகளும் பாடல்களாலும் நடனங்களாலும் நிறைந்திருந்தன.

நானும் பணியகத்திலிருந்த இன்னுமொருவனும் அங்கு போயிருந்தோம். அருகெங்கோ ஒரு மேடையில் "சாந்தன் இந்த மண் எங்களின் சொந்தமண்" என்று பாடிக் கொண்டிருந்தார். வானத்தில் வெளிச்சக் கூடுகள் மேலேறிக் கொண்டிருந்தன. பரசூட் மாதிரியான கூடுகளின் கீழே நெருப்புச் சுவாலையை மூட்டி அப்படிப்பறக்க விட்டுக் கொண்டிருந் தார்கள். நான் பராக்குப் பார்த்தபடி நின்றேன். திடீரென்று யாரோ அழைத் தார்கள். "டேய்! காக்கைவன்னியா.."

நான் எதேச்சையாகத்தான் திரும்பினேன். கேற் அருகே மதில்சுவரில் ஒரு காலை மடித்து ஊன்றியபடி பண்டார வன்னியன் சாய்ந்து நின்றான். எனது முகம் பிரகாசமாகி, உதடுகள் சிரிப்பதற்குத் தயாரான பின்னர் சட்டென்று இறுகின. கேற்றுக்கு மேலே வைக்கப்பட்டிருந்த பெயர்ப்பலகையைப் பார்த்தேன். அதில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி, வடமராட்சி அலுவலகம் என்று எழுதப்பட்டிருந்தது. அதன் ஒரு பக்கத்தில் வீணையும் மற்றையதில் டக்ளஸ் தேவானந்தாவும் வரையப் பட்டிருந்தார்கள். நான் பண்டாரவன்னியனுக்கு அருகாகப் போனேன். "என்ன இந்தப் பக்கம்" என்று கேட்டேன்.

"இப்ப இங்கை தான் நிக்கிறான்" என்று அவன் மேலே பெயர்ப் பலகையைக் காட்டிச் சொன்னான்.

அதற்குப் பிறகு எனது சொற்கள் "உனக்கு வெக்கமாயில்லையோ" என்றவாறாக இருந்தன. அவன் "என்னத் துக்கு" என்று கேட்டான். பிறகு "உங்கடை அரசியல் பணிகள் எல்லாம் எப்பிடிப் போகுது" என்றான். நான் எதுவும் பேசுவதாக இல்லை.

"இந்த நாய்கள் எல்லாம் எங்களுக்கு முன்னுக்கு நிண்டு கதைக்கிற அளவுக்கு காலம் வந்திட்டுது"என்று எனக்கு நோர்வே நாட்டிலும் எரிக் சொல்ஹெய்மிலும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. நான் அமைதியாக நின்றேன். பண்டார வன்னியன் என் வாயைக் கிளற படாதபாடுபட்டான்.

"கடைசியில மத்தியில கூட்டாட்சி எண்டுதானாம் பாலசிங்கம் சைன் வைச்சுப் போட்டுப் போயிருக்கிறார்"

"அதைப்பற்றி உனக்குத் தேவையில்லை"

"துவக்கில்லாமல், கோல்சர் இல்லாமல் உங்களைப் பார்க்க பாவமா இருக்காடா. சயனைட்டைக் கூட கழட்டிவிச்சுப் போட்டாங்கள்" அவனது எக்கால வார்த்தைகளைப் புரிந்து கொள்வது சிரமமாக இருக்கவில்லை. அவனது காதுகளிற்குள் குனிந்து "வாயைப் பொத்து" என்றேன். பிறகு "வன்னிப் பக்கம் ஒருக்கா வந்து பார்" என்று அழைத்தேன். அவன் அதைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

வன்னிக்கு இவர்களால் வர முடியாது. ஒப்பந்தத்தில் அப்படியெதுவும் சொல்லப் படவில்லையென்றாலும், இவர்களால் அங்கு கால் பதிக்க முடியாது. பரந்தன் சந்தியில் புலனாய்வுப் போராளிகளின் பார்வையைத் தாண்டி எந்தவொரு தாடிக்காரனும் நகர முடியாது.

புலனாய்வுக்காரர்கள் சந்தேகப்படுகிற வாகனங்களை மறித்து தாடிக்காரர் எவரேனும் இருக்கிறார்களா என்று சோதனை யிட்டார்கள். அப்படியொரு சோதனையில் தாடிக்காரனொருவன் சிக்கிக் கொண்டான். விசாரணையின் முதற்கேள்வி "என்னத் துக்கு தாடி வளத்திருக்கிறியள்..."

அவன் தலையைக் குனிந்து கொண்டான். அமைதியாக இருந்தான்.

"கேக்கிறமெல்லே, சொல்லும், என்னத் துக்கு தாடி வைச்சிருக்கிறீர்?" இவர்கள் இறுக்கினார்கள்.

அவனது தொடர்ந்த நீண்ட மௌனத்தை இவர்கள் ஈ.பி.டி.பி என்று மொழி பெயர்த்தார்கள். பிறகு அவனை இறக்கினார்கள். வாகனத்திலிருந்து இறங்கித் தள்ளி நின்று கொண்டான் அவன்.

"உமக்கு அவ்வளவு துணிவோ... ஆரைச் சுழிச்சுப் போட்டு போகலாம் எண்டு பார்க்கிறீர்... அவரும் அவற்றை தாடியும்..."

அவன் சட்டென்று போராளியொருவனின் கையை தன் இரண்டு கைகளாலும் பற்றி பிடித்தபடி "லவ் பெயிலியர் அண்ணை" என்றான். போராளிகள் கண்களை விரித்து அவனைத் திரும்பிப் பார்த்தார்கள். அப்பொழுதே அவர்களிடத்தில் சிரிப்புத் தோன்றியிருந்தது.

"மூன்று வருஷக் காதல், தகப்பனுக்குப் பிடிக்கேல்லை. பெரிய பிரச்சினையாகி, கடைசியா அவள் என்னை வேண்டாம் எண்டுட்டாள்"

புலனாய்வுப் போராளிகளுக்கு ஒரு மாதிரியாகப் போனது,"இதை வாகனத்துக்குள்ளேயே சொல்லியிருக்கலாம் தானே.."என்றார்கள் அவர்கள்.

"வாகனத்துக்குள்ளை அவளும் அவளின்ரை அப்பாவும் இருக்கினம். அவளைக் கொழும்புக்குக் கூட்டிக் கொண்டு போகினம். அண்ணை நான் இதைக் காவல் துறையிட்ட முறை யிட்டால் அவையள் எங்களுக்குக் கல்யாணம் கட்டித் தருவினமோ..."

சென்ற தடவை கிளிநொச்சிக்குப் போனபோது, இந்தக் கதையைச் சொல்லி சிரிசிரியென்று சிரித்தார்கள். அம்மானின் காதுவரை இந்தக் கதை போயிருந்தாம்.

"பெட்டையளின்ரை பெல்ட்டையும் கழட்டச் சொல்லி ஓடராம். உண்மையோ" என்றான்.

"அப்பிடியெல்லாம் கொண்டிஷன் போடமுடியாது"

"ஏன், கழட்டினால் மோட்டார் சைக்கிள் ஓடேக்கை சேட்டு மேலே பறந்து எல்லாம் தெரிஞ்சு போடுமன்றோ..."

இதற்குப் பிறகு பண்டாரவன்னியன் மூக்கைப் பொத்தி "ஐயோ, என்ரை அம்மா" என்று குளறிய போது இரண்டு விடயங்கள் நடந்தேறின. ஒன்று அவனது மூக்கிலிருந்து கொள கொள என்று இரத்தம் வழிந்து சேட்டில் பரவியது. மற்றையது புலிகளின் போர் நிறுத்த மீறல்களில் ஒன்று அதிகரித்தது.

(வலிகள் இன்னும்...)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானில் ஏறி புலிகள் தொடுத்த போர்



■ தமிழரசன்



உலக வரலாற்றில் விடுதலைப் போராட்டத்துக்குப் புதிய அத்தியாயம் எழுதியவர்கள் விடுதலைப் புலிகள். தனி நாடாக சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட நாடுகளில் சிலவே நிலையான இராணுவம் இல்லாது பாதுகாப்புக்கு அண்டை நாடுகளை நம்பியுள்ளன. மேலும், சில நாடுகள் முப்படை கட்டுமானத்தை ஏற்படுத்த தடுமாறிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான நிலையில் போராட்ட அமைப்பாக முகிழ்த்து, முப்படை கட்டுமானத்துடன் தனி நாடாகப் பரிணமிப்பதற்கு தேவையான அனைத்துப் படிநிலைகளையும் விடுதலைப் புலிகள் கொண்டிருந்தனர் என்பது அசாத்தியமான சாதனையே.

புலிகளின் ஒவ்வொரு கட்டுமானமும் வியத்தற்குரியது. இன்றும்கூட உலக நாடுகளின் இராணுவங்கள் விடுதலைப் புலிகளின் போரியல் உத்திகளையும் அவர்களின் படைக்கட்டுமானத்தையும் இன்னமும் நுணுக்கமாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றன. சீரற்ற நிர்வாகத்தால் பல நாடுகளில் ஆட்சி கவிழவும், அரசுகள் தடுமாறிக் கொண்டுமிருக்க, சீரான நிழல் அரசு ஒன்றைப் புலிகள் இலங்கைக்குள் நடத்திக் கொண்டிருந்தனர். இதற்கெல்லாம் காரணம் தலைவர் வே.பிரபாகரனின் தூரதரிசனமே.

## முப்படைக்கான அத்திபாரம்

விடுதலைப் புலிகள் அமைப்பு கருக்கட்டிய சமயத்திலேயே தலைவர் பிரபாகரனின் எண்ணத்தில் முப்படைக் கட்டுமானமும் தனி நாட்டுக்கான ஆட்சி பரிபாலனமும் தோன்றி விட்டன. விடுதலைப் புலிகள் மரபுவழி இராணுவமாகத் தோற்றம் பெற முன்னரே, கடற்படைக் கட்டமைப்பான 1984 இல் கடற்புறா தோற்றம் பெற்றது. பின்னாளில் கடற்புலிகள் எனப் பெயர் மாற்றம் பெற்று, பெரு வளர்ச்சி பெற்றது. கடற்புலிகளின் உருவாக்கத்திலும் முக்கிய பங்காற்றியவர் கேணல் சங்கர். இவர் இந்தியாவில் விமானப் பொறியியல் படித்தவர். அத்துடன் கனடாவிலும் விமானங்கள் தொடர்பிலான கற்கைகளைப் பயின்றவர்.

தளபதி சூசையின் தலைமையில் கடற்புலிகள் அதீத வளர்ச்சி பெறத் தொடங்கியது. தலைவர் பிரபாகரனின் சிந்தனையில் உதித்த விமானப் படைக் கட்டுமானத்துக்கு உயிர் கொடுக்கப் புலிகள் ஆரம்பித்தனர். 1985 ஆம் ஆண்டின் இறுதியில் கல்லுண்டாய்வெளிப் பகுதியில் உள்ளூர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட விமானத்தை வைத்து பறக்க முற்பட்டனர். ஆனால் அது தோல்வியிலேயே முடிந்தது. எனினும் புலிகளின் முயற்சிகள் தொடர்ந்தன. 1994 ஆம் ஆண்டு ஹெலிகொப்டர் கட்டும் முயற்சியை யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தனர். இடப்பெயர்வுடன் அதுவும் தடைப்பட்டுப் போனது.

## பூ தூவிய விமானங்கள்

வன்னிக்கு நகர்ந்த புலிகள் இக்கட்டான நிலையிலும் விமானக் கட்டுமானத்தைக் கைவிடவில்லை. 1998 நவம்பர் 27 மாவீரர் நாளன்று முள்ளியவளை துயிலும் இல்லத்தில் புலிகளின் விமானம் பூ தூவியதாக மக்களிடையே பேச்சுக்கள் எழுந்தன. தொடர்ந்து தலைவர் பிரபாகரனின் அன்றைய தின உரையும் விமானப் படையின் இருப்பை பறைசாற்றியது. 2000 ஆம் ஆண்டு புலிகள் "வான்புலிகள்" ஆண்டாக அறிவிக்கவே, புலிகளின் வான்படை அமைக்கப்பட்டு விட்டது என்பது உறுதியானது. தலைவர் பிரபாகரனால் வான் படைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட கேணல் சங்கர் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையின் தாக்குதலில் 2001 செப்ரெம்பர் 26 அன்று உயிரிழந்தார். வான் புலிகளின் முதல் தளபதியாக செயற்பட்டவர் அவரே. 2005 ஆம் ஆண்டு இலங்கை அரசின் கண்காணிப்பு விமானங்கள் இரணைமடுவில் ஓடுபாதை இருப்பதை உறுதிப்படுத்தின. இதையடுத்து அரசாங்கம் விமான எதிர்ப்பு ஆயுதங்களை வாங்குவதற்கான முயற்சிகளை எடுத்தது.

## விமானங்களின் முதல் தாக்குதல்

2002 இல் ஏற்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்தம் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான பின்னர் முடிவுக்கு வந்தது. யுத்தம் தொடங்கியதைத் தொடர்ந்து வான் புலிகள் மேலெழுந்தனர். 2007 மார்ச் 26 ஆம் நாள் 12.45 மணி தமிழர்களின் மகிழ்ச்சி வானை எட்டியது. வானிலேறிய வான் புலிகள் கட்டுநாயக்க விமான நிலையம் நோக்கிப் பறந்தனர். பறந்த புலிகள் 4 குண்டுகளை வீசினர். அவற்றில் 3 குண்டுகள் இலக்கைத் தாக்கின. ஆனாலும் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. புலிகளிடம் விமானங்கள் இருக்கின்றன என்ற நினைப்பால் இராணுவத்தினதும் தென்னிலங்கையினதும் நிம்மதியும் நித்திரையும் குழம்பிப்போனது. வெடிக்காத குண்டை மீட்ட இராணுவத்தின் பொறியியல் பிரிவோ அதிர்ந்து போனது. காரணம் புலிகள் வீசிய குண்டு உள்ளூரில் தயாரிக்கப்பட்டது என்பதே. புலிகள் வீசிய குண்டுகள் மட்டும் உள்ளூர் தயாரிப்பல்ல. விமானத்தின் வடிவமைப்பிலும் பல உள்ளூர் தொழில்நுட்பமே பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற உலகுக்கே அதிர்ச்சி கொடுத்த விடயம் பின்னாளிலேயே தெரியவந்தது.



## கைகொடுக்காத அதிர்ஷ்டம்

புலிகளின் விமானங்கள் முதல் தாக்குதலை வெற்றிகரமாக தாக்கி விட்டு இருப்பிடத்துக்கு திரும்பிய போதும் புலிகளுக்கு அன்று அதிர்ஷ்டம் கைகொடுக்கவில்லை என்றே கூறப்பட்டது. பின்னாளில் "கோட்டாவின் போர்" நூலில் இந்த விடயம் கூறப்பட்டிருக்கிறது. அதில் கோட்டாபய, மாவிலாறுக்கு பின்னர் புலிகளிடம் இருந்து அதிர்ஷ்டம் சென்று விட்டது. முதல் விமானத் தாக்குதலில் புலிகளுக்கு அதிர்ஷ்டம் அடித்திருந்தால் அது இன்னொரு போர் நிறுத்தத்துக்கு வழிசமைத்திருக்கலாம் என்று சாரப்பட கூறியிருந்தார். இதற்கான காரணம் அந்த நூலில் கூறப்படாத போதிலும், அரசாங்கம் பெருந்தொகையாக வாங்கிய ஆயுதங்கள் விமானப் படைத் தளத்தின் களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததாகவும் அவை அழிக்கப்பட்டிருந்தால் அந்த வெடிப்பினால் ஏற்பட்டிருக்கக்கூடிய சேதங்களால் இலங்கை அரசால் போரைத் தொடர்ந்து நடத்த முடியாது போயிருக்கும் என்றும் உறுதிப்படுத்தாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

இறுதிப் போர் நடவடிக்கையில் புலிகள் தோல்வியைத் தழுவினாலும், போரியல் உலகிலும், விடுதலைப் போர் வரலாற்றிலும் அவர்கள் ஏற்படுத்திய தாக்கத்தை எவரும் செய்து விடமுடியாது. புலிகளின் விமானங்கள் வானிலேறிய சமயத்தில் தமிழர்கள் மகிழ்ந்திருந்த தருணத்தை தேசக் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிதை வெளிப்படையாக உணர்த்தி நிற்கிறது.

"ஈழத்தமிழன் இறக்கை கட்டி
முகிலினுக்குள்

வாழத்தொடங்கிய வரலாற்று
நாளிதுதான்.

உலகத் திசையாவும் உதைபட்டு
அகதியென

நிலத்திற் புல்லாகி நின்ற
தமிழினத்தோன்

வானத்தில் ஏறி

வரிசையெனப் பெருமகிழ்வில்

கானத்தைப் பாடிக் களித்தான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

## 1 அதிர்ச்சி கொடுத்த இளையராஜா



சமூக வலைத் தளங்களை மட்டுமல்ல, இணைய உலகத்தையே சூடுபடுத்தியிருக்கும் விடயம் இளையராஜா எஸ்.பி.பாலசுப்பிரமணியம் விவகாரம்தான்.

எஸ்.பி.பி. திரை இசை உலகில் பிரவேசித்து 50 ஆண்டுகள் நிறைவடைகிறது. இதையொட்டி அவர், உலகம் முழுவதும் தனது குழுவினருடன் பயணித்து கச்சேரி செய்து வருகிறார். இந்நிலையில் தனது இசையமைப்பில் உருவான பாடல்களை தன்னுடைய அனுமதியின்றிப் பாடக்கூடாது என நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார் இளையராஜா.

இளையராஜாவின் இந்த திடீர் செயல் எஸ்.பி.பிக்கு மட்டுமல்ல, இசை விரும்பிகள் அனைவருக்குமே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இளையராஜாவின் சகோதரர் கங்கை அமரனும் இந்தச் செயலுக்கு கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

இளையராஜாவின் செயலுக்கு இதுவரை காரணம் தெரியாத நிலையில் அவரின் நோக்கம் இதுதான் என்பதாகப் பலரும் கருத்துத் தெரிவித்து அவரை விமர்சித்து வருகிறார்கள்.

இளையராஜா இசையமைத்தாலும், இசையை பிறப்பிப்பது என்னவோ காற்றுத்தானே. அப்போ...! காற்று என் அனுமதி இன்றி இசையமைக்காதே என்று கேட்டால் ராஜா ஐயா என்ன செய்வார்...?

## 2 விக்னேஸ்வரன் எதிர்ப்பு–ஆதரவு

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அடிக்கடி சர்ச்சையில் சிக்கிக் கொள்வது வழக்கமாகி விட்டது அல்லது சமூகவலைத் தளக்காரர்கள் அவரை "வைச்சு செஞ்சிடுறாங்க".

அந்த வகையில் இந்த வாரமும் சமூகவலைத் தளக்காரரிடம் சிக்கியிருக்கிறார் முதலமைச்சர் விக்னேஸ்வரன். காணாமல் போகச் செய்யப்பட்டோரின் உறவுகளை அண்மையில் சந்தித்திருந்தார். அப்போது அவர்கள் முதலமைச்சரின் காலடியில் அமர்ந்து தங்கள் உறவுகளை மீட்டுத் தருமாறு கேட்டு அழுதுள்ளனர்.

திடீரென நடந்த இந்த விவகாரத்தை எடுத்து வைச்சு செஞ்சிருக்கிறார்கள் சமூகவலைத் தளக்காரர்கள். கதிரை கொடுக்கக்கூட முடியாதவர் என்பதாக சிலர் பதிவுகளை போட, வழமை போல முதல்வருக்கு ஆதரவானோரும் எதிர்ப்புக்காரரைப் பதிலுக்குப் பதில் போட்டு புரட்டி எடுத்து வருகிறார்கள்.

சண்டை பிடிப்பது முதல்வருக்கு எதிரானோரும் ஆதரவாளரும்தான். ஆனால், சட்டை கிழிவது என்னவோ முதலமைச்சருக்குத்தான்.



## 3 தேவதையின் பிரிவு



நாடு முழுவதும் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருகிறது. டெங்கு நோய் தாக்கத்தால் திருகோணமலையை சேர்ந்த உதயராஜன் அஞ்சனா (வயது-6) என்ற சிறுமி உயிரிழந்தார்.

படிப்பில் மிகவும் சுட்டியான அந்தக் குட்டி தேவதையின் மரணம் பலரை சோகத்தில் ஆழ்த்தி விட்டது. மரணமான சிறுமியின் படங்களும் டெங்கு விழிப்புணர்வு சார்ந்த செய்திகளுமாகப் பலரும் சமூகவலைத் தளங்களில் விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இந்த விழிப்புணர்வு மூலமாகவேனும் பல தேவதைகளின் உயிர்களைக் காப்பாற்றட்டும்.




## சுவரில் கொய்தலை

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அரசியல் தீர்வைவிட அரிசியின் விலையை நினைத்தாலே வாழ்க்கை வெறுக்கிறது.




## இன்றைய வானிலை



## இந்தவார மீம் (Meme)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## நோய் நிலை எதிர்வுகூறல்

வழக்கமாக வானிலை தொடர்பான அறிவிப்புகளில் "இன்னும் இரண்டு வாரங்களுக்கு மழை நீடிக்கும்" என்றோ, "வறட்சியான காலநிலை அடுத்த மாதம் வரை நிலவும்" என்றோ எதிர்வு கூறுவார்கள். இப்போது என்னடாவென்றால் "இன்னும் ஆறு மாதத்துக்கு டெங்கு காய்ச்சல் பரவல் நீடிக்கும்" என்று நோய்நிலை எதிர்வு கூறல்களைச் சொல்லத் தொடங்கிவிட்டார்கள்.


அந்தளவுதூரம் உடனடியாகத் தீர்வு காணமுடியாத பிரச்சினையாக டெங்குநோய் மற்றும் வைரஸ் காய்ச்சல்களின் தீவிரம் அதிகரித்தபடியே உள்ளது. கடந்த வாரத்தில் மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் இரு சிறுமிகளை டெங்கு பலியெடுத்து தன் உக்கிரத்தை ஒரு காட்டு காட்டியிருக்கிறது. இன்னும் நூற்றுக் கணக்கானோர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். வைத்தியசாலைக் கட்டடங்கள் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் பிதுங்கி வழிகின்றன. யாழ். போதனா வைத்தியசாலையில் டெங்கு, வைரஸ் காய்ச்சல் தொற்று அபாயம் ஏற்பட்டதையடுத்து, "நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் இயன்றளவு தமது வருகையைக் கட்டுப்படுத்தி நோய்த்தொற்றில் இருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும்" என்று பணிப்பாளரே சொல்லுமளவுக்கு நிலைமை கட்டு மீறிப் போய்க்கொண்டிருக்கிறது.

டெங்கு, வைரஸ் காய்ச்சல்களின் தாக்கம் எப்போதாவது ஏற்படும் என்கிற நிலைமை மாறி எப்போதும் ஏற்படலாம் என்னுமளவுக்கு வந்துவிட்டது. இதற்கு மிக முக்கிய காரணம், நமது சூழல் பராமரிப்புத்தான். டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருகும் சூழலை தொடர்ச்சியாக நம்மிடையே தக்கவைத்து வருவதன் விளைவே நீடித்து நிலைக்கும் அதன் இருப்புக்கு காரணமாகவுள்ளது.

ஒரு பகுதியில் ஒருவருக்கு டெங்கு வந்துவிட்டால், உடனடியாக அந்தப்பகுதிக்கு சுகாதாரத் திணைக்களத் தைச் சேர்ந்தவர்கள் வந்து, புகை அடித்து, டெங்கு நுளம்புகளின் நிலைகளை அழித்து விட்டு செல்வார்கள். ஆனால் அந்தப் புகையின் வீரியம் குறைந்தவுடன், மீண்டும் அங்குள்ள தமக்குச் சாதகமான இடங்களில் புதிதாக ஊடுருவும் நுளம்புகள் நிலையெடுத்து, தருணம் வரும்போது தாக்குதலை ஆரம்பித்து நம்மை நிலை குலையச் செய்துவிடுகின்றன.

சுகாதாரத் திணைக்களத்தினரும் அல்லும் பகலும் ஒவ்வொரு அங்குலமாக கண்காணித்தபடி இருப்பது சாத்தியமற்றது. எனவே நம்முடைய சூழலை நாம் தான் சரியானபடி பராமரிக்க வேண்டும். சூழலின் சிதைவால் பாதிப்படையப் போவது சுகாதாரத் திணைக்களமல்ல, நாம் தான்என்ற எண்ணம் எல்லோரிடத்தும் வரவேண்டும். "எங்கட வீட்டுக் காணி துப்புரவாகத் தானே இருக்கு. பக்கத்து வீட்டுக்காணி பத்தையாக் கிடக்கிறதுக்கு நாங்கள் என்ன செய்யிறது?" என்ற அங்கலாய்ப்பை பொதுவாகக் கேட்க முடிகின்றது. எனவே வீட்டுக் காணியை மாத்திரமல்லாது, எங்களுக்குச் சொந்தமான எல்லாக் காணிகளையும் சுத்தம் செய்வது நமக்கும், அயலவர்களுக்கும் டெங்கு முதலான தாக்கங்களில் இருந்து தப்ப உதவும். நம்மைப் போலவே அயலவரையும் நேசித்து, சூழலை தூய்மையாகப் பேணுவோம். டெங்கு முதலான நோய்களை ஆறு மாதத்துக்கு முன்னரே விரட்டியடிப்போம்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



# ஆசைகாட்டி மோசம் செய்தல்

வர்சி

கௌரவிப்பு என்பது பல்வேறு வகைப்படும்.மாணவர்கள் ஒரு விளையாட்டில் சாதித்தாலோ அல்லது கல்வியில் சாதித்தாலோ அவர்கள் பாடசாலைச் சமூகம் மற்றும் வெளி நிறுவனங்களின் அனுசரணையுடன் கௌரவிக்கப்படுவர். அதேபோன்று பல்கலைக் கழகத்திலோ வேறு அரச நிறுவனங்களிலோ, தனிநபர் ரீதியாகவோ எவர் சாதனை படைத்தாலும் கௌரவிக்கப்படுவர். இவ்வாறு கௌரவிக்கப்படுவதன் மூலம் அவர்கள் பெருமைப்படுத்தப்படுவதை விடவும் இப்படியான சாதிப்புக்களை தாமும் செய்து இப்படியான கௌரவங்களை அடைய வேண்டும் என்ற வேட்கை அடுத்த தலைமுறையிடம் விதைக்கப்படும்.

ஆனால், கௌரவிப்பு என்ற பெயரில் சில அனுசரணை வழங்கும் தனியார் நிறுவனங்கள் கௌரவிப்பாளர்களிடம் தமது வியாபாரத் தந்திரத்தைக் காட்டி மோசம் செய்வதுதான் அருவருக்கத்தக்கதாக உள்ளது. அதிலும் குறிப்பாக சிறுவர்களுக்கு ஆசையை வளர்த்து அவர்களுக்கு சம்பந்தமே இல்லாத வகையில் வியாபார உத்தி என்ற பெயரில் வியாபாரத்தை வளர்ப்பது வேதனையிலும் வேதனை.

யாழ்ப்பாணத்தில் தற்போது பல்வேறு நிறுவனங்கள் லீசிங் என்ற பெயரில், தமது கடைகளை விரித்து மக்களுக்கு ஆசை வார்த்தை காட்டி தமது வலையில் வீழ்த்துகின்றன. அவர்களின் ஆசை வார்த்தையில் மயங்கி மக்களும் பொருள்களை கொள்வனவு செய்கின்றனர். ஆனால் குறித்த பொருள்களின் சந்தைப் பெறுமதியை விடவும், அவர்கள் செலுத்தும் பணத்தொகை என்பது அதிகம் என்பது அவர்களுக்கு காலம் தாழ்த்தியே தெரிய வரும்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் இடம் பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வுக்கு அனுசரணை வழங்கியது இவ்வாறு லீசிங் வழங்கும் ஒரு இலத்திரனியல் நிறுவனமே! மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து சான்றிதழும் வழங்கப்பட்டது. இறுதியில் அவர்களுக்கு 12 ஆயிரம் ரூபா பெறுமதியான வவுச்சர் ஒன்று வழங்கப்பட்டது. இதற்குப் பெறுமதியான பொருள்களை குறித்த லீசிங் நிறுவன வியாபார நிலையத்தில் அன்றைக்கே பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது.

பொருள்களை வாங்கிக்கொண்டு சந்தோஷமாக வீடு செல்லலாம் என சின்னஞ்சிறுசுகள் பதக்கம் பெற்ற மகிழ்ச்சியைவிட தமது பெற்றோருடன் குறித்த கடையை நோக்கி ஓடினார்கள். ஆனால் அங்கேதான் காத்திருந்தது அவர்களுக்கு ஏமாற்றம். "வவுச்சரில் 12 ஆயிரம் ரூபாவுக்கு பொருள் வாங்கலாம் என்று போடப்பட்டிருந்தாலும், சில நிபந்தனைகள் இருக்கு. அந்த வவுச்சருக்கு ரூபா 80 ஆயிரம் பெறுமதியான மடிக்கணனி வாங்கினால், மடிக் கணினியின் பெறுமதியில் இருந்து 12 ஆயிரம் கழிப்போம். மிகுதித் தொகையை 3 தவணைகளில் கட்ட வேண்டும்" என்றார்கள். ஆக மொத்தம் கையில் காசில்லாத ஏழை மாணவர்கள் 72 ஆயிரம் ரூபா செலுத்தினால் மட்டுமே, 80 ஆயிரம் ரூபா பெறுமதியான மடிக்கணினியைக் கொடுப்பார் கள். அப்படி மடிக்கணினி வாங்காவிட்டால் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான வவுச்சர் வெறும் காகிதக் குப்பைதான். இந்த நிபந்தனைகளைக் கேட்ட மாணவருக்கும் இடிவிழுந்தது.பெற்றோருக்கும் இடிவிழுந்தது.

"சரி எமக்கு மடிக்கணினி வேண்டாம். ரூபா 12 ஆயிரம் பெறுமதியான வேறு பொருள்கள் தாருங்கள்" என பெற்றோர் கேட்டபொழுது "அப்படி தருவதற்கு எமக்கு அனுமதியில்லை" என்று பதில் வந்தது. வேண்டினால் மடிக் கணினி தான் வாங்க வேண்டும். இல்லையென்றால் செல்லுங்கள் என்ற மாதிரி இருந்தது அவர்களின் பதில். இந்தநிலையில் கடையின் முகாமையாளர் வந்தார். அவருக்கும் பெற்றோருக்கும் தர்க்கம் தொடங்கியது.

"நீங்கள் மண்டபத்தில் வவுச்சரை தரும் போதே இப்படி மடிக்கணினி வாங்கினால் மட்டுமே 12 ஆயிரம் ரூபா தள்ளுபடி என்று சொல்லியிருக்க வேண்டும். இப்படி பிள்ளைகளின் மனதில் ஆசையை வளர்த்து மோசம் செய்துவிட்டீர்களே" என்றார்கள். அதற்கு முகாமையாளர், "நாம் அனுசரணை வழங்கியதை நீங்கள் பாராட்ட வேண்டுமே தவிர இப்படி குறை சொல்லக்கூடாது" - என்றார்.

எப்படியிருக்கிறது அனுசரணை வழங்கிய அந்த லீசிங் நிறுவனத்தின் விளம்பரம். ஆயிரம் பேருக்கு மேல் கூடியிருந்த இடத்தில், வவுச்சரை பகட்டாக கொடுத்து விளம்பரம் தேடியுள்ளது அந்த நிறுவனம். அப்படியென்றால் அந்த நிறுவனத்தை அனுசரணைக்கு அழைத்த விழா ஏற்பாட்டாளர்கள் அவர்களின் இந்த ஏமாற்றுவித்தை தொடர்பாக அறியாமல் இருந்தார்களா?

பாவம் மாணவர்கள். ஏமாந்தது அவர்கள் தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கை மரபுரிமையும் ஊர்காவற்றுறையும்

யதார்த்தன்

இந்திய உபகண்டத்துக்கு கீழாக கடல் மார்க்கமாக தென்னாசியாவின் எல்லைகளுக்குள் நுழையும் முன் எதிர்ப்படக்கூடிய இலங்கைத்தீவின் புவியியல் கேந்திர அமைவென்பதே, வரலாற்றுக்காலம் தொட்டு இன்று வரை இலங்கையை உலகவரலாற்றின் பெரும் நீரோட்டத்தில் செல்வாக்கு மிக்க தேசமாக வைத்துக்கொண்டுள்ளது. அதிலும் இந்திய உபகண்டத்தின் மிக அருகில் கடலில் முகப்பாக நீண்டு கிடக்கும் வடபகுதியின் அமைவிடம் இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு வாழ்நிலைகளின் மீது தாக்கம் செலுத்தும் ஒன்றாக இருந்துள்ளது. வடக்கில் குடாநாடு கொண்டிருக்கும் புவியியல் கேந்திர நிலைமைகளே வடக்கு நிலத்தின் செல்வாக்கு மிக்க நிலமாக யாழ்ப்பாணத்தை மாற்றியது.

ஆட்சி இயல் எல்லைகளின் அடிப் படையில் இயற்கை நிலைமை சார்ந்து யாழ்ப்பாணம் நான்கு பெரும் பிரிவுகளைக் கொண்டது. அவை முறையே: வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் தீவகம் என்பவையாகும். நிலத் தொடர்ச்சியல் பேணப்படும் ஏனைய மூன்று வலயங்களை விட நீர் நிலைமை களால் பிரிக்கப்படும் தீவுத்தொகுதி பிறிதானதொரு அரசியல், பொருளாதார, சமூக நிலைப்பண்பாட்டு நிகழ்தலை கொண்டிருக்கின்றது.

தற்போதைய இலங்கையின் தேசிய எல்லைக்குள் இருக்கும், பண்டைய இலங்கையின் சுதேச தமிழ்க்குடிகளின் அல்லது தமிழ் பேசும் மக்களின் வேர்க் குடிகளின் நிலங்களாகவும் இருந்தவை என பெருங்கற்கால பண்பாட்டிலிருந்து வரலாற்று ஆய்வாளர்கள் தகவல்களைத் தரும் யாழ்ப்பாணத்தின் தீவுக்கூட்டங்கள் புவியல் ரீதியான தெளிவான எல்லை களையும் அதற்கேற்றால் போன்ற மக்கள் வாழ்வு முறைகளையும் கொண்டவை. யாழ்ப்பாண குடாநிலத்தின் தலைப் பகுதியில் இருக்கும் இத்தீவுக்கூட்டங்கள் சப்த தீவுகள் என்று அழைப்பர். மொத்தமாக எழு தீவு நிலங்கள் இங்கே காணப்படுவதால் அவ்வாறான மொழிதலை அவை பெற்றுக்கொண்டன. அவை முறையே

1. **வேலணை (லைடன் தீவு)**
2. **நெடுந்தீவு**
3. **புங்குடுதீவு**
4. **நயினாதீவு**
5. **அனலைதீவு**
6. **எழுவை தீவு**
7. **காரைதீவு (காரைநகர்)**

என்பவற்றோடு இப்போது இலங்கை சோஷலிஸக் குடியரசின் எல்லை உரிமைக்குள் கச்சதீவும் காணப்படுகின்றது. எனினும் அரசியல் சிக்கல்களுடன் தமிழ் நாட்டுடன் சமயரீதியானதும், கடற்றொழில் ரீதியானதுமான பண்பாட்டு பகிர்வை கச்சதீவு பகிர்ந்துகொள்கின்றது.

யாழ்ப்பாணக்குடாவின் ஏழுதீவுகளில் பெரியதும் கேந்திர முக்கியம் வாய்ந்ததும் வரலாற்றுக்காலத்தில் ஏனைய தீவுக் கூட்டங்களை விட கேந்திர நிலைமை, பொருளாதார நிலைமை என்பவற்றால் அதிக முக்கியம் பெற்றதுமான தீவாக லைடன் தீவு என்று காலனிய காலத்தின் பின் அழைக்கப்படும் வேலணையினதும் அதன் மைய நகரமுமான ஊர்காவற்றுறை யினதும் புவியியல் நிலைமைகளை இயற்கை மரபுரிமை தளத்தில் விளங்கிக் கொள்வதை இக்கட்டுரை நோக்கமாகக் கொள்கின்றது.

தீவகத்தில் உள்ள தீவுகள் யாவும் கடலால் சூழப்பட்டவை. எனினும் வேலணை (லைடன்), புங்குடுதீவு, மண்டைதீவு, காரைநகர் என்பன யாழ்ப்பாணக்குடா நிலத்துடன் பாலங் களைக் கொண்ட வீதி நிலங்களால் இணைக்கப்பட்டுள்ளன. ஏனைய தீவுகள் கடற் போக்குவரத்தின் ஊடாக தொடர்புகளைப் பேணுகின்றன.

வெகுகாலமாக தீவுப்பகுதி மக்கள் யாழ். குடாவுக்கு செல்ல ஆழம் குறைவான கடல் நீர்ப்பரப்பான அராலிப் பகுதியைப் பயன்படுத்தினர். மண்டைதீவு, அல்லைப் பிட்டி வாசிகள் யாழ்ப்பாணாக்கடல் நீரேரியைப் பயன்படுத்தி போக்குவரத்தை மேற்கொண்டனர். புங்குடுதீவையும் வேலணையையும் இணைக்கும் வாணர் பாலம் 1953 இல் அமைக்கப்பட்டதன் விளைவாக இவ்விருதீவுகளுக்கும் இடையில் தரைப்போக்குவரத்து ஏற்பட்டது. அதனைப்போல 1956 இல் பண்ணைப்பாலம் அமைக்கப்பட்டு லைடன் தீவுவரை பயணிக்கக் கூடிய வீதி உருவானது.

தீவுப்பகுதியில் பெரியதான வேலணை 68.0 சதுரகிலோமீற்றர் (அரச எல்லைப் படுத்தலின் படி 64.5 சதுர கிலோ மீற்றர்) பரப்பைக்கொண்டு காணப்படுகின்றது. இத்தீவில் கிழக்கில் இருந்து மேற்காக அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணைகிழக்கு, வேலணை மேற்கு, புளியங்கூடல். சரவணை, நாரந்தனை, சுருவில், கரம்பன், ஊர்காவற்றுறை ஆகிய பெரிய கிராமங்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஊர்காவற்றுறை கடல்புகப் புத்தளத்தை உடைய துறைமுகப்பட்டி னமாக இருந்தது. அதாவது லைடன் தீவின் மத்திய கேந்திர இடமாக ஊர்காவற்றுறை காணப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடா நாட்டின் பெரு நிலத்தைப்போலவே தீவுக்கூட்டமும் மயோசின் காலத்தில் கடலில் இருந்து சுண்ணாம்புக் கற்பாறைத்திடலாக மேலெழுந்தவை. அதனால் குடாநாடு, தீவகம் இரண்டின் தாய்ப்பாறைகளும் மயோசின் பாறைகளாகவே இருக்கின்றன.


இத்தீவின் வடக்குப் பிரதேசம் தாழ் வான நிலத்தோற்றத்தை கொண்டுள்ள துடன், தென்பகுதி நோக்கிச்செல்லச் செல்ல நிலத்தோற்றம் உயர்வடைந்து செல்கின்றது. குறிப்பாக அல்லைப்பிட்டி மண்கும்பான்,வேலணை, சரவணை, நாரந்தனை ஆகிய இடங்களில் நிலம் தாழ்ந்து செல்வதால், மாரி காலங்களில் கடல் நீர் உள்வருகின்றது. மேலும், அங்கு பயன்பாட்டில் உள்ள கேணிகள், சிறு குளங்கள், கிணறுகள் பெரும்பாலும் உவர்நீராகியும் தூர்ந்தும் போய் இருக்கின் றன. இவை முன்பு தீவுக்கான நீர் வழங்கல் மூலங்களாக செயற்பட்டு இருக்கின்றன. இன்று லைடன் தீவு யாழ்ப்பாணத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை நிலவும் பிரதேசங்களில் ஒன்றாக காணப்படுகின் றது. அத்துடன் மண்ணரிப்பு, கடல் அரிப்பு போன்ற அச்சுறுத்தல்களும் இங்கே இருக்கின்றன. மேலும், வரலாற்றுக் காலம் தொட்டே இயற்கை நெறிமுறை மாற்றங்களுக்கு ஏற்ப தீவின் புவியுருவில் மாற்றங்களும் ஏற்பட்டு வந்துள்ளன.

தீவுகளின் கடற்பரப்பை பொறுத்த வரை நெடுந்தீவைச்சூழ உள்ள கடற் பரப்பு ஆழம் கூடியதாகவும் ஏனைய தீவுகளில் உள்ள கடற்பரப்பு ஆழம் குறைந்ததாகவும் காணப்படுகின்றது. முருகைக்கற்பாறை வளங்களும், சங்கு, சிற்பி போன்ற வளங்களும் உள்ள கடல் பரப்புகளை தீவுகள் கொண்டுள்ளன.

(18 ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டமைப்பும் புலிகளும் 1

தயாளன்

ஒரு காணியில் பட்ட மரமொன்று இருந்தது. அது ஒருநாள் முறிந்து வீழ்ந்தது. காணிச் சொந்தக்காரன் உடனே அவ்விடத்துக்கு விரைந்தான். முறிந்த மரத்தின் பொந்தொன்றில் இரு கிளிக்குஞ்சுகள் இருப்பதைக் கண்டான். அவற்றைப் பிடித்து ஆசையுடன் வளர்த்து வந்தான். ஒருநாள் அவனது வீட்டுக்கு முனிவர் ஒருவர் வந்தார். அவரை நன்கு உபசரித்த அவன் தனது கிளிக்குஞ்சுகளில் ஒன்றை அவருக்கு அன்பளிப்பாக வழங்கினான்.

சிலநாள்கள் செல்ல ஒரு துஷ்டன் அவனது வீட்டுக்கு வந்தான். அங்கிருந்த மற்ற கிளிக்குஞ்சை எவரிடமும் கேட்காமல் பிடித்தான். காணிச் சொந்தக்காரனின் மனைவி தடுத்தாள். அவளை மிரட்டினான் துஷ்டன் கிளிக்குஞ்சுடன் வெளியே செல்ல முயன்ற துஷ்டனைக் காணிச் சொந்தக்காரன் கண்டான். "நான் ஆசையுடன் வளர்த்த கிளியைத் திருப்பிக் கொடுத்துவிடு" என துஷ்டனிடம் வேண்டினான். "பேசாமல் - போ கிளியைக் கேட்டால் முகத்தை உடைப்பேன்" என துஷ்டன். மிரட்டினான். எனவே அவன் பயந்து துஷ்டனுக்கு வழிவிட்டான்.

சிலகாலம் செல்ல அக்குஞ்சுகளைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அவனுக்கு வந்தது. முனிவரின் தவச்சாலைக்குச் சென்றான். அவன் முனிவருக்கு வழங்கிய கிளிக்குஞ்சு மெல்ல அவன் அருகில் வந்தது . அது நன்றாக வளர்ந்திருப்பதை கண்டு அவன் மனம் மகிழ்ந்தான். "வணக்கம்! வாருங்கள் !!அமருங்கள் !!! பழம்சாப்பிடுங்கள்" என்று உபசரித்தது கிளி. அதைத் தடவிக் கொடுத்து விட்டுத் திருப்தியுடன் விடைபெற்றான் அவன். துஷ்டன் கொண்டு சென்ற கிளியையும் பார்க்க அவனுக்கு ஆசையாக இருந்தது. எனவே அடுத்தநாள் துஷ்டனின் வீட்டுக்குச் சென்றான். அங்கே ஒரு கூட்டுக்குள் அந்தக்கிளி இருந்தது. அவனைக் கண்டதும் கிளி, "அடியடா இவனை, கொல்லடா இந்த நாயை" என்று சத்தமிட்டது. அப்போது துஷ்டன் ஒரு தடியுடன் வந்தான். "கிளியைக் கொண்டு போகவா பார்த்தாய்" என்று கேட்டு அவனது முதுகில் அடித்தான். வேதனையுடன் "இல்லை கிளியைப் பார்க்கத்தான் வந்தேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து அகன்றான் அவன்.

வீட்டுக்குச் சென்ற அவன் தனது மனைவியிடம் நடந்ததைக் கூறினான். அவள் "இரு குஞ்சுகளும் ஒரு தாயிடமிருந்து வந்தவையே. இரண்டின் பழக்கவழக்கங்களும் எதிர்மாறாக இருக்கின்றன. இதற்குக் காரணம் அவற்றின் வளர்ப்பு முறையே. வளர்ப்பு முறையில் கோளாறு இருந்தால் பின்னர் எவ்வளவு முயன்றாலும் அதனைத் திருத்த முடியாது" - என்றாள்.

வளர்ப்புமுறை தொடர்பான விடயம் பத்திரிகையாளர்களிடமும் தெரியும். தமிழ்த் தேசிய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய பத்திரிகையாளர்களிடம் அதை வெளிப்படையாகக் காணமுடியும். ஆனால், அவற்றைக் கொச்சைப்படுத்தும் லேக்ஹவுஸின் "தினகரன்" போன்ற பத்திரிகைகளில் தமது ஊடக அரிச்சுவடியைப் பயின்றவர்களிடம் அதைக் காணமுடியாது. காலத்துக்குக்காலம் ஆட்சியில் அமரும் கட்சிகளின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதே இவர்களின் தலையாய பணியாக இருக்கும். ஆனால் எக்காலத்திலும் தமிழ்த் தேசிய உணர்வைக் கொச்சைப்படுத்துவதை மட்டும் இவர்கள் நிறுத்தமாட்டார்கள். இவர்கள் தமிழினத்தின் வாழ்நாள் சோதனையாளர்கள். இவ்வாறான சோதனையாளர்கள் ஒருவருக்கு வாழ்நாள்சாதனையாளர் விருதை வழங்கிக் கௌரவித்தமை மிகவும் கேலிக்கிடமானது.

1. காட்டிக் கொடுத்தான் மட்டக்களப்பான், கழுத்தறுத்தான் மலையகத்தான்!
2. நாறிக்கிடக்கும் பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறை நகரசபை !
3. நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பி. வெளியேற்றம் பெண்கள் சோகம் ஆண்கள் நிம்மதி. (8.12. 2013 )
4. ஐரோப்பிய நாடுகளில் வாள்வெட்டுகளுடன் ஆரம்பமாயிருக்கும் மாவீரர் வாரம் (26.11.2016)
5. பொட்டன் ஓட்டம் - தமிழ்க் கவி தகவல் (23.01.2014)

இவ்வாறான தலைப்புக்களைப் போட்டவர் லேக்ஹவுஸ் என்ற முட்டையிலிருந்து வெளிவந்த ஒரு ஊடகக்குஞ்சு. இவருக்குத்தான் வாழ்நாள் சாதனையாளர் விருது.

பாலுக்குள் தண்ணீரைக் கலந்தால் அன்னம் தண்ணீரை விட்டுப் பாலை . மட்டுமே உறிஞ்சிக் குடிக்குமாம். அதற்கு நல்லதை மட்டுமே ஏற்கத்தெரியும். பன்னாடையோ, கஞ்சல், குப்பை போன்றவற்றைத் தேக்கிக்கொண்டு நல்லவற்றை வெளியேவிடும். இவர் இரண்டாவது வகை . ஈ.பி.டி.பி. வெளியேற்றம் என்பதுதான் செய்தியென்றால், அப்படியே போடுவதுதானே? பெண்கள் சோகம் ஆண்கள் நிம்மதி எனத் தலைப்பிடுகிறார் என்றால், இவரது மனதில் எவ்வளவு கஞ்சல் எண்ணங்கள் இருக்கின்றன? தீவுப்பகுதிப் பெண்களை ஏன் கொச்சைப்படுத்த வேண்டும்?" எந்தப் பெண் தனக்குச் சோகமாக இருக்கிறது என்று இவருக்குத் தொலைபேசியில் சொன்னார்?" என ஒரு ஊடகவியலாளர் கேள்வியெழுப்பியிருந்தார்.

தமிழகத்திலிருந்து வெளிவரும் சஞ்சிகை ஒன்றுக்குப் பேட்டியளித்த தமிழ்க்கவி "இறுதிப் போரின் போது பொட்டம்மானைத் தான் காணவில்லை" என்று சொல்லியிருந்தார். அதற்காக பொட்டன் ஓட்டம் என்று ஒருமையில் ஏன் கொச்சைப்படுத்த வேண்டும்? உண்மையில் பொட்டம்மானைக் கண்டிருந்தாலும் தமிழ்க்கவி சொல்வாரா? றோ, சி.பி.ஐ. போன்றவையெல்லாம் துளைத்தெடுத்திருப்பார்களல்லவா?

வல்வெட்டித்துறை நகரசபை மட்டுமல்ல காரைதீவு , வலி. கிழக்கு. போன்ற பல உள்ளூராட்சி சபைகளிலும் குத்துவெட்டுக்கள் நடந்தன. "நாறிக்கிடக்கும் பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறை நகரசபை" என்று தலைப்பிட்டால் அவர் மீது இவர் எவ்வளவு வஞ்சகம் வைத்துள்ளார் என்பது புலனாகிறது.

இதற்கெல்லாம் காரணம் கருணா. ஏனெனில் கருணாவின் பிரச்சினைகளுக்குப் பின்பே இந்த மாதிரி லேக்ஹவுஸ் குஞ்சுகள் திடீர்த் தேசியவாதிகள் ஆகினர். இவர்களுக்கெல்லாம் ஒரு குண்டைச் செலவழிக்கக் கருணாவோ, அவருடன் இணைந்து செயற்பட்ட அரச படையினரோ தயாராக இருந்திருக்க மாட்டார்கள். இன்ஸ்டன்ரீ, இன்ஸ்டன் காப்பிபோல, இவர் போன்றவர்கள் இன்ஸ்டன் தேசியவாதிகள் . கருணாவைச் சாட்டிக்கொண்டு வெளிநாடுகளில் அரசியல்தஞ்சம் தேடியவர்கள்தான் தம்மைத் தேசியவாதிகள் என இனங்காட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்துக்குத் தாங்களே அத்திபாரம், நிலை, ஜன்னல் என நிறுவப் படாதபாடுபடுகின்றனர்.

"தராக்கிக்கு நான் கோவை எடுத்துக் கொடுத்தேன், குளிப்பதற்குச் சவர்க்காரம், துவாய் எடுத்துக் கொடுத்தேன். ஆகையால் எனக்கு கூட்டமைப்பு உருவாக்கத்தில் பங்குண்டு என்ற பாணியில் இன்னும் எத்தனை பேர் கிளம்பக்போகிறார்கள்" என்று அஞ்ஞாதவாசன் என்ற பெயரில் ஜெனிவாவில் நடந்த நிகழ்வொன்றின் போது துண்டுப்பிரசுரம் ஒன்று ஏற்கெனவே வெளியிடப்பட்டது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையராஜா செய்தது சரியா?



இசையமைப்பாளர் இளையராஜா, பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்துக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பியதால் புலமைச்சொத்து - காப்புரிமை தொடர்பான உரையாடல் சூடு பிடித்துள்ளது.

இங்கே இளையராஜா - பாலசுப்பிரமணியம் ரசிகர்களின் வாதங்களில் விசிறிச் சண்டைகளைத் தவிர்த்துப் பார்த்தால் இரண்டு விதமான போக்குகளை அவதானிக்க முடியும்.

முதலாவது, சட்ட ஆவணங்களை முன்வைத்து குறித்த செயற்பாட்டை மதிப்பிட முனையும் போக்கு, இவ்விடயம் நீதிமன்றத்தின் ஊடாக தீர்க்கப்பட முடியும் என்று வாதிடுகின்றது. ஒரு பாடல் இசையமைப்பாளருக்கு முழுவதுமாக உரித்ததானதா ? அல்லது பாடலாசிரியருக்கும் உரித்தானதா என்ற அதன் உள்ளார்ந்த நுட்பம் வரை இவ்வுரையாடலை வளர்த்துச் செல்லலாம். இது ஒரு நீண்ட விவாதம். ஒரு படைப்பாக்கத்தில் ஈடுபடும் ஒவ்வொரு கலைஞரும் பாதுகாக்கக் கூடியவாறான ஏற்பாட்டை சட்ட ரீதியாக உருவாக்குவது என்ற எல்லைவரை இது நீடித்துச் செல்லும்.

அடுத்து, காப்புரிமை என்ற விடயத்தின் அறம் சார்ந்த அணுகுமுறை. இந்த அணுகுமுறையை முன்வைத்து பலதரப்பட்டவர்கள் இளையராஜா மீது விமர்சனங்களை முன்வைக்கின்றனர். அதாவது, இளையராஜா என்ற கலைஞர் உருவாக்கிய கலைப்படைப்புகள் அவருடைய மூளையில் இருந்து மட்டும் உதித்தவை அல்ல. அவர் ஏராளமான கிராமிய இசைகளை தொகுத்து / அல்லது அவற்றின் பாதிப்பில் - தொடர்ச்சியிலேயே தன்னுடைய இசை மரபை வளர்த்துக் கொண்டார் என்பது இத்தரப்பின் வாதங்கள்.

காப்புரிமை - புலமைச்சொத்து போன்றவற்றின் தோற்றம் என்னவென்பதையும், அதன் வளர்ச்சி என்னவென்பதையும் புரிந்து கொள்ள முற்படும் போதே இவ்விடயத்தில் தெளிவான பார்வை கிடைக்கும் என்று தோன்றுகின்றது. முதலாளித்துவ பொருளாதார சட்டகத்தில் எதற்கும் விலை உண்டு. எதுவும் இலவசமாகக் கிடைப்பதில்லை. அவ்வகையில் அறிவும் கலையும் கூட அதில் இருந்து தப்ப முடியாது. “அறிவுச் செயற்பாட்டாளரும் கலைஞரும் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் தம்முடைய உருவாக்கத்தில் பங்கு கொள்வதற்கான சுமுகமான சூழல் உருவாக்கப்பட வேண்டும்” என்பதில் மாற்று கருத்து இருக்க முடியாது. ஆம்! அவர்கள் உடை உடுத்தி உணவுண்டு வாழவேண்டும்.

ஆயினும், மேற்கு உலகத்தில் தொழில்நுட்பத்தில் வளர்ச்சியின் பின்னர், காப்புரிமைக்கு எதிரான / காப்புரிமையை தீவிரமாக மீறும் ஒரு தலைமுறை உருவாகியது. ஒருவகையில், முடங்கிப்போயிருந்த அறிவை திறந்து விட முற்பட்ட தலைமுறை என்று கூட சொல்ல முடியும். அவற்றுக்கான அடிப்படைக்கு காரணம், காப்புரிமையும் புலமைச்சொத்தும் எதற்காக உருவாக்கப்பட்டதோ அவற்றுக்காக பயன்படவில்லை என்ற விரக்தி என்று அறுதியாகக் கூற முடியும். புலமையாளரும் கலைஞரும் இதனால் பயன் பெறாமல் ஒரு சில நிறுவனங்கள் இதன் பெரும் பயனை அனுபவித்தமை இந்த இளைஞர்களின் கோபத்துக்கு காரணமாக அமைந்தது. இதனால் சட்டத்தை மீறி தொழில்நுட்பத்தின் உதவியுடன் அவற்றை சகலருக்குமாக பகிரத் தொடங்கினர். இவ்விடயத்தை சட்டம் சாதாரணமாக அனுமதிக்கவில்லை. விளைவு பலர் சிறைகளில் காலத்தை கழிக்க வேண்டியும் தலைமறைவான வாழ்க்கை முறையை தேர்ந்து எடுக்க வேண்டியும் ஏற்பட்டது. ஆரோன் ஸ்வார்ட்ஸ் (Aaron Swartz) என்பவர் தீர்ப்பை எதிர்கொள்ள முடியாமல் தற்கொலை செய்து இறந்தும் போனார்.

அதே நேரம், இவ்விடயம் சார்ந்து இயங்குவதற்கு சில அமைப்புக்கள் தோன்றி இன்றுவரைக்கும் இயங்கி வருகின்றன. அவர்கள் புலமையாளரினதும் கலைஞரினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் அதே நேரம் அறிவுப்பரம்பலை உறுதி செய்வதையும் ஒருங்கே செய்வதற்கான ஏற்பாடுகளை முன்வைக்கின்றன. உதாரணம் படைப்பாக்க உரிமம் (Creative Commons Licence ) என்ற விடயத்திற்கு வருவோம். இளையராஜாவின் பாடல்களை பொதுவெளியில் பாடினால் சட்ட நடவடிக்கை எடுத்து விடுவாரோ என்ற பயம் தேவை இல்லை. பாலசுப்பிரமணியம், இலாப நோக்கற்ற வகையில் பயன்படுத்தியிருப்பின் / பாடியிருந்தால் இளையராஜா அவ்வாறான நடவடிக்கையை எடுத்திருக்கப் போவதில்லை என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது. ஒருவகையில் அவர் எறிந்த கல் குளவிக்கூட்டை கலைத்துள்ளது. அதனுடாக கலைஞர்கள் பாதுகாக்கப்படக் கூடிய சூழல் உருவாகுமெனில் மகிழ்ச்சியே. மறைந்த எழுத்தாளர் முத்துக்குமார் பாடலாசிரியர்கள் பயன்பெறக்கூடியவாறான முயற்சி ஒன்றில் ஈடுபட்டிருந்தார் என்று அறிய முடிகின்றது. அவ்வாறு, கூட்டு உருவாக்கத்தில் ஈடுபட அனைவரும் பயன்பாடாக கூடியவாறாக அமைந்த பொறிமுறை அமையப்பெறுவது அவசியமானது.

- நிலவன்

# மாயாவின் டயரி



எல்லாமே கண்முன்னாலிருக்கும் போதே காணாமல் போகின்றன. காலம் செல்ல செல்ல மாற்றம் என்ற ஒன்றுதான் நிரந்தரம் என்கின்ற உண்மையைப் புரிந்து கொள்கின்றோம். அதற்கிடையில் ஏதேதோ எல்லாம் நிகழ்ந்துவிடுகின்றது. சர்வதேச மகளிர் தினத்தை ஒரு கொண்டாட்ட நிகழ்வாகக் கடந்துவிட்டோம். கடந்த வருடமும் இதையேதான். நிகழ்த்தினோம். அடுத்த வருடமும் இதே கதையே தொடரும்.

அன்று மகளிர்தினம். கடையொன்றில் நின்றுகொண்டிருந்தேன். அந்தநேரம் ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் கடையின் கதவோரம் கையை நீட்டிக்கொண்டே நின்றார். கடைக்காரரும் இருபது ரூபாயொன்றைக் கொடுத்து விரட்டினார். விசாரித்ததில் அவர் கிழமையில் இரண்டு நாட்களாவது இவ்வாறு கையேந்திக்கொண்டு வருகின்றார் என்பதை அறிய முடிந்தது. அவரை விசாரித்தபோது அவரது கணவர் சிறையில் இருப்பதாகவும் பிள்ளைகளை வளர்ப்பதற்காக அவ்வாறு கையேந்துவதாகவும் கூறினார்.

எப்போதும் குடும்ப அலகில் எவர் குற்றம் இயற்றினாலும் தண்டிக்கப்படுவது என்னவோ பெண்ணாகவே இருக்கின்றாள். அதற்கான முக்கிய காரணம் பெண் எப்போதும் சார்ந்து வாழ்கின்ற உயிரியாகவே இருக்கின்றாள். பால்நிலை அடிப்படையிலும், சமூக விதிமுறை அடிப்படையிலும் பெண் எப்போதும் பிறர்சார்ந்த நிலையிலேயே வாழ்க்கை நடாத்த வேண்டியிருக்கின்றது. அவள் தனித்தியங்குவதற்கான வாய்ப்பு வழங்கப்படாமலேயே தட்டிக்கழிக்கப்படுகின்றாள்.

இதற்கிடையில் பால்நிலைச் சமத்துவம் நோக்கிய கருத்தமைவோடு இந்த மகளிர் தினத்தைக் கொண்டாடி முடித்த நாம் அனைவரும் அறியாத பெண்கள் தொடர்பில் உலகில் நிகழ்கின்ற விடயங்கள் பல உள்ளன. உலகில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் தமக்கு மிக நெருக்கமானவர்களாலேயே உடல் ரீதியாகவோ, பாலியல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ வன்மறைக்குள்ளாகின்றனர். பல நாடுகளில் பெண்கள் மீதான குடும்ப வன்முறைக்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் இல்லை. அபிவிருத்தி அடையாத நாடுகள் தொடக்கம் விருத்தியடைந்த நாடுகள் வரை அங்குள்ள பெரும்பாலான பெண்கள் 15 வயது முதல் பாலியல் வன்முறைக்கு உள்ளாகின்றனர்.

உதாரணங்களுக்காக நீண்ட தூரம் போக வேண்டிய தேவை இல்லை. நமக்கருகில் இருக்கும் நம்முடன் படித்து கொண்டிருக்கும், நம்முடன் நட்போடு இருக்கும் யாராவது ஒருத்திக்கே அது நிகழ்கின்றது. என் தோழி ஒருத்திக்கு வெளியிடத்தில் வசிக்கின்ற நபர் ஒருவர் அவளுடைய வறுமை கருதி கல்விக்கான பண உதவி செய்ய முன்வந்திருக்கின்றார். அதிலென்ன சிக்கல் என்று விசாரித்தபோதுதான் தெரிந்தது அந்த தர்மச்செயலுக்கான விலை அவளுடைய உடல் என்று.

எங்குமே பெண்ணுடல் என்பது இச்சைக்குரிய ஒரு பொருளாகவே பார்க்கப்படுகின்றது. இச்சை தாண்டி இருப்பிற்காகப் போராடுகின்ற அவளுடைய வாழ்க்கை என்பது மாயங்கள் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகின்றது.

அதிலும் குறிப்பிட்ட ஒரு வயதிற்குள் திருமண வாழ்க்கைக்குள் பெண் நுழையாவிட்டால் இந்த சமூகத்தால் அவள் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்ற பிரச்சினைகளோ பல. எல்லாமே பெண்ணுடல் மீதே நிகழ்ந்தேறும் நாடகங்களாகவே இருக்கின்றன.

“ஆண் சேறு கண்ட இடத்தில் மிதித்து தண்ணி கண்ட இடத்தில் கழுவிக்கொள்வான்” ஆனால் பெண் என்பவளிடத்தில்தான் குடும்பத்தின் கௌரவம் அடங்கியிருக்கின்றது அவள் வாழ்க்கை என்பது கத்தி மேல் நடக்கின்ற சாகசம் என்று சொல்லப்படுகின்ற எழுதப்படாத விதிகள் எல்லாம் இன்னும் நம் பெண்களைக் கொல்லாமல் கொன்று கொண்டுதான் இருக்கின்றன. இந்த நிலையில் பால் நிலைச் சமத்துவம் என்பதை எவ்வாறு சாத்தியம் ஆக்குவது?

ஒரு நடிகன் காலம் முழுவதும் ஆதர்ச நடிகனாகவே நட்சத்திரமாக வலம் வருகின்றான். அதேசமயம் ஒரு நடிகையின் நிலை என்ன? ஒரு காலத்தில் கதாநாயகியாகவும் பின்பு தாயாகவும் பின்பு முற்று முழுதாக அந்தத் தொழில் துறையிலிருந்து மறைந்து மனைவியாகவோ தாயாகவோ குடும்பப் பொறுப்பிலேயே மூழ்கிப்போய்விடுகின்றாள். அவள் வாழ்க்கையோ கனவாகிப் போய்விடுகின்றது. கனவுகளோ நகைச்சுவையாகிப் போய்விடுகின்றன.

அன்பிற்குரியவர்களே இதை எழுதிக்கொண்டிருக்கும் நானும் காணாமல் போய் விடக்கூடும் இந்த மாண்புமிகு சமூகத்தில் குடும்ப நிலை கூறி. அதுவரை எதையாவது பதிவு செய்துகொண்டே இருக்க வேண்டும்.

“நாளை வரலாற்றில் நான் ஒளி மங்கக்கூடும்

நான் காணாமல் போகக்கூடும்

நான் கொல்லப்படவும்செய்யலாமே – அன்றி

வெல்லப்படேன் எனும் வெற்றுக் கனவோடியங்குவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

**மேடம்**
ஒளி நிறைந்த காலம். உழைப்பு. மதிப்பு. தர்ம சிந்தனை

**துலாம்**
வித்தை விருத்தி. உறவால் பெருமை. மனக் கஷ்டம். லாபம்.

**ரிஷபம்**
நல்லெண்ணம். புதியது தேடல். கல்விச் சிறப்பு. மகிழ்ச்சி.

**விருச்சிகம்**
தியாக சிந்தனை. துணிவு. தொழில் மாற்றம். பொருள் கஷ்டம்.

**மிதுனம்**
தெய்வ சிந்தனை. பாராட்டு. சமூகச் சிந்தனை. பொருள் செலவு.

**தனுசு**
இட மாற்றம். தொலை தூரத்துச் செய்தியால் சுகம். மன மகிழ்ச்சி.

**கடகம்**
தவக்காலம். ஞானோதயம். மனைவியால் சுகம். பொருள் வரவு.

**மகரம்**
மன வருத்தம். வாகன விருத்தி, நிலைமாற்றம். புதிய சிந்தனை.

**சிம்மம்**
வருங்காலம் பற்றிய சிந்தனை. தொழில் சிக்கல். பணவரவு.

**கும்பம்**
பொருள் விருத்தி. ஆலய தரிசனம் வாய்மை. உறவால் பெருமை.

**கன்னி**
உறக்கமின்மை. பணி முடக்கம். நடைக் கஷ்டம். பயிர் பலிதம்.

**மீனம்**
இறை அருள். அமைதி. தல வழிபாடு. தன்னிலை மாற்றம். தாக மிகுதி.



முல்லைத்தீவு ஆறுமுகத்தான் குளம் அ.த.க பாடசாலை மாணவர்களுக்கு 'மனிதம்' அமைப்பினர் கடந்த வாரம் ஒரு தொகுதி பாடசாலை கற்றல் உபகரணங்களை அன்பளிப்பு செய்தார்கள்.







கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடிக்கு அருகிலுள்ள ச ரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் கவுஸ்) 'மார்ச் - 12' இயக்கத்தின் மாவட்ட மாநாடு நடைபெற்றது. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான 'மக்கள் செயற்பாடு' என்ற அமைப்பான பவ்ரல் (PAFFREL) தனது கூட்டு அமைப்புகளோடு இணைந்து ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பலர் இணைந்து தமது கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர். 'மார்ச் - 13' ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்திலிருந்து புறப்பட்ட பேரணி 19 ஆம் திகதி மாநாட்டு மண்டபத்தை வந்தடைந்த பின்னரே மாநாடு ஆரம்பமானது.

கடந்த சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். YMCA மண்டபத்தில் மறுமலர்ச்சி இயக்கம் (Renaissance Movement) ஒரு கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது. அக் கலந்துரையாடலில் ராவய பத்திரிகை ஆசிரியர் விக்ரர் ஐவன், வணக்கத்துக்குரிய தியகடுவே சோமாநந்த தேரர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவரத்ன பண்டா, பொறியியலாளர் திலக் டி சில்வா, மறுமலர்ச்சி இயக்கத்தின் புத்தளம் மாவட்ட தலைவர் சரத் பிரநாந்து, விவசாய ஆராய்ச்சியாளர் தங்கொடுவே ஜயசிறி, மொழி பெயர்ப்பாளர் எஸ். சிவகுருநாதன், தொழில் நுட்பவியலாளர் விஜய உந்துபிட்டிய, தொல்பொருளியலாளர் பிறியந்த ஜயசிங்க, பேராசிரியர் சரத் சந்திரஜீவ. சாமிநாதன் விமல் ஆகியோர் உட்பட்ட பலர் தமிழ்மக்களும் கலந்து கொண்டனர்.



'செரண்டிப்' நிறுவனத்தால் கடந்த வாரம் பிலக்குடியிருப்பு மக்களுக்கு ஒரு தொகுதி உடைகளும், மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாய் குட்டீஸ்...!

puthuvithi@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்க முடியும்.
'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## அன்னைக்கொரு தினம்



அன்னைக்கொரு தினமாம்
அன்னையர் தினம்
அகிலம் போற்றிடும்
அன்பு தினம்

பத்து மாசம் எம்மை
சுமந்தவளுக்கொரு தினம்
பரசமுடன் எம்மை, பாலூட்டி
பாரிலிட்டவளுக்குகொரு தினம்

தாயிருக்கும் பிள்ளைகளுக்கும்
தாயில்லாப் பிள்ளைக்கும்
நினைவில் ஒரு தினம்
தாயிருந்தால் அன்பு அதிகரிக்கும்
தாய் இல்லாதிருந்தால் கண்களை
கண்ணீர் நனைக்கும்

தாயிருக்கும் போது தாயன்பு
புரிவதில்லை, தாயில்லாத போது
வருந்துவதில் எந்த
நன்மையுமில்லை,
இதயங்களே
தாயை போற்றிடுவோம்
தாயன்பை பெற்றிடுவோம்

பு.நொறிக்கா யூஜி | தரம் - 09 | மிருசுவில் றோ.க.த.க.

## குட்டீஸ் பரிசுப் போட்டி – 37

★ அப்பிள் நிறுவனத்தின் நிறுவுநர் யார்?

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

புதுவிதி, 107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குட்டீஸ் பரிசுப்பொதி - 37

முடிவுத்திகதி: 04.04.2017

குட்டீஸ் பரிசுப் போதி – 35 முடிவுகள்

விடை: ஷெகல்

★ செல்வி. துஷாரா
ஸ்ரீஸ்கந்தராசா - தரம் -12 B
யா/ வேம்படி மகளிர்
உயர்தர பாடசாலை

பாடசாலை மாணவர்கள் மட்டுமே பங்கேற்கலாம்.
(தபால் அட்டையில் பாடசாலை தரம்
குறிப்பிட வேண்டும்.)

## ஆச்சரியத் தகவல்கள்

★ ஒரு மனிதன் தொடர்ச்சியாக 42 கிளாஸ் கோப்பி பருகினால் இறந்துவிடுவார்.

★ ஒரே இடத்தில் 7 இலட்சம் வரை பென்குவின் பறவைகள் கூடும்.

★ கடலில் 30,000 மீன் வகைகள் உள்ளன. பூச்சி இனத்துக்கு அடுத்து மீன் இனங்களே உலகில் அதிகமாம்.


★ அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் பி.ஜோன்சன் விமானத்தில் பறந்தவாறே பதவிப் பிரமாணம் எடுத்தார்.

★ நைலோன் துணியால் நாணயத் தாள்களை அச்சடிக்கும் நாடு ஜேர்மனி.


★ பிளாஸ்ரிக்கில் நாணயத்தாள்களை முதலில் வெளியிட்ட நாடு அவுஸ்ரேலியா.

★ உலகிலேயே அதிக இலைகள் கொண்டது சைப்ரஸ் மரம். இதில் 4 முதல் 5 கோடி இலைகள் இருக்குமாம்.

# தாய் எடிசனுக்கு கற்றுக்கொடுத்த குணம்



“இரவை ஒளியால் நிரப்பிய அற்புத மனிதர் தோமஸ் அல்வா எடிசன். அறிவியல் மீதான அதீத ஆர்வமும் விடா முயற்சியும் உலகமே கொண்டாடும் மனிதராக அவரை மாற்றியது. அவரின் வாழ்க்கையை பலரும் முன் மாதிரியாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அப்படியானவரின் வாழ்வில் நிகழ்ந்த ஆச்சரியமான சம்பவம் ஒன்று தெரியுமா?”



எடிசன் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த நாளில், அவரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்திருந்தார் ஆசிரியர். அந்தக் கடிதத்தை அவரின் அம்மா மட்டுமே படிக்க வேண்டும் என்றும் - ஆசிரியர் சொல்லியிருந்தார். இதன்படி அவரும் அக்கடிதத்தை அம்மாவிடம் கொடுத்தார். அதைப் படித்த எடிசனின் “அம்மாவின் கண்களிலிருந்து நீர் வழிந்தது. கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது” என எடிசனும் கேட்டார். “உங்கள் மகன் மிகவும் புத்திசாலி. அவனின் அறிவுக்கு ஏற்றளவில் இந்தப் பள்ளி இல்லை. அதனால் எடிசனை வீட்டில் வைத்தே படிக்க வையுங்கள்” என்று அம்மா உரக்கப்படித்தார். இதைக் கேட்ட எடிசன் உற்சாகமாகச் சத்தமிட்டார்.

ஆண்டுகள் வேகமாகக் கடந்தன. தோமஸ் அல்வா எடிசன் புதிய புதிய கண்டு பிடிப்புக்கள் மூலம் உலகமே போற்றும் மகத்தான விஞ்ஞானியாக திகழ்ந்தார். அவருக்குப் பாராட்டுகள் குவிந்த வண்ணம் இருந்தன. ஒரு நாள் எடிசனின் அம்மாவும் இறந்து போனார். அதன் பின் சில நாள்கள் கழித்து எடிசன் வேறு ஏதோ தேடுகையில், சிறிய வயதில் ஆசிரியர் கொடுத்தனுப்பிய கடிதம் கிடைத்தது. தன்னைப் பற்றி உயர்வாக எழுதிய கடிதத்தை மீண்டும் படிக்க ஆசைப் பட்டுப் படித்தார். ஆனால் கடிதத்தில் இருந்த வரிகள் அவரின் அம்மா வாசித் தவை அல்ல.

“உங்களின் மகனின் மனநிலை சரியில்லை எனக் கருதுகிறோம். அவனை எங்கள் பள்ளியில் தொடர்ந்து படிக்க அனுமதிக்க முடியாது” என்றுதான் இருந்தது. அக்கடிதத் தைப் படித்ததும் எடிசன் உறைந்து விட்டார். இந்த விடயம் தனது சிறிய வயதில் தெரிந்திருந்தால் எந்தளவுக்கு மனதளவில் முடங்கிப் போயிருப்போம் என்பதை ஒரு நிமிடம் நினைத்து தன்னை உதறிக் கொண்டார். அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதே பெரிய விடயமாக இருந்தது. தன் உழைப்பையும் முயற்சியையும் பாராட்டி ஊக்கமளித்த அம்மாவை மனதார நன்றியோடு நினைத்துக் கொண்டார்.

இருந்தாலும் பிள்ளைகள் பற்றிய விடயங்கள் பெற்றோருக்குத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதே தனது பழக்க வழக்கங்களில் ஓர் ஒழுங்கைக் கொண்டு வரமுடியும் என்பார்கள். ஆனால், ஒருவருக்கு தன்னைப் பற்றிய சில விடயங்கள் தெரியக் கூடாதவை என்பதும் இருக்கிறது. அதுவும் அவரின் வாழ்க்கைக்கு மிகவும் உதவியாக இருக்கும். இதைத்தான் எடிசனுக்கு அவரின் தாய் மறை முகமாகக் கற்றுக்கொடுத்திருக்கிறார்.

அந்தக் கடிதத்தை எடிசன் படிக்கவே கூடாது என அவரின் தாய் நினைத்திருந்தால் அதை தீயில் எரித்திருப்பார். ஆனால், அதை பின்னைய காலத்தில் எடிசன் படிப்பது சரிதான் என நினைத்ததாலேயே அதனைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கக்கூடும். குழந்தை வளர்ப்பின் ஒவ்வோர் அடியையும் மிகவும் கவனத்துடன் நகர்த்த வேண்டும் என்பதற்கு இது ஆகச் சிறந்த உதாரணம்.

குழந்தைகள் வளர வளர பல புதிய விடயங்களைத் தெரிந்து கொள்கின்றனர். அவற்றைக் கொண்டு கூடுதலாக யோசிக்க ஆரம்பிக்கின்றனர். அப்போது எதிர்கொள்ப வற்றை புதிய கோணத்தில் பார்க்கின்றனர். அதேபோல பழைய விடயங்களை முதிர்ச்சி யோடு அசைபோடுகின்றனர். அதனால் பெற்றோர் தங்கள் பொறுப்புக்களை கூடுதல் கவனத்துடன் செய்ய வேண்டியிருக்கிறது.

எடிசன் தன் அம்மாவை நெகிழ்ச்சியோடு நினைவுக் கூருவதுபோல, தங்கள் பிள்ளை களும் நினைவுகொள்ள வேண்டும் என்பதே ஒவ்வொரு பெற்றோரின் எண்ணமாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02

# கொங்கு வழக்குச்சொல் களஞ்சியம்



முனைவர் ஜெ.அரங்கராஜ்
(ஆய்வறிஞர், யாழ்ப்பாணம்)

மேற்கண்ட பாடலடிகளுக்கு உரை கூறும் அடியார்க்கு நல்லார் இன்னு இழி பிறப்பையுற் இவர் உறையூர் மதிற்புறமாகிய காவற் காட்டிற்றிருந்து பன்னிரண்டு திங்கள் இங்ஙனம் துன்பமிழந்த பின்னர் முன்னைப் பிறப்பை பெறுவாராக வென என விளக்கமளிக்கிறார்.

இதில் மதியத்தை மதி, மதியம் என அப்படிய சுட்டும் நல்லாரின் தன்மை மாறுபட்டமை திங்கள் எனச் சுட்டியதன் காரணம்.

இவ்விடத்தில் மாதம் எனும் சொல்லை முழுமையாகச் சுட்டவே மதி, மதியம் எனும் நிலவைச் சுட்டும் சொல்லைச் சுட்டாமல் முழுமையாக மாதத்தைச் சுட்ட வேண்டும் எனும் நோக்கை விளக்கியுள்ளமையை அறியலாம்.

இதன்படி பல விடயங்களின் மதியம் எனும் கொங்கு வழக்கையே நல்லார் கையாள்வது கொப்பண்ணக் காங்கேயன் கதை கூறும் அடியார்க்கு நல்லார் கொங்கு நாட்டாரே என்பதை மெய்யுற்றவதாக உள்ளதெனலாம்.

மேற்கண்டவற்றாலும் தற்கால வழக்கிலும் மதியம் எனும் சொல் முழு நிலா என கொங்கில் வழங்குவதைக் காணலாம்.

## நோப்பாலம்

நோ என்ற சொல் துன்பம், நோய் முதலாய பொருள் தரும். இதனடியாகவே நோவு - நோய் முதலாய சொற்கள் பிறந்தன. கொங்கிலே நோப்பாலம் எனும் சொல் தீவினை எனும் பொருளில் பயன்படுத்தப்படுகிறது.

இதனை "அவனுக்கு என்ன நோப்பாலமோ பேசமாட்டேங்கறான்?"

முதலாய சான்றுகளின் வழி அறியலாம் இந்நோப்பாலம் எனும் வழக்கு திருக்குறளில் பயன்படுத்தப்பட்டுள்ளமையை

தீப்பல தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால

தன்னையடல் வேண்டா தான்
குறள் - 206

எனும் குறள்வழி அறியலாம்.

## சிலையோடுதல்

சிலை எனும் சொல் ஓசை எனும் பொருளில் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் வழங்கி வந்துள்ளது. இதனை

"....................இன்சிலை

ஏறுடை இனத்த நாறுயிர் நவ்வி"
அகம் - 7:9

இன்சிலை எனும் சொல் இனிய ஓசை எனச் சுட்டியமையை மேற்கண்டவற்றால் அறியலாம். இடியைப்போன்ற யானையின் முழக்கமும் சிலை எனும் சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளமையை

"..... விசும்பின்

ஏறெழுந்து முழங்கினும்
மாறமுத்து சிலைக்கும்

கடாஅ யானை கொட்டும் பாசறை"

வானில் இடிமுழங்க அதற்கு எதிராக பாசறையில் யானை முழங்குதல் சிலைத்தல் எனச் சுட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட வழி யானை பிளிறும் வல்லோசையும் சிலைத்தல் எனப்பட்டது.

ஆடவர்கள் சேர்ந்து கள்ளுண்டு எழுப்பும் ஓசையும் சிலைத்தல் என பின்வரும் அடிகளில் சுட்டப்பட்டுள்ளது.

அரிநிறக் கலுசி ஆரமாத்திச்

செருவேட்டுச் சிலைக்கம் செங்கன் ஆடவர்
அகம் - 159:3-4


மேற்கண்டவற்றால் வல்லோசையையும் மெல்லோசையையும் குறிக்க சிலையெனும் சொல் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டமையை அறியலாம். இச் சொல் கொங்கு வழக்கில் இன்றும் ஓசை எனும் பொருளில் பயன்படுத்தப்படுதலை அறியலாம். இதனை

"நீ பேசரது அங்க சிலையோடு பார்"

"இப்படி சிலையோடக் கத்தற"

என்பனவான வழக்குகளால் அறியலாம்.

பரல் உள்ளே இட்டு ஓசை செய்யப் பெற்றமையால் காலில் அணியப்பெறும் வளையம் சிலம்பு எனப் பட்டது. கையில் பிடித்துச் சுற்றுகின்ற போது வீர் என்ற ஓசை எழும்புவதால் மூங்கில் பிரம்பைக் கொண்டு விளையாடும் களியாட்டம் சிலம்பம் (அ) சிலம்பாட்டம் எனப்பட்டது. இதனை "என்ன வாயி அவளுக்கு இந்தச் சிலம்பு சிலம்பறா" என்பனவாக கொங்கு வழக்கில் அதிகம் பேசும் பெண்ணைக் குறிப்பிடு தலைக் காணலாம்.



உளி கொண்டு தட்டி ஓசையுடன் உருவாக்கப்படும் கல் உருவம் சிலையாயிற்று. அவ்வாறல்லாமல் சிலா எனும் சொல் வடமொழியில் கல்லைக் குறிக்கும். அதிலிருந்தே சிலை வந்தது என்பது ஏற்புடையதல்ல. ஏனெனில் ஆரிய வர்த்தப் பகுதியில் மிகுந்து கிடைக்கும் கற்கள் மென்மையானவை, ஓசை மிகுந்து எழுப்பாது. மேலும் தமிழில் சில் எனும் சொல் தட்டையான சிறிய ஓசை எழுப்பும் கல்லையும் மண் ஓட்டையும் குறிக்க வழங்கப்படுகின்றது.

இதனைக் கொண்டு தமிழ்ச் சொல்லான சிலையை சிலா என ஆரியம் எடுத்துக் கொண்டிருக்கலாம். அத்தகைய சிலை எனும் வழக்கு இன்று கொங்கில் வழங்கி வருகின்றது. இதனைக் கல்வெட்டுக்களும்

"சிலைச்சு (வி) முழங்கி (905) சிலைச் செதிர்ந்த மன்மாயமா மிகுந்தவர்"

எனக் கூறுவனவற்றால் அறியலாம்.

## தகுமானம்

'தகுமானம்' எனும் சொல் சமாதானம் எனும் வட சொல்லுக்கு இணையாக கொங்கு வழக்கில் பயன்படுத்தப்படுகிறது. தகுமானம் எனும் சொல் வழக்கை ஆராயும் போது

1) தாழையுந் தாருந் தந்தனன் இவனென

இழையணி ஆயமொடு தகுநான் தடைஇத்
(நற்றிணை - 80)

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஏ.ஆர்.ரஹ்மான் திரையுலகில் காலடி எடுத்து வைத்து 25 ஆண்டுகளாகின்றன. இதையொட்டி 'ஒன் ஹார்ட்' இசைத் திரைப்படம் வெளிவரவுள்ளது.

அமெரிக்காவின் 14 நகரங்களில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சி, இசை ஒத்திகை, நேர்காணல்கள் என்பவை இப்படத்தில் இடம்பெற்றுள்ளன.

ஏப்ரல் மாதம் திரைக்கு வரவிருக்கும் இந்த இசைத் திரைப்படத்தின் வருமானம் முழுவதும் இசைத்துறையை சேர்ந்தவர்களுக்கு உதவுவதற்காக தொடங்கப்பட்டுள்ள "ஒன்ஹார்ட் மியூசிஷியன்ஸ் பௌண்டேஷன்" அமைப்புக்கு வழங்கப்படவுள்ளது.



தெலுங்கு படத் தயாரிப்பாளரான பொல்லம் கொண்டா சுரேஸ் மகன் சாய் ஸ்ரீநிவாஸுடன் நடிக்க முன்னணி நடிகைகள் கேட்கும் சம்பளத்தைவிட அதிகமாகக் கொடுத்து, அவர்களை ஒப்பந்தம் செய்வது அவரின் உத்தி.

மகனுக்கு நாயகியாக நடிக்க கீர்த்தியை அணுகிய போது நேரமில்லை எனக் கூறி மறுத்துவிட, தயாரிப்பாளரோ சம்பளமாகப் பெருந்தொகை ஒன்றை குறிப்பிட்டு அதை தருவதாகக் கூறியிருக்கிறார்.

இந்தத் தொகை கீர்த்தியை சற்று யோசிக்க வைத்திருக்கிறது. எப்படியாவது நேரத்தை ஒதுக்கிக் கொடுத்துவிடுவார். இப்படத்தில் நடிப்பதால் கோடிகள் வாங்கும் நடிகைகள் பட்டியலில் அவரும் இணைந்து விடுவார் எனத் தெரிகிறது.



சசிகுமார் "கொடிவீரன்" படத்தில் நடிக்கவுள்ளார். "குட்டிப்புலி" படத்தை இயக்கிய முத்தையா இயக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ளது.

இந்தப் படத்தில் சசிகுமாருக்கு ஜோடியாக ஹன்சிகா நடிக்கவுள்ளார். முன்னணி நடிகர்களுடன் நடித்து வந்த ஹன்சிகா முதன்முதலில் இவருடன் ஜோடி சேருகிறார். முன்னணி நாயகியுடன் சசிகுமார் ஜோடி சேர்வதும் இதுவே முதன்முறை.

மலையாள சுப்பர் ஸ்டார் மோகன்லாலின் புதிய படத்தில் விஷால் நடிக்கவுள்ளார்.

இப்படத்தில் ஹன்சிகாவும் முக்கிய வேடத்தில் நடிக்கவுள்ளார் எனத் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் படத்தில் விஷால் வில்லனாக நடிக்கிறார் என விடயமறிந்த வட்டாரங்களிடம் இருந்து தகவல் வெளியாகியுள்ளது.



லண்டன் மேடமி டுஸாட்ஸ் அருங்காட்சியகத்தில் உலகப் பிரபலங்களின் மெழுகு உருவச் சிலைகள் வைக்கப்படுவது வழமை.

இதன் கிளை நிறுவனம் இந்தியாவின் டில்லியில் திறக்கப்படவுள்ளது. அங்கு இந்திய அளவிலான பிரபலங்களின் சிலைகள் வைக்கப்படவுள்ளது.

இதில் பின்னணிப் பாடகி ஸ்ரேயா கோசலுக்கு மெழுகு சிலை வைப்பதற்கு ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.



சே
இயக்
நடித்த
ஆண்
ரசிகர்
வசூலை

இ
படம்
செய்ய
கசிந்த
என்.டி



அஜீத் நடித்து வரும் "விவேகம்" படத்தின் இறுதிக்கட்டப் படப்பிடிப்பு பல்கேரியாவில் இடம்பெற்று வருகின்றது.

கிழிந்த சேர்ட், இரத்தக் காயங்களுடன் அஜீத் இருக்கும் இந்தப் படம் படப்பிடிப்புத் தளத்தில் எடுக்கப்பட்டுள்ளது. வெளியான சில மணி நேரங்களிலேயே இப்புகைப்படம் உலகளவில் அதிவேகமாகப் பரவி வருகிறது.

இதனிடையே இப்படத்துக்கான தமிழக ரிலீஸ் உரிமை 50 கோடி இந்திய ரூபாவில் இருந்து ஆரம்பமாகியுள்ளதாம். பெரும்பாலும் ஜூலை மாதம் திரைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



நயன்தாரா கோலிவூட்டின் லேடி சுப்பர்ஸ்டார் என அழைக்கப்படுகிறார். இவர் வசம் தற்போது "டோரா" "இமைக்கா நொடிகள்" "அறம்" கொலையுதிர்காலம் வேலைக்காரன் ஆகிய படங்கள் உள்ளன.

இந்நிலையில் "கொலையுதிர்காலம்" படம் ஹிந்தியில் உருவாகவுள்ளது.

இதில் நயன்தாராவின் பாத்திரத்தில் தமன்னா நடிக்கவிருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலையில்லா பட்டதாரி 2 ஆம் பாகத்தை ரஜினியின் மகள் சௌந்தர்யா இயக்கி வருகிறார்.

இந்தப் படத்தில் தனுஷுக்கு சவால் விடும் தொழிலதிபராக பொலிவூட்டின் முன்னாள் கனவுக்கன்னி கஜோல் நடிக்கிறார். இதற்காக சென்னை வந்த அவர் நடித்துக் கொடுத்து விட்டு மும்பை சென்றுள்ளார்.

நடிகர் அஜய் தேவ்கானை மணந்த கஜோல் சினிமா வாழ்வை துறந்திருந்தார். ஆனால் 2015 ஷாருக்கானுக்கு ஜோடியாக தில்வாலே படத்தில் நடித்த பிறகு நடிக்க மறுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



நடிகர் கமல்ஹாசனின் கடைசி மகள் அக்ஷரா ஹாசன் அஜித்தின் 'விவேகம்' படத்தில் முக்கிய வேடத்திலும், மேலும் சில படங்களிலும் நடித்து வருகிறார்.

இந்நிலையில் ஒரு படத்திலாவது தலையை மொட்டையடித்து நடிக்க விரும்புகிறேன். அதுபோன்ற வாய்ப்பு வந்தால் கண்டிப்பாக நடிப்பேன்.

மொட்டை அடிப்பது எனக்குப் புதிதல்ல. 7வயதில் அப்பாவிடம் மொட்டைத்தலை எப்படி இருக்கும் என்று கேட்டேன். குளியல் அறைக்கு என்னை அழைத்துச் சென்ற அவர் மொட்டை அடித்து விட்டார். நானும் அப்பாவும் இப்படி ஏதாவது செய்து கொண்டே இருப்போம் - என்றார்.



கே.எஸ். ரவிக்குமாரின் இயக்கத்தில் அஜீத் 3 வேடங்களில் நடித்த படம் "வரலாறு" 2006 ஆம் ஆண்டு வெளியான இந்தப் படம் ரசிகர்களின் அமோக வரவேற்பையும் வசூலையும் பெற்ற படம்.

இப்போது இந்தப் படம் தெலுங்கில் ரீமேக் செய்யப்படவுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன. இதில் ஜூனியர் என்.டி.ஆர். நடிக்கவுள்ளார்.



மணிரத்னம் இயக்கத்தில் 'காற்றுவெளியிடை' படத்தை முடித்த கார்த்தி, 'தீரன் அதிகாரம்' ஒன்று படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தை "சதுரங்க வேட்டை"யை இயக்கிய வினோத் இயக்குகிறார்.

கதைக்கு பொருத்தமாக ராஜஸ்தான் இருக்கும் என்பதால் படக்குழு 40 நாட்களுக்கு அங்கு முகாமிட்டுள்ளது.

இப்படத்தில் நாயகியாக ராகுல் ப்ரீத் சிங் நடிக்கிறார்.



சினிமா உலகில் பெண்கள் எதிர்கொள்ளும் இம்சைகள் பற்றி இப்போது பலரும் வெளிப்படையாகப் பேசி வருகிறார்கள்.


இந்த வரிசையில் இப்போது பொலிவூட்டின் பிரியங்கா சோப்ராவும் இணைந்துள்ளார். அவர் தான் சினிமாவுக்கு வந்த புதிதில் ஆபாசமாக நடிக்கும் படி வற்புறுத்தினர் என்றும் - இதனால் அப்படத்தில் இருந்து தான் விலகினார் என்றும் - கூறியிருக்கிறார்.

மேலும், கதைக்குத் தேவை என்றால் மட்டுமே தான் கவர்ச்சியாக நடிக்கிறேன் என்ற அவர் அதை வைத்து நிஜ வாழ்வில் படுக்கை அறைக்கு வரவும் தயாராக இருப்பதாக அர்த்தம் கொள்ளக்கூடாது. சினிமாவுக்கு வரும் பெண்கள் எதற்கும் தயாராக இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம் என்றும் - அவர் சொல்லியுள்ளார்.

பாகுபலி -2 படத்தின் ட்ரெயிலர் இணைய உலகில் பெரும் சாதனைகளை ஏற்படுத்தியுள்ளது. சினிமா உலகில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய பாகுபலி - 2 ட்ரைலர் கடந்த 16 ஆம் திகதி வெளியானது.

ட்ரெய்லர் வெளியாகி 24 மணி நேரத்தில் 2 கோடியே 18 இலட்சம் பார்வையாளர்களை கடந்துள்ளது. ஷாருகானின் படமான 'ரயீஸ்' ட்ரெய்லர் வெளியான 24 மணி நேரத்தில் ஒரு கோடியே 19 லட்சம் பார்வையாளர்களைக் கடந்தது.

இந்தச் சாதனையை 6 மணி நேரத்திலேயே முறியடித்த பாகுபலி -2 இப்போது புதிய சாதனையைப் படைத்துள்ளது.





ரஜினியின் புதிய படத்தை 'கபாலி' படத்தை இயக்கிய ரஞ்சித் இயக்கவுள்ளமை யாவரும் அறிந்ததே.

இதில் ரஜினிக்கு ஜோடியாக பொலிவூட் நடிகைகளான தீபிகா படுகோன் அல்லது 'வித்யா பாலனை நடிக்க வைக்க பேச்சு நடக்கிறதாம்.

2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ரஜினி நடித்த 99 வீத படங்களில் பொலிவூட் நாயகிகளின் ஆதிக்கமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





அட்லீ இயக்கத்தில் விஜய் நடித்து வரும் படத்துக்கு "தளபதி" எனப் பெயரிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஜி.வி.பிலிம்ஸ் நிறுவனத்துடன் படக்குழு பேச்சு நடத்தப்பட்டு வருகிறதாம்.

சத்யராஜ், வடிவேல், நித்யாமேனன், காஜல் அகர்வால், சமந்தா, எஸ்.ஜே. சூர்யா கோவை சரளா, சத்யா எனப் பெரும் நட்சத்திரப் பட்டாளம் இப்படத்தில் நடிக்கிறது.

மணிரத்னம் இயக்கத்தில் ரஜினி - மம்முட்டி நடிப்பில் வெளிவந்து பெரும் வெற்றி பெற்ற படம் தளபதி. இதனை ஜி.வி.பிலிம்ஸ் நிறுவனம் தயாரித்திருந்தது. அந்தப் பெயரைப் பெறுவதற்காகவே பெரும் பிரயத்தனம் செய்து வருகிறது படக்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மனிதருக்காக நாம் என்ன செய்வது?





சிக்மலிங்கம் றெஜினோல்ட்

இரண்டு பசு மாடுகள். படிக்கிற வயதில் நான்கு பிள்ளைகள். அதிகம் விவரமில்லாத மனைவி. சரியான பாதையில்லாத வளவு. வசதியற்ற வீடு. சல்லடையாக்கப்பட்ட உடல். நடக்கமுடியாத மனிதன். இதை இணைத்து ஒரு சித்திரத்தை உங்களுடைய மனதில் வரைந்து பாருங்கள். எப்படியிருக்கும் அந்தச் சித்திரம்?

★★

துடிப்பு நிறைந்த ஒரு போராளி. சண்டைக்களங்களில் எப்போதும் முன்னின்று களமாடியதால் தளபதிகளிடம் பாராட்டையும் மதிப்பையும் பெற்றவன். அப்போது உடலில் பட்ட காயங்கள் அவனுக்கு மதிப்பையும் பெருமையையும் ஏற்படுத்தியிருந்தன. ஒவ்வொரு காயத் தழும்பும் ஒவ்வொரு சண்டைக் களத்தில் அவன் நின்று இயங்கியதற்கு அடையாளம். இதெல்லாம் அவனுக்குச் சக போராளிகளிடத்திலும் சனங்களிடத்திலும் மதிப்பைக் கூட்டியிருந்தன. அவன் செல்லுமிடங்களில் அவனை நெருங்கி வந்து பலரும் கதைப்பார்கள். அவனோடு நட்பாக இருக்க விரும்பினார்கள். அவர்களோடு நெருங்கிப் பழக அவனுக்கும் விருப்பமிருந்தாலும் கால நேரம் போதியதாக இருந்ததில்லை. எல்லோருக்கும் மெல்லியதாக ஒரு சிரிப்பு. சிலரோடு சில வார்த்தைகள். பறந்து திரிந்தான் இயக்கம் என.

இந்தச் சித்திரத்தையும் உங்கள் மனதில் வரைந்து கொள்ளுங்கள். எப்பிடியிருக்கும் இந்தச் சித்திரம்?

★★★

இந்த இரண்டுமே ஒருவருடையவைதான். இரண்டு விதமான வெவ்வேறு காலத்தில் எல்லாமே மாறித் தலைகீழாகி விட்டன. முன்பு செல்வாக்கோடும் மதிப்போடும் இருந்த போராளி, இன்று கவனிப்பார் இல்லாதிருக்கிறான்.

ஒரு காலம் பலரும் அவனோடு நெருங்கி உறவாட விரும்பியிருந்த நிலை இன்று முற்றாகமாறி, எவருமே கண்டுகொள்ளாத நிலை வந்திருக்கிறது.

எவரும் கவனிக்காதவர்களின் வாழ்க்கை எப்படியிருக்கும்? அப்படி எவரும் கவனிக்காத நிலை ஏன் வந்தது?

இதுதான் தியாகராஜாவின் கேள்வி. இந்தக் கேள்வி நமக்கும்கூடத்தான்.

ஏனென்றால், இந்த இரண்டு காலத்திலும் நாமும் வாழ்ந்தோம் - வாழ்ந்திருக்கிறோம் அல்லவா. இப்படி மாறிவிட்ட காலத்தில் எல்லாவற்றையும் நாங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறோம் அல்லவா! அதனால் இந்தக் கேள்விகள் எங்களுக்கும் தான்.

★★★★

*1980களின் பிற்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்த தியாகராஜா, வன்னிப் பகுதியில் இந்திய இராணுவத்தோடு நடந்த சமர்களில் துடிப்பான போராளியாகக் களமாடினார். 1990 களில் இலங்கை இராணுவத்தோடு நடந்த சண்டைகளில் ஒரு சாதனையாளன். இரண்டு காலகட்டத்திலும் தியாகராஜாவுக்கு உடல் நிறையக் காயங்கள். காயங்கள் ஆறும். தழும்பு நீங்குமா?*

போராளிகளின் உடலில் வீரத்தழும்பு என்றால் அவர்கள் வெற்றியாளர்களாகவே கருதப்பட்ட காலம் ஒன்றிருந்தது. அப்போது தியாகராஜாவின் காட்டிலும் - வீட்டிலும் கொடி பறந்தது. ஆனால், பின்னர் இடம் பெற்ற சமரொன்றில் தியாகராஜா படுகாயம் அடைந்ததால் தொடர்ந்து செயற்பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இறுதிபோர் நிலைமையை இன்னும் மோசமாக்கியது. இடையில் நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையாகிவிட்டார். வட்டக்கச்சி-இராமநாதபுரம் வீட்டிலிருந்து நான்கு பிள்ளைகளோடு இடம்பெயரத் தொடங்கிய தியாகராஜாவை மாத்தளனில் எறிகணை தாக்கியது. மீண்டும் காயம். காயமென்றால், சாதாரணமான காயமல்ல. பெருங்காயம். குடல் கிழிந்து, கால்கள் சிதைந்தன. உடலில் இனிப்படுவதற்கு இடமில்லை என்ற அளவுக்கு எல்லா இடத்திலுமிருந்தும் குருதி பீறிட்டது.

ஒருவாறு உயிர் தப்பிய தியாகராஜா இடையில் வந்த எல்லா நெருக்கடிகளையும் சந்தித்து, இப்போது மீண்டும் இராம நாதபுரத்தில் குடியேறியிருக்கிறார். ஆனால், நடக்க முடியாது. சக்கரவண்டியிலேயே நடமாட்டம். வீதிக்கும் வளவுக்குமிடையில் ஒரு பெரிய வாய்க்கால். பாலம் கிடையாது. வாய்க்கால் ஓரத்தில் உள்ள விளிம்பால் நடந்தே வீட்டுக்குச் செல்ல முடியும். மழைக்காலத்தில் அதில் நடக்க முடியாது. சறுக்கியோ - வழுக்கியோ வாய்க்காலில் விழவேண்டியிருக்கும். கோடையில் என்றால் சமநிலை எடுத்து நடப்பது பெரிய சவால்.

இந்த நிலையில் சக்கரவண்டியில் எப்படி ஒருவர் போய் வர முடியும்? ஆனால், வேறு வழியில்லை. எப்படியோ பிள்ளைகள் மற்றும் மனைவியின் உதவியோடு அந்த வாய்க்காலில் இறங்கி, ஏறித்தான் தன்னுடைய தேவைகளுக்காகப் போய்வருகிறார். அப்படி இயங்காது விட்டால் நான்கு பிள்ளைகளுக்கும் சோறு போடுவது எப்படி? நடக்கக் கூடியவர்களே என்ன செய்வது? எப்படி உழைப்பது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கும் போது, நடக்கவே முடியாத தியாகராஜாவால் என்னதான் செய்ய முடியும்? பிள்ளைகள் பசி இருப்பார்களா? அல்லது அவர்களைப் படிப்பிக்காமல் வைத்திருக்க முடியுமா? எப்படியோ இயங்கித்தான் ஆக வேண்டும்.

தியாகராஜாவிடம் நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையினால் அவர் ஒரு மாட்டை வாங்கி வளர்த்தார். ஒரு மாட்டின் மூலமாகக் கிடைக்கிற வருமானம் ஆறு பேர் கொண்ட குடும்பத்துக்குப் போதவே போதாது. இரண்டு ஏக்கர் வயலைக் குத்தகைக்கு எடுத்து விதைத்தார். வயல் விதைத்தால் வயலில் விதைத்தவன் நிற்க வேணும். இல்லையென்றால் வருவதை எடுத்துக் கொள்ள வேண்டியது தான். விரும்பியதை எடுக்க முடியாது. என்றாலும் சோற்றுக்கு அரிசி கிடைத்தது. இப்படியிருந்தாலும் குடும்பத்தின் தேவையைத் தியாகராஜாவினால் நிறைவேற்றவே முடியவில்லை.

பிள்ளைகள் விரும்பியதை வாங்கிக் கொடுக்க முடியவில்லை. மனைவிக்கு ஒரு துணி எடுத்துக்கொடுக்க இயலவில்லை. வெளியே குடும்பத்தை அழைத்துப் போக முடிவதில்லை. ஒழுங்காக ஒரு தொழிலைத் தேடிக்கொள்ள முடியவில்லை. இப்படி எல்லாமே இல்லைகளின் பட்டியலில் தான் போய் முடிந்தது. கவலைகள் தியாகராஜாவையும் மனைவியையும் சூழ்ந்தன. அதிலிருந்து மீள வழிதெரியவில்லை. ஆனாலும், தியாகராஜா ஓய்ந்திருக்கவில்லை.

தேங்காய் மட்டைகளை எடுத்து அவற்றை ஊறவைத்துத் தும்பாக்கினார். பனை ஓலையில் பொருள்களை உருவாக்கினார். கோழிகளை வளர்க்க ஆரம்பித்தார். எல்லாம் கைக்கு அடக்கமான அளவில் தான். அதற்கு அதிகமாகச் செய்வதற்கு அவரிடம் நிதி வளமில்லை. நிதி வளமிருந்தாலும் உடல் வலுவில்லை. இருந்தாலும் இன்னும் இரண்டு மாடுகள் கிடைத்தால் கொஞ்சம் கூடுதலாக வருமானத்தை ஈட்டிக்கொள்ளலாம் என்று - முயற்சித்தார்.

ஒரு உள்ளூர் தொண்டு அமைப்பு அவருக்கு ஒரு மாட்டை வாங்கிக் கொடுத்தது. இப்போது இரண்டு மாடுகள் தியாகராஜாவிடம் உள்ளன. இரண்டிலிருந்தும் பால் எடுத்துக் கடைக்குக் கொடுக்கிறார். இரண்டையும் பராமரிப்பது அவரைப் பொறுத்தவரையில் சற்றுக் கடினம்தான். ஆனால், வேறு வழியில்லை. பிள்ளைகளுக்காக உழைத்தே ஆகவேண்டும். அவர்களுடைய எதிர்காலத்தோடு விளையாட முடியாது.

"ஏற்கனவே இருக்கின்ற இரண்டு மாடுகளோடு இன்னும் இரண்டு மாடுகளைச் சேர்த்து வளர்த்தால் பராமரிப்புச் செலவும் குறைவு. வருவாயும் அதிகரிக்கும்" என்று தியாகராஜாவுக்கு ஆலோசனை சொல்கிறார் கால்நடை வளர்ப்பு அதிகாரி. அவர் சொல்வதும் சரியே. ஆனால், அதற்கு உடனடியாக எப்படி ஏற்பாடு செய்வது? முன்னாள் போராளிகளுக்கு அரசாங்கம் என்ன பென்சனா கொடுக்கிறது? அல்லது வேறு சலுகைகள் தான் கிடைக்குமா? எதுவுமே இல்லையே.

தன்னுடைய வளவில் நிற்கும் மா மரத்தின் கீழே இருந்து கொண்டுபோவோர் வருவோரையெல்லாம் பார்க்கிறார் தியாகு. எல்லோருக்கும் ஏதோ அவசரம். எல்லோரும் அவரவர் பாட்டில் திரிகிறார்கள். அவர்களையும் குறைசொல்ல முடியாது. அவர்களுக்கும் ஆயிரம் பிரச்சினைகள். ஆனாலும் எங்கிருந்தோ ஒரு முகம் எதிர்பாராத விதமாக தியாகுவிடம் வரும் என்ற நம்பிக்கை தியாகராஜாவுக்குண்டு. ஆனால், அது எப்போதென்று தெரியாது.

இப்படித்தான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தடவை எவரோ ஒருவர் வந்திருந்தார். வந்தவர் சுகநலன்களை விசாரித்தார். குடும்ப விவரத்தைக் கேட்டார். எல்லாவற்றையும் குறித்துக் கொண்டு போனார். விடை பெறும்போது பிள்ளைகளின் படிப்புச் செலவுக்காகச் சிறிய தொகைப் பணத்தை அன்பளிப்பாகக் கொடுத்தார். பிறகு தியாகுவுக்கும் அவருக்குமிடையில் இரண்டொரு மாதங்கள் கதை பேச்சிருந்தது.

அதற்குப் பிறகு எதுவுமே இல்லை. இப்போது புரியாத இடைவெளி மட்டுமே மிஞ்சியிருக்கிறது.

தியாகராஜாவின் மனைவி மாடுகளை அவிழ்த்துக் கட்டுகிறார்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலைவனத்தில் ஒரு சோலைவனம்

Dubai ... Garden

மலர்கள் பூத்துக் குலுங்கும் அழகுக்கு இணை வேறு ஏதுமில்லை என்றே நினைக்கத் தோன்றுகிறது . வண்ண வண்ணப் பூக்கள் மெல்ல வீசும் காற்றில் தலையசைத்து மணம் பரப்பி அழகுக் குவியல்களாக கிடக்கும்போது அவற்றைப் பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும் ...

உலகின் மிகப்பெரிய பூங்காவனம் எங்கே இருக்கின்றது தெரியுமா ? ஒரு வறண்ட பிரதேசத்தில்தான் இது இருக்கின்றது என்ற புதினம் உங்களை ஒருவேளை ஆச்சரியப்படுத்தலாம் . பணம் பத்தும் செய்யும் என்கிறார்கள் . பதினொன்றாவதாக ஏன் இதைச் செய்ய முடியாது ?

துபாய் நகரில்தான் இந்தப் பூங்கா இருக்கின்றது . வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட 45க்கு மேற்பட்ட பூவினங்கள் இங்குள்ளன .18ஏக்கர் விஸ்தீரணமான நிலப்பரப்பில் மலர்ப் படுக்கைகள் , மலர் வீதிகள் என்று இந்த வளைகுடா நகரில் அழகுக்கு அழகூட்டுகின்றது இந்த இராட்சதப் பூங்கா .

கழிவு நீரை சுழற்சி முறையில் நன்னீராக்கி சொட்டுச்சொட்டாக தண்ணீரைப் பாய்ச்சும் முறையால் பாலைவன வெப்பத்திற்கு நீர் ஆவியாவது தடுக்கப்பட்டு 75வீதமான நீரும் சக்தியும் சேமிக்கப்பட்டு வருவது இங்குள்ள விசேஷம் .

பல வழிகளிலும் பாரிய வளர்ச்சியைக் கண்டுவரும் வளைகுடா நாடான ஐக்கிய அரபுக் குடியரசின் தலைநகரான துபாயில் 2013ம் ஆண்டு காதலர் தினமன்று இந்தப் பூங்கா திறந்து வைக்கப்பட்டுள்ளது , வருடா வருடம் ஒக்ரோபர் தொடக்கம் ஏப்ரில் வரை இந்தப் பூங்கா பொது மக்கள் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கும் . ஜூன் தொடக்கம் செப்ரெம்பர் வரை சராசரி 40 பாகையைத் தொடும் அகோர வெப்பநிலை காரணமாக பூங்கா மூடப்பட்டு இருக்கும் ..

இங்குள்ள வண்ணத்துப்பூச்சி... கொண்ட தோட்டம் இதன் சிறப்பம்சமாகும். 26இனங்களை உள்ளடக்கிய 15,000 க்கு மேற்பட்ட வண்ணத்துப்பூச்சிகள்அடைத்து வைக்கப்பட்ட கொண்ட இந்தத் தோட்டம் உலகின் மிகப் பெரிய... என்கிறார்கள் .

மழைத்தூறலுக்காக ஏங்கும் இ... வறண்ட பூமியில் மலர் வனம் ஒ... அமைக்க முடியும் என்றால் , முன்... குறிப்பிட்டது போல பணம் பத்து... செய்யும் என்று சொல்வதோடு அது பாதாளத்தில் மட்டுமல்ல பாலைவனம் வரை கூடப் பாயும் என்றே சொல்லத் தோன்றுகின்றது .

பூரிம் என்றால் என்னவென்று அறிந்திருக்கிறீர்களா? யூதர்களின் நாட்காட்டியின்படி அடார் என்றொரு மாதம் வருகின்றது . அதில் 14ஆம் திகதி இவர்களால் கொண்டாடப்படும் ஒரு பெருநாள்தான் இந்தப் பூரிம் பெருநாள். தங்கள் எதிரிகளை தோற்கடித்த நாளை நினைவூட்டும் நாளாகவே இது அமைகின்றது. யூதர்களின் "பைபிள்" என்று ஒன்று இருக்கின்றது, அதை எஸ்தரின் சுவடி என்று அழைக்கிறார்கள்.

இதன்படி இவர்கள் இந்த நாளில் ஏழைகளுக்கு பரிசளித்து , உணவைப் பகிர்ந்து உண்டு கொண்டாட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது .இவர்களது வழிபாட்டு ஸ்தலத்தில் எஸ்தர் சுவடியை வாசிக்க வேண்டும் மிகப் புராதனம் வாய்ந்தது இந்தப் பெருநாள்.

முன்னொரு காலத்தில் பேர்சியா என்று அழைக்கப்பட்ட ஈரானில் 2500 வருடங்களுக்கு முன்பு ஹமான் என்பவன் யூதர்களை அடியோடு அழிக்க தீட்டப்பட்ட திட்டத்தை முறியடித்த மகிழ்வைக் கொண்டாடவே இந்தப் பெருநாள். இந்தக் கால கட் டத்தில் பெர்சிய சாம் ராஜ்யத்தில் சிறுபான்மையினராக வாழ்ந்தவர்கள்தான் யூதர்கள்.

பொதுவாக மார்ச் 14, 15ந் திகதிகளில் இந்தக் கொண்டாட்டம் வருவதுண்டு, ஜெருசலேமில் 15ந் திகதியிலும் ஏனைய நகரங்களில் 14ந் திகதியிலும் இக் கொண்டாட்டம் இடம்பெறும் என்கிறார்கள் .

கொல்லப்படாமையால் கொண்டாட்டமோ ?



**புதினப்பூங்கா**
ரஜேஸ். மணாளன்

## அனைத்தும் அம்மாவுக்கே

இங்கே அரசியல் பேசவரவில்லை. இந்த அம்மா கதை சீனாவில் நடக்கின்றது. அங்கே அம்மா ஆட்சியும் இல்லை . தனது 74வது வயதில் பெண்ணைப் போல உடுத்திக்கொண்டு தனது அம்மாவைச் சந்திக்கச் செல்லும் ஒரு முதியவர் உங்களை நிச்சயம் ஆச்சரியப்படுத்துவார். இவர் கடந்த 14 வருடங்களாக ஒவ்வொரு வாரமுடிவிலும் தன் தாயை ஒரு பெண்ணின் கோலத்தோடு சென்று சந்திப்பதைத் தொடர்கிறார் என்பது உங்களுக்கு மேலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம் .



என்ன காரணம் தெரியுமா ? பெண்பிள்ளைகளுக்காக ஏங்கிய தாயாருக்கு அடுத்தடுத்து இரண்டு ஆண் பிள்ளைகள் கிடைத்து அவர் ஏக்கம் நிறைவேறாமல் போய்விட்டது. அந்த ஏக்கத்தை தணிக்கவே இந்த மகன் இப்படி நடந்து கொள்கின்றார் .

இதற்காகவே தனி நேரம் ஒதுக்கி முக ஒப்பனை செய்து , நவநாகரீகமான ஆடைகள் அணிந்து தன் தாயைச் சந்தித்து வருகிறார் என்கிறது சீனாவின் மக்கள் தினசரி . லீ என்ற பெயர் கொண்ட இந்த சீனக் குடிமகன் தனது 60வது வயது தொடக்கம் இதை ஒழுங்காகச் செய்து வருகிறார் என்பது புதுமையான விடயந்தான் .

"என் தாயின் மன மகிழ்ச்சிக்காகவே இதைச் செய்து வருகிறேன் . என் அம்மாவின் சந்தோஷமே என் சந்தோஷம். அவர் பெண் பிள்ளைகளுக்காக ஏங்கி அது கிடைக்காமல் தவிப்பது எனக்குத் தெரியும்" என்று பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவர் கூறியுள்ளார். தாய்க்கு இப்பொழுது வயது 96.

தாய்ப் பாசத்தை இப்படியும் வெளிப்படுத்தலாம் என்பதற்கு இவர் நல்லதொரு முன்னுதாரணம் ....



## நஞ்சுண்ணும் நல்லவர்கள்

வீட்டுக்கு வீடு வாசல்படி என்பார்கள். சில பிரச்சினைகள் நம் வீட்டு வாசலைத்தான் தேடிவருகின்றன என்றில்லை . நன்கு முன்னேறிய பொருளாதார பலம் மிக்க ஜாம்பவான் நாடுகளிலும் இருக்கவே செய்கின்றன,

மருந்தடித்து மரக்கறிகளை நஞ்சாக்கும் மோசமான காரியம் நம் நாட்டில் தாராளமாகவே இடம்பெறுகின்றது. யாழ்ப்பாணத்தில் சுவையான மாம்பழங்களை பழுக்க வைக்க பல யுக்திகளைக் கையாண்டு அவற்றை நாசமாக்குகிறார்கள் என்றெல்லாம் செய்திகள் வெளிவருகின்றன் . ஆனால் வெளிநாடுகளிலும் இதே கதைதான் .

சமீபத்திய ஆய்வொன்றின்படி சுப்பர்மார்க்கெட்டுகளில் விற்கப்படும் ஸ்டோர்பெரி பழங்களில் 70 வீதமானவை கிருமிநாசினிச் செறிவுள்ளவையாக இருக்கின்றன என்று கண்டறிந்துள்ளார்கள். புற்று நோய், உடல் பருப்பது, சலரோகம், மலட்டுத்தன்மை என்று மனிதர்களைத் தாக்கும் நோய்களுக்கு இது ஒரு காரணி என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

கெட்டவர்கள் அதாவது உடல் நலத்திற்கு ஒவ்வாதவர்கள் என்று பட்டியல் இட்டு குறிப்பாக 12 பழங்களும் மரக்கறிகளும் தரப்பட்டுள்ளன. பொதுவாக இவை ஐரோப்பிய மண்ணிற்கு உரியவை என்றாலும் கெட்டவர் சகவாசம் வந்தால் நல்லவரும் கெட்டவராகி விடுவார் என்பதற்கு இவற்றைப் பார்த்து அறிந்து விடலாம்

கிழங்கு , தக்காளி , அப்பிள் , செர்ரி போன்றன பொல்லாத பன்னிரெண்டில் வந்துள்ள ஒரு சில போக்கிரிகள் . முதலிடம் ஸ்ரோபெரி பழங்களுக்கே கிடைக்கின்றது.

"யாரைத்தான் நம்புவது பேதை நெஞ்சம்" என்று ஆரம்பிக்கும் ஒரு பழைய பாடல்தான் ஞாபகத்திற்கு வருகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திண்ணையில் மலர்ந்து கல்விமான்களை உருவாக்கிய
# கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்

தொகுப்பு :
அ.றொக்ஷன்



அதிபர் திருமதி கடம்பமலர்

## வரலாறு

யாழ்ப்பாணத்தின் கோண்டாவில் கிராமத்தில் அமைந்துள்ளது பரஞ்சோதி வித்தியாலயம். கிராமப்புறத்தில் அமைந்திருந்தும் பல கல்விமான்களை உருவாக்கிய பெருமைக்குரியது இப்பாடசாலை.

இப்பாடசாலை இணுவையூர் காசிநாதர் சேதுலிங்கம் சட்டம்பியார், இணுவையூர் தவத்திரு வடிவேற் சுவாமிகள், திருநெல்வேலி பரமசுவாமிகள் மற்றும் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த பெரியோர்களின் பெருமுயற்சியால் கோண்டாவில் சிவபூதவராயர் ஆலயத்தில் இரவுப் பாடசாலையாக 1930 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 5 வருடங்கள் இந்த ஆலயத்திலேயே பாடசாலை இயங்கிய நிலையில், நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைக்க முயற்சி எடுக்கப்பட்டது.

தவத்திரு. கந்தர் வடிவேற்சுவாமியார், சின்னத்தம்பி கார்த்திகேசு, சீனியர் கந்தையா, இந்துபோட் இராசரத்தினம் ஆகியோரின் பெருமுயற்சியால் இன்றைய இடத்தில் நிறுவப்பட்டது. பாடசாலைக்காக தனது காணியில் ஒரு பகுதியை சின்னத்தம்பி கார்த்திகேசு வழங்கினார். தொடர்ந்து சீனியர் கந்தையா, இந்துபோட் இராசரத்தினம் ஆகியோர் தமது காணிகளை வழங்கினர்.


பாடசாலைக்கு சின்னத்தம்பி கார்த்திகேசுவின் மகளின் நினைவாக "பரஞ்சோதி" எனப் பெயரிடப்பட்டது. சின்னத்தம்பி கார்த்திகேசு முகாமையாளராகப் பொறுப்பேற்றார். 1935 இல் சிவகுருநாதன் தலைமை ஆசியராக கடமையாற்றினார். தொடர்ந்து சின்னத்துரை (நுணாவில்), பொன்னையா (கட்டுவன்), பூ.சின்னத்துரை (நீர்வேலி ) இவரின் காலத்திலேயே ஜி.சீ.ஈ. சாதரண தரம் வரை கற்பிக்கப்பட்டது.

சி.சுப்பிரமணியம், (வசாவிளான்), வ.கணபதிப்பிள்ளை, செ.இராசா, மு.ஞானசம்பந்தன்பிள்ளை, செ.நடேசு, சின்னராசா, சு.லோகதாசன், சண்முககுமார், சு.இராசலிங்கம் ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றினர். 10.07.2009 தொடக்கம் திருமதி கடம்பமலர் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். தற்போது 155 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். 21 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.









## சவால்கள்

மாணவர்களின் சேர்வு வீதம் குறைவாகவுள்ளது.

பெற்றோரின் முழு ஒத்துழைப்பு மேம்பட வேண்டும்.

பொதுப் பரீட்சைகளான பெறுபேறுகளில் முன்னேற்றம் அவசியம்.

பெற்றோரின் நகர்புற நகர்வும், ஆடம்பர மோகமும் பாடசாலையில் மாணவர் இருப்பில் செல்வாக்கு செலுத்துகிறது.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் குறைவான பாடங்களில் சித்தியடையும் மாணவர்களுக்கு தகுந்த வழிகாட்டல்களை வழங்க முடியாமை.

உடற்கல்வி, விளையாட்டு போன்ற இணைபாடவிதமான செயற்பாடுகளைப் பயிற்றுவிக்க போதிய ஆள்வளம், நிதிவளம் இல்லை.









## சாதனைகள்

- படிப்படியாக க.பொ.த. சாதாரண தரப் பெறுபேற்று வீதங்கள் அதிகரித்து வருகின்றன.
- தமிழ்திறன் போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகளில் கோட்ட மட்டத்தில் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.
- கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தல், குண்டு போடுதல், ஈட்டி எறிதல் போன்ற நிகழ்வுகளில் மாணவர்கள் வெற்றிபெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறுகதை

எம். ஏ. ரஹ்மான்

# தாய்மை

குயில் அழகாகப் பாடிக்கொண்டிருந்தது.

அந்தக் கோலக் குரலில் ஓர் இளங்காகம் தன்னுடைய மனத்தினைப் பறிகொடுத்தது. கீதத்தின் இரசனை - வேலையை மறந்தது; சுயத்தை மறந்தது

"என்ன. இப்படி ஒரேயடியாக உட்கார்ந்து விட்டாய்? கூடு கட்டுவதற்கு அழகான சுள்ளிகள் கிடைக்கின்றன. குடும்பச் சுமையைத் தாங்குவதற்கு உழைப்பு. வா...வா.." அதனை அதன் சுற்றமாங் காகங்களை அழைத்தன.

அவற்றின் அழைப்பு அதற்குச் சினத்தை மூட்டியது.

"உங்களுடைய உழைப்பும், வாழ்க்கையும்....... நான் காகமாகப் பிறந்ததற்காக ஏங்கிச் சாகிறேன்.... .

அதோ, பாருங்கள். அந்தக் குயிலும் நானும் ஒரே நிறந்தான். நான் கரைகிறேன்; அது கூவுகின்றது.

அதன் குரலைப் பிரதி பண்ணிப் பாட மனிதன் ஆண்டாண்டு காலமாகப் பாடுபட்டுவருகின்றான்..."

"அதற்குக் குடும்பமா? ....பொறுப்பா? ... தனக்காக மாத்திரமே வாழுஞ் சுயநலச் சிறுக்கி!"

" உங்களுடைய விளக்கம் எனக்குத் தேவையில்லை. நான் அந்தக் குயிலிடம் சங்கீதம் கற்று வரப் போகிறேன். கரைந்து, தெத்தித்திரியும் நமது இனத்திற்கு ஏற்பட்டுள்ள கறையை எனது இசை வெள்ளத்தாற் போக்குவேன்."

" பைத்தியக்காரத் தனம் "

சுற்றத்தவரின் ஆலோசனைக்குச் செவி சாய்க்காது அது எங்கேயோ பறந்து சென்றது.

எவ்வளவோ முயன்றும், காகத்திற்குச் சங்கீதம் வரவில்லை.

அதைக் கண்டவுடனேயே குயில்கள் தமது குரல் இனிமையின் இரகசியத்தைச் சொல்லாது பறந்து சென்றன.

ஏகலைவன் பாணியில் வித்தை கற்றும் பயனில்லை.

"முயற்சி திருவினையாக்கும்" என்கிற நம்பிக்கை பாழாகியது. தனது சொந்த ஊருக்கே திரும்பி வந்தது.

வழியில், ஒரு வேப்ப மரத்தின் கீழ் ஒரு குயிற் குஞ்சு குற்றுயிராகக் கிடப்பதைக் கண்டது.

அதற்குச் சற்று சமீபமாக வந்தது.

" உன்னைக் கும்பிட்டேன். என்னை ஒன்றுஞ் செய்யாதே. என் தாய் செய்த குற்றத்திற்காக என்னைப் பழி வாங்க வேண்டாம்." என்று அழாக்குறையாகச் சொல்லிற்று.

"நீ ஏன் அழவேண்டும்; ஏன் என்னைக் கும்பிட வேண்டும்? நான் ஒரு தீங்கும் செய்யமாட்டேன் ....

நாங்கள் இருவரும் சகோதரர்களாக வாழ்வோம். நீ அழகாகப் பாடுவாயே... அந்தக் கலையை எனக்குக் கற்றுத் தா " என வினயமுடன் கேட்டது.

"நாங்கள் பாடுகின்றோமா? நாங்கள் பாடுகின்றோம் என்பது சிலருடைய வீண் கற்பனை.."

" நீ குஞ்சாக இருப்பதனால் விஷயந் தெரியாது சொல்லுகின்றாய் போலும்.... நீ சங்கீதம் கற்பதற்கு யாரிடம் தீட்சை பெறுவதாக இருக்கிறாய்? "

" குஞ்சாக இருப்பதனாலேதான் உண்மையைச் சொல்லுகின்றேன்.... நான் ஏன் குயிலாகப் பிறந்தேன் என்று வாழ்நாளெல்லாம் அழுது கொண்டே இருப்பேன்...... எங்கள் வர்க்கத்தாருக்கு கூடு கட்டத் தெரியாது. திருட்டுத்தனமாக உங்கள் வர்க்கத்தாருடைய கூடுகளில் முட்டையிடுகின்றனர்.

ஆகையினால், குயிற் குஞ்சுகளில் பல செத்து , ஒரு சிலவே தப்புகின்றன. தப்பும் குஞ்சுகளும் என்னைப்போல கொத்து வாங்கி, என்னைப் போல குற்றுயிராகவே பிழைக்கின்றன.

இந்நிகழ்ச்சியினால் ஏற்படுந் தாழ்வுச் சிக்கலிலிருந்து நாங்கள் என்றுமே மீளுவதில்லை........ இதனை நினைந்து, நினைந்துவாழ் நாள் பூராகவும் அழுது கொண்டே இருக்கின்றோம்.... தனிமையின் அழுகுரலைச் சங்கீதம் - இனிமை - என்று மற்றவர்கள் நினைத்துவிடுகின்றார்கள்.... உண்மையைச் சொன்னால், உங்கள் வர்க்கத்தாரைப்போன்று இனம் பெருக்கி வாழத்தெரியாத பாவி நான்..."

வேதனைப் பொருமல்.

இதனைச் சொல்லிக் கொண்டிருப்பதற்கிடையில், ஒரு காகம் பறந்து வந்து, அந்தக் குயிலைக் கொத்தத் தொடங்கிற்று.

"அது குஞ்சு. அதன் உயிரை ஏன் பறிக்கின்றாய்? ... தாய் செய்த குற்றத்திற்கு இதற்கா தண்டனை?"

" ஓகோ, நீதான் சங்கீதப் பயித்தியங் கொண்டலையுங் காகமா? எனது கூட்டில் வாழ்ந்து, எனது கணப்பினை இது சுகித்துள்ளது. நான் அரும்பாடுபட்டு என் குஞ்சுகளுக்காகச் சேகரித்த உணவுகளை இது பகிர்ந்துள்ளது. இது உயிர் வாழ்வதால், என் சந்ததியின் வருங்காலத் தாய்மார் ஏமாறுவார்கள்; மேலும் வருங்காலக் குஞ்சுகளின் உணவும் வஞ்சிக்கப்படும்..." என்று ஆவேசமாகக் கூறி, ஆத்திரம் தீரும்வரை அக்குயிற் குஞ்சைக் கொத்திச் சென்றது. தூரத்தில் ஒரு குயில் அழகாகப் பாடிக் கொண்டிருந்தது.

" அதோ, அது கூட எனது அம்மாவாக இருக்கலாம். பெற்ற தாயையே அறியாது வாழும் அநாதைகள் நாங்கள்.!" என்று ஈனக்குரலில், உயிர் பிரிந்தும் பிரியாத நிலையிற் குஞ்சு சொல்லிற்று.

" நீ இங்கே உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றாய்... உன் அம்மா, எங்கேயோ இருந்து பாடிக் கொண்டிருக்கிறாளா? .... என் வர்க்கம் எவ்வளவோ மேல்.."

" கா....கா....கா!" என்று கரைந்தபடி தனது சுற்றத்தைத் தேடி அந்தக் காகம் பறந்தது.

**- நன்றி : அக்கரை இலக்கியம். வாசகர் வட்டம் - சென்னை.**

**டிசெம்பர் - 1968**

# மணிக் கதைகள்

ஜ.சாந்தன்



### மண்ணும் முளையும்

மீண்டும் ஊரடங்கு அறிவித்தல்.
இடம் பெயரச் சொல்லும்
எச்சரிக்கைகளால்............ எந்தநேரமும்
ஒரு ஊழி தொடங்கலாம்.......

தெருவில் மூட்டை முடிச்சுக்களும்,
முகத்தில் கவலைகளுமாய்ச்
சனங்கள்........

இடையில் ஒரு மூச்சில்லு வண்டி.
பயணிகளிருக்கையில் இரண்டு
பெண்கள். மருத்துவமனையால் வீடு
திரும்புங் கோலத்தில்

ஒரு இளம் பெண். அருகில்
துணையாய் ஒரு மூதாட்டி.
அவள் அணைப்பில், துணிச்
சுருளிற் துயிலும் ஒரு புத்தம் புதுப்
பூக்குஞ்சு.

### இளங் கன்று / இசைவாக்கம்

பள்ளிப் பக்கம் பிரச்சினை.
"படிப்பும் வேண்டாம். பள்ளியும்
வேண்டாம்...... பிள்ளை
வந்திடட்டும். கடவுளே..."
பெற்றவர்கள் நேர்ந்தார்கள்.

பொம்மர்களும், ஹெலிகளும்
போய்த் தொலையப் பிஞ்சுகள்
வந்தார்கள். பள்ளியின் வாயிலில்
பதற்றமும், பயமுமாய்
பார்த்திருந்தவர்கள் பிள்ளைகளை
அணைத்துக் கொண்டார்கள்.

" பயந்திட்டியா ராசா?"

" அம்மா நாலு குண்டுதான்
போட்டவங்கள்....... ஒருக்கா ஒரு
பொம்மர் பதிஞ்சுது. ஆனா குண்டு
போடாம எழும்பி விட்டுது.....

அது ஏன் அம்மா?"

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(14 ஆம் பக்க தொடர்ச்சி...)




வயலுக்குப் போய் புல் வெட்டி வருகிறார். பால் எடுப்பது மட்டும் தியாகு. அதைக் கொடுப்பதற்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள். காலையில் பாலைக் கொண்டுபோய் பால் சேகரிக்கும் இடத்தில் கொடுத்து விட்டுப் பாடசாலைக்குப் போகும் பிள்ளைகள் மாலையில் வீட்டுக்கு வந்து, தாயுடன் சேர்ந்து புல் வெட்டிவரப் போகிறார்கள். அல்லது மாட்டுக் கொட்டகையைத் துப்புரவு செய்கிறார்கள். கையில கொஞ்சக் காசிருந்தால் பிள்ளைகளை ரியூசனுக்கு அனுப்பிப் படிப்பிக்கலாம். எனக்கும் பெரிய அளவில் படிப்பு ஓடாது. படிக்கிற வயசில இயக்கத்துக்குப் போயிற்றன். இயக்கம் இருந்திருந்தால் எதுவோ நடந்து கொண்டிருக்கும். இப்ப வெறுங்கையோட இருக்கிறன் என்று "கண் கலங்க மட்டுமே முடியுது" என்று சொல்லி விட்டு கண்களைத் துடைத்துக் கொள்கிறார்.

இந்தக் காட்சியைப் பார்க்கும்போது உங்கள் இதயம் கரைந்தொழுகக்கூடும். தவிர்க்க முடியாமல் உங்கள் கண்களில் வடியும் கண்ணீரைத் துடைத்துக் கொள்ளலாம். ஆனால், மனதில் படிந்துள்ள துயரத்தை அப்படி எளிதாகத் துடைத்து விடமுடியாது.

அதைப்போலவே தியாகராஜாவின் துயரத்தையும் எளிதாகப்போக்கிவிட முடியாது. ஆனால், பாதிக்கப்பட்டிருக்கும் தியாகராஜாவின் குடும்பத்துக்குப் பொருத்தமான உதவிகளைச் செய்து உதவுவதன் மூலமாக நமது கவலைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும். அந்த உதவிகள் தியாகராஜாவின் குடும்பத்தில் சூழ்ந்திருக்கும் துயர இருளைப் போக்கும். இப்படிச் செய்யும்போது இரண்டு தரப்பிலும் படிந்திருக்கும் துயரம் தீர்ந்து விடும். ஒரு பேராறுதலை நாமே நமக்குள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

★★★

போர் உருக்குலைத்த ஆயிரக்கணக்கான குடும்பங்களில் ஒன்று தியாகராஜாவினுடையது. தம்மை மீள ஒழுங்குபடுத்திக்கொள்ள முடியாத அளவுக்கு பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது. சிறிய பாதிப்புக்களைச் சீர்ப்படுத்திக் கொள்ளலாம். பெரும் பாதிப்புக்களை நிமிர்த்தி, நிவர்த்தியாக்கிக் கொள்வது கடினம். அதற்குப் பொருத்தமான உதவிகள் இருந்தால் மட்டுமே சீர் செய்துகொள்ள முடியும். இல்லையென்றால் வீழ்ந்த ஆலமரத்தைப் போல எழ முடியாமல் கிடக்க வேண்டியதுதான். ஆனால், எதிர்காலத்தின் தளிர்களாக இருக்கும் குழந்தைகளை வைத்துக் கொண்டு, ஒருவர் அப்படி எழுந்திருக்காமல் இயங்காமல் இருக்க முடியுமா?

தியாகராஜா கேட்பது அதிகமாக ஒன்றுமே இல்லை. இன்னும் இரண்டு மாடுகள் கிடைத்தால் அது பெரிய உதவியாக அமையும் என்பதைத்தான். எவ்வளவு பெரிய வாழ்க்கைக்குச் சொந்தக்காரன் இன்று இரண்டு மாடுகளை வாங்கித் தாருங்கள் என்று கேட்கிறான் என்றால், இது வாழ்க்கையின் விசித்திரமா? காலத்தின் கோலமா? அல்லது வரலாற்றின் விளையாட்டா?

"நடக்கமுடியாதவன் ஓட்டப்பந்தயத்தில் தங்கப் பதக்கம் வாங்க முடியுமா? என்று சிலர் கேட்கிறார்கள். ஆனால், ஓட்டப்பந்தயத்தில்தான் பதக்கம் வாங்கவேணும் எண்டில்லை. என்னாலும் வெற்றிப்பதக்கத்தைப் பெற முடியும். ஆனால், அதற்கு உங்களுடைய உதவியும் ஒத்துழைப்பும் தேவை" என்கிறார் - தியாகு.

இப்போது சொல்லுங்கள், இந்த மனிதருக்காக என்ன செய்யலாம் என்று.

(06 ஆம் பக்க தொடர்ச்சி...)




முன்பு, முத்துகுளித்தல், சங்கு வாணிபம் என்பவை நடைபெற்ற செய்திகளும் வரலாற்று தொல்லியல் மேலாய்வுகளின் ஊடாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிட வேண்டியது. தீவுகளின் முக்கிய இயற்கை மரபுரிமையாக இவை காணப்படுகின்றன.

தீவுகள் கடல்காற்றின் வெப்ப நிலையால் பேணப்படுபவை, புவி வெப்பமாதல், வறட்சி என்பனவும் தீவுகளின் பொதுவான வானிலையாக உள்ளது. மழை வீழ்ச்சியானது பருவத்தில் வட கீழ் பருவப்பெயர்ச்சி காற்றசைவின் ஊடாக எடுத்து வரப்படுகின்றது. லைடன் தீவு உள்ளிட்ட தீவுகள் அதிக வறட்சி கொண்ட மாதங்களையும் குறைவான மழைவீழ்ச்சி கொண்ட மாதங்களையும் எதிர்கொள்பவை. எனவே அதற்கேற்றாற் போலவே வாழ்வு முறையும் அமைந்துள்ளன. அதனால் புகையிலை போன்ற வறள் வலயத்துக்குரிய பயிர் நிலங்களே அங்கு அதிகம் காணப்படுகின்றன.

மேலும், வேலணை - யாழ்ப்பாண பயணப் பாதை முகப்பில் உள்ள கடல்நீர் ஏரிகள் முக்கியமானவை. இவற்றில் சில தற்பொழுது நன்னீராகவும் ஏரிகளாகவும் அரசினால் பேணப்படுகின்றன. அத்துடன் சிறுகடல் மீன், இறால் பிடிகளுக்குரிய வளங்களைக் கொண்டதுடன், அங்கு பருவத்திலும் அதன் பிறகும் ஏராளமான வலசைப் பறவைகள் இரை, இனப் பெருக்கம் என்பவற்றின் பொருட்டு கூடுகின்றன. அங்குள்ள கண்டல் நிலங்களில் அதிகமாக பறவைகளை அவதானிக்கலாம். குருவிக் காடு, வல்லைவெளி போன்று யாழ்ப்பாணத்தின் பறவை அவதானத்துக்கு உரிய இடங்களாக இந்த கடல் நீர் ஏரிகளை குறிப்பிடலாம்.

அத்துடன் கடல்நீர் ஏரிகளின் தொடர்ச்சியாகக் காணப்படும் கண்டல் நிலங்களும் முக்கியமானவை. தீவில் உள்ள வறள் வலயத்தில் முட்புதர் சிறு காடுகள், கண்டல் நிலத்தாவரங்கள் மற்றும், ஈஞ்சு, நாகதாளி, ஆமணக்கு, இராவணன் மீசை, கள்ளி, பிரண்டை போன்ற வறள் நிலத்தாவர வளங்களும் பரவலடைந்திருக்கின்றன.

மண்வளத்தைப் பொறுத்தவரையில் வேலணை மயோசின் தாய்ப்பாறைக்குரிய நரை மணல் மண்ணைக் கொண்டுள்ளது. அத்துடன் களிமண்ணும் கிடைக்கின்றது. கடற்கரையோரங்களில் சிற்பி, ஊரி கலந்த மண்வளம் காணப்படுகின்றது.

நிலவமைப்பானது ஒரு அரை இயற்கை துறை முகத்துக்குரிய கடல் பிட்டிகள், நிலவளைவுகளைக் கொண்டு காணப்படுகின்றது. லைடன் தீவின் பிரதான பெருந்துறையாக ஊர்காவற்றுறையும் ஏனைய மீன்பிடி மற்றும் போக்குவரத்து தோணி, படகுத்துறைகளும் காணப்படுகின்றன. அத்துடன் மீன் பிடிக்கான மீன் படும் கடல் பிட்டிகளும், தீவுக்கு அருகில் காணப்படுவதாக புவியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வகையில் லைடன் தீவினதும் அதன் பாகங்களினதும் புவியியற்கூறுகளின் அமைவும், இருப்பும் அதன் கடந்தகால அரசியல், பொருளாதார பண்பாட்டு வரலாற்றையும் குடிகளின் இருப்பையும், பண்புகளையும் தீர்மானித்தன. வரலாற்றையும், தொல்கதைகளையும், கலாசார மரபுகளையும் ஆராயும்போது இப்புவிச்சூழல் லைடன் தீவினது ஊர்காவற்றுறை பட்டினத்தினதும் ஏனைய கிராமங்களினதும் வாழ்வியலை எவ்வாறு கட்டமைத்தன என்பதை வரலாற்றுக் காலத்திலும் சரி, நிகழ்காலத்திலும் சரி தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

கடந்த கால போர், லைடன் தீவை மிக மோசமாக சிதைத்துள்ளது. இயற்கையான புவியல் அம்சங்களும் வளங்களும் சரி, செயற்கையாக உருவாக்கப்பட்ட புவியியல் அம்சங்களும் சிதைவடைந்து போயுள்ளன. அதற்கு பிரதான காரணம், போரும், நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளும் தீவின் குடித்தொகையை பெருமளவில் குறைத்தமையாகும். 2003 ஆம் ஆண்டு பிரதேச செயலகம் தரும் குடித்தொகை தகவலின்படி ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் குடிகளே இருந்துள்ளனர். அது இன்றும் இன்னும் குறைந்து போயுள்ளது, தீவின் பலபாகங்களில் பழைய வீடுகளும், நிலங்களும் பற்றை மண்டி கிடக்கின்றன. போரும் அதனூடான வாழ்வும் மரபார்ந்த குடிவாழ்வை சிதைத்து, சனத்தொகையையும் வாழ்வுத் தொடர்ச்சியையும் அங்கு மெல்ல மெல்ல இல்லாது செய்துள்ளது. மீண்டும் அவ்வாழ்வை மீளக்கட்ட புவியியல் ரீதியான மீள் கட்டுமானமும் இயற்கை மரபுரிமைகளை பாது காத்தல், மீள கட்டுதல் போன்ற வேலைகளும் அங்கு செய்யப்பட வேண்டும். நீர்வளமும், நில வளமும், கடல் வளமும் அங்கே சமநிலையாக பேணக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காவிகளின் அரசியல்



ஆதங்கன்

“இந்துக்கள் தமது சாந்த குணத்தோடு இருந்தால் அழிந்துதான் போவார்கள். முஸ்லிம்கள் போல நாமும் வன்முறையை கையில் எடுக்க வேண்டும். முஸ்லிம் பெண்களின் பிணங்களைக்கூட புணர்ந்தால்தான் அவர்களுக்கு புத்தி வரும்” இப்படி அதி வக்கிரமான வன்முறை வரிகளுக்குச் சொந்தக்காரர் தான் இப்போது இந்தியாவின் மிகப்பெரிய மாநிலமான உத்தரப்பிரதேசத்தின் முதலமைச்சர். யோகி ஆதித்யநாத் என்றாலே அடவாடிதான். அப்படிப்பட்ட அடாவடிக் காவிச் சந்நியாசியை முதலமைச்சர் கதிரையில் ஏற்றி அழகு பார்த்திருக்கிறது மோடி அரசு.

யோகி ஆதித்ய நாத் எப்படிப்பட்டவர் என்பதை விளக்க பெரிதாக உதாரணங்கள் தேவையில்லை. இலங்கையின் பொதுபல சேனாவைச் சேர்ந்த ஞானசார தேரரை மனக்கண் முன் கொண்டுவந்தாலே போதும். ஞானசார தேரரின் இந்தியப் பதிப்புத்தான் இந்த யோகி ஆதித்ய நாத். இருவருக்கும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. இருவருமே தாம் பின்பற்றும் மதம் அன்பை போதித்தாலும், வன்முறைதான் மதத்தை வளர்க்கும் என்ற எண்ணம் கொண்டவர்கள். காவியுடை பூண்டு சந்நியாசியாக இருந்தாலும் உலக சுகபோகங்களை அனுபவிப்பதில் அதீத நாட்டம் கொண்டவர்கள்.

இருவருமே தமது ஜென்ம விரோதிகளாக முஸ்லிம் மக்களையே குறிவைப்பவர்கள். முஸ்லிம் மக்களின் வழிபாட்டிடங்களை அழித்து, அந்த இடங்களில் தமது மதம் சார்ந்த வழிபாட்டிடங்களை அமைக்க வேண்டும் என்பதில் தீவிரமாக இயங்குபவர்கள். அரசியலில் தமது கரம் ஓங்க வேண்டும் என்பதற்காக யாரையும் பலி கொடுக்கவும் தயங்காதவர்கள். இப்படி பல ஒற்றுமைகளைக் கொண்டிருக்கும் இருவரில் ஞானசார தேரரை விடவும் ஆதித்ய நாத் பல அனுகூலங்களைக் கொண்டிருக்கவும் செய்கிறார்.

பொதுபல சேனாவை மகிந்த அரசே உருவாக்கி பின்புலமாக நின்ற போதும், அந்த ஆதரவுத்தளத்தை வெளிப்படையாக போட்டுடைக்கவில்லை. வெளிப்பார்வைக்கு பொதுபல சேனாவை ஒரு வேண்டாப் பொருளாகவே மகிந்த அரசு காட்டிக் கொண்டது. அதற்கேற்றாற்போல பொதுபல சேனாவும் அவ்வப்போது மகிந்த அரசுக்கு எதிரான கருத்துக்களை கொட்டி, தங்கள் சூதிருக்குள் மகிந்த இல்லை என்பது போல நடந்து கொண்டது. அதனால் அரசியல்ரீதியான நடவடிக்கைகளில் பொதுபல சேனாவால் பலமாக வெற்றியடைய முடியவில்லை. ஆனாலும் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையின் போது, பொதுபல சேனாவின் வன்முறைகளை மகிந்த அரசு கண்டுகொள்ளாமல் இருக்கும் கணங்களில் மட்டும் இருதரப்புக்குமான கள்ள உறவின் நெருக்கம் வெளிப்படையாகத் தெரியவரும். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் பொதுபல சேனா தனக்கும் மகிந்தவுக்குமான இரகசியத் தொடர்பை அம்பலமாக்கியது. ஆனால் மகிந்த தரப்பின் படுதோல்விக்கு பொதுபல சேனாவின் ஆதரவும் ஒரு காரணமாகிப் போனதுதான் மிச்சம்.

எப்படி பொதுபல சேனா என்ற நச்சு அமைப்பு ஒரு நாட்டின் மதச் சுதந்திரத்தையும், பிற மதங்களின் வழிபாட்டு உரிமையையும் ஒடுக்க நினைத்ததோ, அதே கைங்கரியத்தையே யோகி ஆதித்யாவும் செய்தார். ஆனால் அவருக்கு ஆர்.எஸ்.எஸ் அமைப்பினதும், பாரதிய ஜனதாக் கட்சியினதும் நேரடியான - பகிரங்கமான - ஆசீர்வாதம் இருந்தது.

இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம் இது. கோரக்நாத் ஆலயத்தால் நடத்தப்பட்டுவரும் கல்லூரியின் சில மாணவர்கள், துணி வாங்க கடைக்கு வந்தபோது, கடைக்காரருடன் சச்சரவு ஏற்பட்டு, வார்த்தைகள் தடித்தன. கடைக்காரர் கைத்துப்பாக்கியை எடுத்து மிரட்டினார்.

சம்பவம் நிகழ்ந்த இரண்டு நாள்களுக்குப் பிறகு, ஒரு சந்நியாசியின் தலைமையில், கடைக்காரருக்கு எதிராக தீவிரமான போராட்டம் வெடித்ததாக அந்தப் பகுதியின் காவல்துறை அதிகாரி தெரிவித்தார்.

அந்த சந்நியாசி வேறு யாருமில்லை, யோகி ஆதித்யநாத்தான். இந்தச் சம்பவத்திற்கு சிறிது காலத்திற்கு முன்பு, அதாவது, 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி தான் “நாத் சம்பிரதாயத்தின்” தலைமை மடமான கோரக்பூர் ஆலயத்தின் தலைமையை ஏற்றுக்கொண்டு, தனது குருவான அவைத்யநாத்திடம் தீட்சை பெற்றார்.

கோபக் கனல் வீசும் இளைஞராக, கோரக்பூரின் அரசியலில் யோகி ஆதித்யநாத் அதிரடியாக நுழைந்தார்.

கோரக்பூரின் வலிமையான அரசியல் தலைவர்களாக திகழ்ந்த ஹரிஷங்கர் திவாரி மற்றும் வீரேந்திர பிரதாப் ஷாஹியின் பிடி தளர்ந்து வந்த நேரத்தில் யோகி ஆதித்யாநாத்தின் அரசியல் பிரவேசம் நிகழ்ந்தது.

இளைஞர்கள், குறிப்பாக கோரக்பூர் பல்கலைக்கழக மாணவர்கள், “கோபக் கனல் கொண்ட இளைஞரான” ஆதித்ய நாத்தால் ஈர்க்கப்பட்டனர்.

இந்து மகாசபையின் தலைவராகவும் இருந்த ஆதித்யநாத், மஹந்த் திக்விஜயநாத்துடன் இணைந்து பணியாற்றினார்.தற்போது, இந்துத்துவாவுடன் இணைத்தே ஆதித்யநாத் பார்க்கப்படுகிறார். டில்லி சட்டமன்ற தேர்தலுக்கு பிறகு பீகாரிலும் தோல்வியை தழுவிய பாரதிய ஜனதா கட்சி, உத்தரப் பிரதேச சட்டமன்ற தேர்தல் குறித்து கவலைப்பட்டது. எனவே, ஆதித்யநாத்தை முதலமைச்சர் வேட்பாளராக அறிவிப்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் நிலவிவந்தன. கடந்த ஆண்டு மார்ச் மாதம் கோரக்பூர் ஆலயத்தில் நடைபெற்ற இந்து மகா சபை கூட்டத்தில் ஆர்.எஸ்.எஸ்-இன் மூத்த தலைவர்கள், ஆதித்யநாத்தை முதலமைச்சராக்குவது என்று உறுதிபூண்டனர்.

“1992 ஆம் ஆண்டு ஒருமுறை சரியான பதிலடி கொடுத்தோம், தற்போது மத்தியில் நமது ஆட்சி தான் இருக்கிறது. உச்ச நீதிமன்ற தீர்ப்பு நமக்கு சாதகமாக வந்தாலும், மாயாவதி மற்றும் அகிலேஷின் ஆட்சி அமைந்தால் அயோத்தியில் இராமர் ஆலயம் கட்ட முடியாது. எனவே, நமது இலட்சியம் நிறைவேற வேண்டுமென்றால், ஆதித்யநாத் முதலமைச்சராக வரவேண்டும்,” என்று அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

உத்தராகண்ட் மாநிலம், கட்வால் கிராமத்தில் பிறந்த அஜய் சிங் பிஷ்ட், யோகி ஆதித்யநாத் ஆக மாறுவதற்கு முன்னதான அவரது வாழ்க்கை குறித்து அதிக தகவல்கள் இல்லை. ஹேமவதி நந்தன் பகுகுணா பல்கலைக்கழகத்தில் அறிவியலில் இளங்கலை பட்டப்படிப்பு படித்திருக்கும் ஆதித்யநாத்தின் குடும்பத்தினர் போக்குவரத்து தொடர்பான தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

மிகவும் பிரசித்தி பெற்ற கோரக்பூர் ஆலயம், 52 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. ஆண்டுதோறும் மகர சங்கராந்தி அன்று, எல்லா மதத்தையும் சேர்ந்த மக்களும் அங்கு வந்து பொங்கல் படைப்பார்கள். மகந்த் திக்விஜயசிங்கின் காலத்தில், கோரக்நாத் ஆலயம், அரசியலின் முக்கிய மையமாக மாறியது, அவருக்கு பிறகு மஹந்த் அவைத்யநாத் அதை முன்னெடுத்துச் சென்றார். மக்களிடையே நேரடியாக தொடர்பு கொள்வதுதான் ஆதித்யநாத்தின் சிறப்பம்சம்.இந்த ஆலயத்தின் பிரதான பூசகராக இருக்கும் ஒருவர் உத்திரபிரதேச மாநில முதல்வாரகுமளவுக்கு இந்துத்துவத்தின் கரங்கள் இந்தியாவை பலமாக ஆக்கிரமித்திருக்கின்றன. அதுவும் வன்முறை மூலம் பிற மதங்களைப் பழிவாங்கும் எண்ணம் கொண்ட ஒருவரை பாரதிய ஜனதாக் கட்சி முதல்வராக்கி தன் எண்ணத்தை ஈடேற்ற முனைகின்றது.

யோகி ஆதித்யநாத்தின் இந்த முதல்வர் தெரிவின் மூலம் பலமான ஒரு செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. இனிவரும் நாள்கள் சிறுபான்மை மதத்தினருக்கு - குறிப்பாக முஸ்லிம் மதத்தினருக்கு - உத்திரப்பிரதேசத்தில் பேராபத்து நிறைந்ததாக இருக்கப் போகின்றது. இந்தியப் பிரதமர் மோடிக்கு மிக நெருக்கமான ஆதித்ய நாத், மெல்ல மெல்ல இன்னொரு மோடியாக வருங்காலத்தில் எழுச்சி பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் பாரதிய ஜனதாக் கட்சியும், அதனைப் பின்னின்று இயக்கும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் முன்னைய தலைவர்களை விடவும் ஆக்ரோஷமும் வன்முறை எண்ணமும் கொண்டவர்களையே தமது தலைவர்களாக உருவாக்குகின்றன.

இந்தியப் பிரதமராக இருந்த அடல் பிகாரி வாஜ்பாஜ் மிக மென்மையாக போக்கை கொண்டவராக இருந்ததனால், பின்னர் போர்க்குணம் கொண்டவரான அத்வானி பாரதிய ஜனதாக் கட்சியின் மையமாக மாறினார். அத்வானியை விடவும் மதவாதமும், ஆக்ரோஷமும் கொண்டவராக எழுச்சி பெற்றதால், அத்வானியின் பிரதமர் பதவிக் கனவில் மண்ணைப் போட்டு மிதித்தபடி பாரதிய ஜனதாக் கட்சியையும், பிரதமர் பதவியையும் தன் காலடியில் கொண்டுவர மோடி யால் முடிந்தது. இப்போது “முஸ்லிம் பெண்களின் பிணங்களைக் கூட புணருங்கள்” என்று கூச்சலிட்ட அதிவன் முறையாளரான ஆதித்ய நாத் பாரதிய ஜனதாவின் இன்னொரு அடையாளமாக எழத் தொடங்கியுள்ளார்.


இந்தியா, கடவுளர்களின் பெயரால் குருதிச் சகதிக்குள் விழத் தொடங்கிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவும் ஒரு மாறுதல்

**பார்வை நயம்-15**



**- கணபதி சர்வானந்தா**

படலை திறக்கும் சத்தம் கேட்டது. முத்தையா மாஸ்டர் தலைவாசல் திண்ணையிலிருந்த சாக்குக் கட்டிலிலிருந்து தலையை நீட்டி எட்டிப்பார்த்தார். மகள் அமிர்தகலா சைக்கிளைப் பிடித்தபடி நின்றிருந்தாள்.

நாய்களிரண்டும் வாசல் வரை ஓடிச்சென்று வால்களை ஆட்டி அவளை வரவேற்று அழைத்து வந்தன. நாய்களுக்குப் பயந்த சாவலும், பேடும் அங்குமிங்குமாய்த் தலை தெறிக்க ஓடின.

அன்று வெள்ளிக்கிழமை மாலை. மனைவி யோகம்மா அரிசி திரிக்க மில்லுக்குப் போய்விட்டாள். வழமைபோல அமிர்தகலா வந்திருக்கிறாள். திருமணமாகி ஒன்றரை வருடமாகியும் அவள் சிலவற்றைப் புரிந்துகொள்ள முடியாதவளாக, தான் பிரச்சினையோடு இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுகிறாள். "ஒரேயொரு மகளைத் தான் கஷ்ட நஷ்டம் தெரியாமல் வளர்த்ததன் பயன் அது" என்று கூட முத்தையா மாஸ்டர் எண்ணுவதுண்டு.

" எனக்கு அங்கை இருக்கேலாது. நான் உங்களோடை இங்கை வந்திருக்கப்போறன்" என்று அவள் சொல்லும்போது, "விபரீதமாக ஏதாவது நடந்துவிடக்கூடாது" என முத்தையா மாஸ்டர், ஆண்டவனை வேண்டிக் கொள்வதுமுண்டு.

அவளை அந்த வாழ்க்கைக்குத் தயாரிக்காதது தன் குற்றம் என்று அவர் சில சமயம் சிந்திப்பதுவும் உண்டு.

அமிர்தகலா சிறுமியாயிருந்த போது, அக்கம் பக்கத்துப் பிள்ளைகளுடன் முற்றத்தில் விளையாடுவாள்.

விளையாட்டின்போது ஓடி வந்து மற்றவர்கள் மீது குற்றம் சொல்லிவிட்டுச் செல்வது அவள் இயல்பு. அது போலத்தான் இப்போதும், "இவர் அப்படி இல்லை. அவர் வீட்டு ஆக்கள் சரியாக இல்லை. அவை பேசுறது எனக்குப் பிடிக்கேல்லை. நித்திரையிலை சத்தம்போட்டுக் குறட்டை விடுகிறார். மாமி சும்மா இருக்கவிடாமல் அடிக்கடி வேலை சொல்லுறா. மாமாக்கு சாப்பாடு வாய்க்குப் பதமா இல்லை. உப்புக் காணாது எண்டுறார். அதாலை என்னாலை அங்கிருக்கேலாது" என்ற வழமையான பல்லவிகளுடன்தான் இன்றும் வந்திருக்கிறாள்.

"பொறுக்கவேணும் பிள்ளை, சமாளிக்கிறதுதான் முக்கியம்." அன்று தொட்டு இப்படித்தான் சாக்குப் போக்குச் சொல்லி முத்தையா மாஸ்டர் நிலைமையைச் சமாளித்துக் கொண்டு வருகிறார். அதே போல இன்றும் அவளுக்குப் புத்திமதி சொன்னார். அவர் பார்வை பேப்பருக்குள் புதைந்திருந்தது. கேட்டும் கேளாததுபோல் இருந்தவள்,

மில்லிலிருந்து வந்த யோகம்மாவின் பின்னால் எழுந்து போனாள். குசினிக்குள்ளிருந்தும் சத்தம் போட்டு அழுவது கேட்டது. அவள் சொல்வதை மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தாள் யோகம்மா. பின்னர் தான் பார்சல் பண்ணி வைத்திருந்த முட்டை மா, பயித்தம் பணியாரம், வாழைச் சீப்பு என்று எல்லாவற்றையும் எடுத்துக் கொடுத்து வாசல்வரை சென்று "சைக்கிள்ளை போறது கவனம்" என்று சொல்லி வழியனுப்பிவிட்டு வந்தாள்.

நீண்ட நாள்களாக அமிர்தகலா வரவில்லை. இடையிடையே யோகம்மாவுடன் தொலைபேசியில் பேசுவாள். முத்தையா மாஸ்டருக்கு, "அவள் அப்படி இருப்பது நல்லது" என்று தோன்றியது. யோகம்மாதான் போய்ப் பார்த்துவிட்டு வந்தாள்.

"வழமையான அவள் பல்லவியில் மாற்றமில்லை" என்று சொன்னாள் யோகம்மா.

இன்று சனிக்கிழமை. படலையடியில் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. அமிர்தகலாவை இறக்கிவிட வந்த அவள் கணவன் அவசரமாக வெளியே போய்விட்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனான். அமிர்தகலா முத்தையா மாஸ்டரிடம் வராது நேரே வீட்டுக்குள் போய்விட்டாள். அது அவருக்கு புதுமையாக இருந்தது.

நீண்ட நேரம் தாய் யோகம்மாவுடன் "குசு.. குசு" என ஏதோ பேசிக்கொண்டே இருந்தாள். யோகம்மா வழமைபோல் மௌனமாக இல்லை.

அவளும் பதிலுக்கு ஏதோ கதைப்பது கேட்டது. அவர்கள் பேச்சொலி வழமைபோல் உக்கிரமானதாக இல்லை. சாந்தமாக இருந்தது. வினா விடையாக இருப்பதாகத் தெரிந்தது. மீண்டும் படலையடியில் மோட்டார் சைக்கிள் சத்தம்.

அமிர்தகலாவை அவள் கணவன் ஏற்றிக் கொண்டு செல்ல வந்திருந்தான். "போட்டு வாறன்" என தலையை குனிந்தபடி அமிர்தகால சென்றது முத்தையா மாஸ்டருக்கு ஆச்சரியமா இருந்தது.

யோகம்மா வாயில் பல நாள்களுக்குப் பின்னால் சிரிப்பொன்றை முத்து மாஸ்டர் கண்டார். "என்னவாம்? வந்திட்டுப் பேசாமல் போறாள்" முத்து மாஸ்டர் கேட்டார். "கிளினிக்குப் போட்டு வருகினம். கலா கெற்பமாம்" யோகம்மாவின் முகம் சிவந்திருந்தது.

துடக்குக் கழிவு. நாள் கோயில். சாப்பாடு தீத்துதல், பல்லுக் கொளுக்கட்டை. வித்தியாரம்பம் என முத்து மாஸ்டர்தான் எதிர்காலத்தில் மிதந்து கொண்டிருந்தார்.

இனிமேல் அமிர்தகலா தன்னைப் பற்றிச் சிந்திக்க மாட்டாள். அவள் மூன்றாவது ஒன்றைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டாள். இதுவரை இருந்த சின்னச் சின்ன விடயங்களெல்லாம் இனிமேல் அவள் கண்களுக்குத் தெரியப் போவதில்லை. அவள் ஒரு புது உலகத்தினுள் பிரவேசிப்பதை யோகம்மா உறுதி செய்து கொண்டாள். அவள் பார்வை மாறும். அவள்மேல் மற்றையவர்கள் பார்வையும் மாறும்.

உண்மையை உண்மையாகப் பார்த்தால் உலகம் உய்யும். அதுவும் ஆன்மிக வயப்பட்டதே.

## உக்கிப்போகாத நம்பிக்கை

உக்கிப்போன
நம்பிக்கைச்
சொற்களோடும்
தம் புலவைக்
கைவிடாத்
தாகத்தோடும்
தரையில்
குந்தியழும்
சொந்த
நில மீட்புக்
கனவுகளுக்கு
உலகமே
உன் பதில்
என்ன
வாழ்வுக்காய்
வெறு வெளியில்
வாழும்
இவர்கட்கு?
வரலாறே
உன் தீர்ப்பென்ன?
மரம் நடும்
கனவுகளோடு
காத்திருக்கும்
பிஞ்சுகளின்
கண்களில் கூட
தெரிகிறது
நம்பிக்கையின்
எதிர்காலம்
ஒன்றாய் நாம்
எழுந்தால்
விடியலும் அவர்
நிகழ்காலம்.

**- புலோலியூர்
வேல்நந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோவளம் வெளிச்ச வீடு

காரைநகரில் நீண்டு, உயர்ந்து வரிசை வரிசையாக அமைந்த பயன்தரு தென்னை மரத் தோப்புக்கள் நிறைந்த கோவளம் எனப்படும் வளமான குறிச்சியில் கோவளம் வெளிச்சவீடு அமைந்துள்ளது. பார்ப்பவர்கள் பிரமிக்கத்தக்க கம்பீரமான தோற்றம் மிக்கது. கோவளம் வெளிச்ச வீடு தொடர்பான ஆவணங்களில் "Kovilan Point Light house is a Light house on the island of Karaitivu in northern SriLanka" எனக்குறிப்பிடப் பட்டுள்ளது.

கோவளம் வெளிச்சவீட்டிற்கான நிலையம் 1899 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1916 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கோவளம் வெளிச்ச வீடு 30 மீற்றர் (98 அடி) உயரம் உடையது. சதுர வடிவிலான அடித்தளமும்-உருளை வடிவிலான கோபுரமும் முருகைக் கற்களால் (Coral Stones) ஆனது. வெளிச்ச வீட்டின் 15 அடி 6 அங்குலம் உடைய சதுர வடிவிலான அடித்தளத்தின் மீது 18 அடி உருளை வடிவிலான 69 அடி உயரமுடைய கோபுரத்தின் மேற்பகுதியில் கண்ணாடியில் வடிவமைக்கப்பட்ட விளக்கு அமைக்கப்பட்டுள்ளது. அடித்தளத்தில் இருந்து விளக்கு வரையிலான உயரம் 86 அடி 7 அங்குலம்.

வெளிச்சவீட்டின் கிழக்குவாயில் ஊடாகச் சென்று உட்பகுதியில் இரும்பினால் அமைக்கப்பட்டுள்ள ஏணிகள் மூலம் வெளிச்ச வீட்டின் பல்கணிக்குச் சென்று அடையலாம். வெளிச்சவீடு பாதுகாப்பாக செயற்படு நிலையில் இருந்தபொழுது மேலே ஏறிச் சென்று பார்வையிடக் கூடியதாக இருந்தது. வெளிச்ச வீட்டின் உச்சியில் இருந்து கடற்பரப்பையும், காரைநகரையும் பார்வையிடக் கூடியதாகப் பல்கணி (open gallery) அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு 30 செக்கனுக்கு 2 வெள்ளை ஒளியைப் பாய்ச்சும். இவ் ஒளி 11 கடல் மைல் தூரத்துக்குச் செல்லும் (Range 11 Nautic miles ) செல்லும். முதலாவது வெளிச்சம் காரைதீவின் வட மேற்கு மூலையில் இருந்து ஒரு கம்பத்தில் இருந்து கட்டப்பட்டது. வெளிச்ச வீடு செயற்படு நிலையில் இருந்தபோது எரிவாயுவின் மூலம் ஒளியூட்டப்பட்டது. இவ் வெளிச்ச வீடு ஒளிரும் பொழுது கசூரினாக் கடற்கரையில் நின்று சிறப்பாக அவதானிக்க முடியும். வெளிச்ச வீட்டுக்கு அருகாமையில் பாதுகாவலர்கள் (Keepers) கடமை நிமித்தம் வசித்த விடுதியும் காணப்படுகின்றது.

காரைநகர் வெளிச்சவீடு காரைநகரின் பழம் பெருமையின் சின்னமாக அல்லது வரலாற்று அடையாளமாக (Symbol of old glory or Landmark) தொல் பொருள் பெறுமதி மிக்கதான (Archeological value) வரலாற்றுச் சிறப்பு மிக்க (Historical Importance) கட்டுமானமாகும்.



# வசந்தன் கூத்து

இலங்கையின் மரபார்ந்த கூத்து வடிவங்களில் வசந்தன் கூத்தும் ஒன்றாகும்.

வசந்தன் தனியே பாடலும், ஆடலும் இணைந்த இதில் பாத்திரங்கள் என்றில்லாமல் ஒரு கதையை ஆட்டமுறையின் மூலம் வெளிப்படுத்துவது. சிறுவர்கள் பெரும்பாலும் பங்கு கொள்கின்ற இந்த ஆட்டமுறை பல்வேறு விதமான ஆட்டக் கோலங்களை வெளிப்படுத்தியிருக்கும். இங்கு கதைகூறும் மரபே முக்கியப்பட்டாலும், இதில் ஆட்டமே பிரதானமாக வெளிப்படும்.



# தட்டி வான்

தட்டிவான் யாழ்ப்பாணத்தில் பிரபலமான வாகனம். பலருக்கும் மிகவும் பழக்கப்பட்டது, பருத்தித்துறையில் தொடங்கி நெல்லியடி ஊடக கொடிகாமம் போகும் தட்டிவான் தான். பிரிட்டிஷ் காரனின் தயாரிப்பு.

இந்த தட்டிவானில் பயணம் செய்தால் நீங்கள்உலகத்தின் எந்த மூலையில் இருக்கும் வாகனங்களி லும் பயணம் செய்யலாம்.

முதலில் தட்டிவானின் வடிவமைப்பை பார்ப்போம். முன்பக்கத்தில் மட்டும் கண்ணாடியுள்ள வாகனம். மக்கள் இருக்கும் இடப்பகுதி எல்லாம் திறந்தவெளி. சாவகச்சேரி சந்தைக்கு போகின்ற குஞ்சி ஆச்சி வெத்திலை சப்பித்துப்ப ஏதுவானது. பின்பக்கத்தில் இருக்கும் பலகையில் மீன் பெட்டிகள், மரக்கறி மூட்டைகள் முடிந்தால் மனிதர்களைக்கூட ஏற்றிச் செல்லும் அதிசய வாகனம்.

எப்படியும் காலை 7 மணிக்கு நெல்லியடிச் சந்திக்கு வந்துவிடும். சனமாக இருந்தாலும் கொண்டக்டர் விடமாட்டான். "அண்ணே இன்னும் கொஞ்சம் பொறுங்கோ சனம் வரட்டும்" என எப்படியும் அரை மணித்தியாலம் அங்கேயே வைத்திருப்பான். பக்கத்து மொடேர்ன் ஸ்டோரில் உதயனையோ, ஈழநாதத்தையோ நின்று நிதானமாக சனம் நிறைந்த பின்னர் ஏறும் பலரைக் கண்டிருக்கின்றேன். சிலவேளை ட்ரைவரே தனக்கு தெரிந்தவர்களுக்கு "இப்போ எடுக்க மாட்டான் பக்கத்து சங்குண்ணி கடையில் தேத்தண்ணி குடித்துவிட்டு வாருங்கள்" என்பார்.

பெரும்பாலும் ஒரே ஆள்களே தட்டிவானில் பயணிப்பார்கள். இவர்கள் சாவகச்சேரியில் வேலை பார்ப்பவர்கள், கொடிகாமம் சந்தையில் வியாபாரம் செய்பவர்கள், என ஒரே மக்கள் செல்வதால் அவர்களுக்கு பலரையும் பழக்கமாய் இருக்கும். இதனால் ஒருவர் வரப் பிந்தினால் கூட, ட்ரைவருக்கு உரிமையாக "தம்பி ஆச்சி" வரவில்லை "சின்னத்தம்பி அண்ணை வரவில்லை கொஞ்சம் பொறுங்கள்" என கூறுவார்கள்.

சீற் ஆசனங்கள் பெரும்பாலும் மரத்தாலே ஆனவை. பின்னுக்கு அரை முதுகுதான் சாஞ்சு இருக்க முடியும். இரண்டு சீற்றுக்கு இடையில் தேவைப்பட்டால் இன்னொரு பலகை போட்டு மேலதிக ஆள்களை இருத்தும் கலை இவர்களுக்குத்தான் தெரியும்.

நெல்லியடிச் சந்தியில் அரைமணித்தியாலமாக உறுமிக் கொண்டே இருக்கும். சிலவேளைகளில் வெளிக்கிடுவதுபோல் எடுத்து அப்படியே பஸ் ஸ்டாண்டை ஒரு சுற்றுச் சுற்றி திரும்ப அதே நிண்ட இடத்தில் கொண்டுவந்து நிப்பாட்டுவார்கள். சில வேளை சீரிபி தூரத்தில் வருகின்றது என்றால் மட்டும் உடனே எடுத்துப்போடுவார்கள். ஆனாலும் கோயில் சந்தை, அந்தணத்திடலில் சில நிமிடங்கள் எப்படியும் நிண்டுதான் எடுப்பார்கள். திரும்ப மாலையில் கொடிகாமத்தில் இருந்து தட்டிவான் தன் பயணத்தை நெல்லியடி ஊடாக பருத்தித்துறைக்கு செல்லும்.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதித் திருவிழா நேரத்தில், நெல்லியடியிலிருந்து கோயில் வரை 'ஸ்பெசல் சேர்விஸ்' விடுவார்கள். அந்த அனுபவமும் சுவையானது. இதனைவிட அச்சுவேலியில் இருந்தும் தட்டிவான் சில இடங்களுக்குச் செல்வது - ஆனாலும் பயணம் செய்து பழக்கமில்லை. ஏனைய மாவட்டங்களில் நான் தட்டிவான் கண்டதில்லை. வவுனியா, திருகோணமலை, நுவரெலியாப் பகுதியில் சிறிய வான்களில் மக்களை அடைத்துக் கொண்டு செல்வதைக் கண்டிருக்கின்றேன். கஷ்டமான பயணம் என்றாலும் நம் மக்கள் மகிழ்ச்சியுடன் பயணிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மரபுரிமைகள் பற்றியும், சமூகப் பிரச்சினைகள் பற்றிய[illegible]ான உரையாடலைத் தொடங்கும் "புதிய சொல்" யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு நடவடிக்கையான பட்டத்திருவிழா பற்றியதான விரிவான கட்டுரையுடன் விரிகிறது. பன்மைத்துவமான வாசிப்பு சாத்தியங்களை வழங்கக் கூடியதான ஆக்கங்களுடன் வெளிவந்திருக்கும் இவ்விதழ், இந்த வருடம் புதிய சொல் விருது பற்றிய அறிவுப்புடனும் வெளியாகி இருக்கிறது.

மலையக நாட்டுப் புறப்பாடல்களின் சுருக்கம், கல்வியின் அரசியல் வாசிப்பின் பயன்கள் போன்ற வேறு தளங்களுக்கு நகரக்கூடிய அறிவு சார்ந்த கட்டுரைகளையும் முக்கியமான மொழி பெயர்ப்புக் கவிதைகளையும் வெளியிட்டு இருக்கிறது. உதாரணமாக க.வாசுதேவன் பிரெஞ்சு மொழியில் இருந்து இரண்டு கவிதைகளையும் மற்றும் இ. ரமணன் இரண்டு சிங்கள கவிதைகளையும், றூப்னரின் கவிதைகளையும் மொழி பெயர்த்திருப்பது சிறப்பானது.

பெரும்பாலான கட்டுரைகள் ஆய்வுகள்போல் இருப்பதால் பொது வாசகர்களுக்கு ஒருவித அந்நியத் தன்மையை தோற்றுவிக்கக் கூடியது. மேலும், ஆய்வு ரீதியான பதங்களுக்கு எந்தவிதமான விளக்கங்களும் அளிக்கப்படாதவிடத்து, குறித்த துறைசார்ந்த அறிவு குறைந்த வாசகர்கள் மிகுந்த சிக்கலுக்கு உள்ளாவார்கள். மேலும், நடைமுறை சார்ந்த பிரச்சினைகள் தொடர்பிலான உதாரணமாக காணாமற்போனவர்கள் பற்றிய பிரச்சினை, காணி தொடர்பான பிரச்சினை போன்றவற்றை பற்றி உரையாட வேண்டும் என்ற குறிப்பு ஆசிரியர் தலையங்கத்தில் இருந்தாலும், உள்ளே உரையாடப்படும் உள்ளடக்கங்கள் தீவிர நிலைப்பட்டதாகவே இருக்கின்றன.

கலை இலக்கிய சமூக செயற்பாட்டுக்கான இதழாக தன்னை முன் நிறுத்தும், இவ்விதழ் சமூகம் பற்றிய விடயங்கள் தொடர்பில் இன்னும் உள்வாங்க வேண்டிய தேவை இருக்கிறது.

இளம் ஓவியரான தவதஜேந்திரனின் 'இறப்பிலிருந்து இறவாமைக்கு' என்ற ஓவியத்தின் அட்டைப்படத்துடன் அறுபத்தியோராவது இதழை வெளியிட்டு இருக்கிறது கலைமுகம். மெரீனா கடற்கரையில் இடம்பெற்ற ஜல்லிக்கட்டுக்கான எழுச்சியைப் பற்றியும், அதனூடாக தமிழ்ச் சமூகத்தில் உருவாகியிருக்கக் கூடிய அடையாளம் பற்றிய புதுக் குருதி பற்றியும் பேசியபடி இந்த இதழ் தனது பன்முகமான உள்ளடக்கங்களைத் திறக்கிறது. ஈழத்தில் உள்ள சிறுவர் நாடகங்கள் பற்றி யோண்சன் ராஜ்குமார் விரிவாக எழுதிய கட்டுரையுடன் ஆரம்பிக்கும் இதழ், மொழி பெயர்ப்புகள், கவிதைகள், அஞ்சலிகள், சிறுகதைகள், தொடர் கட்டுரைகள், நூல் மதிப்பீடுகள், நூல் அறிமுகங்கள் போன்றவற்றின் ஊடாக தனது கனதியை அதிகப்படுத்திக் கொள்கிறது.

விசேடமாக நூல் மதிப்பீடுகள் காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல், மனமென்னும் கூடு, ஆறாத காயங்கள் ஆகிய புத்தகங்கள் மேல் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. அவற்றை எழுதியவர்களின் வாசக மதிப்பீடு மிகவும் முக்கியமானது.

இதழின் மேலுமொரு முக்கிய பகுதியாக 'அமிரிதா ஏயத்தின்' நேர்காணல் ஒரு சமூகத்தின் மனச்சாட்சி என்ற தலைப்பில் வெளிவந்திருக்கிறது. இலக்கிய ரீதியில் சிறுகதைகளில் பல புதிய ஆய்வுகளை மேற்கொண்டவர் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் விலங்கியல் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றும் அமிர்தா ஏயெம் பற்றிய விரிவான நேர்காணல் இது.

சி. ரமேஷ் எழுதிய "இரண்டாயிரத்துக்குப் பின்னர் ஈழத்துச் சிறுகதைகள் ஒரு தசாப்த காலப்பயணம்" என்ற தொடர் பல சிறுகதைத்தொகுதிகள் பற்றிய பட்டியலாக்கம் செய்யும் ஒரு ஆவண முயற்சியாக தனித்து தெரிகிறது. இதற்கு எதிர்காலத்தில் மிகவும் பயன் மதிப்பு உண்டு. சாந்தன் எழுதியுள்ள "இரண்டு பேரும் இரண்டு போரும்" என்ற கட்டுரை கடந்த இதழில் வெளிவந்த அவருடைய கட்டுரையைப் போலவே தமிழ் வாசகர்களுக்கு புதிய தளங்களை அறிமுகப்படுத்துவதாக உள்ளது.

இதழின் பலவீனங்களாக சிறுகதைகள் இருக்கின்றன. மு.பொ வும், சி.கதிர்காமநாதனும் எழுதிய "கொட்டாவி", மற்றும் "வீட்டுக்கு கள்ளன் வந்தான்" ஆகிய இரண்டு சிறுகதைகளும் சலிப்பூட்டும் படியான வாசிப்பு அனுபவத்தை தருகின்றன. பல கவிதைகளும் சிற்றிதழ் மரபுகளுக்குள் உண்டான வடிவநேர்த்தி, வாசிப்பு, அனுபவம் ஆகியன குறைவாகவே இருக்கின்றன. வெகுஜன பத்திரிகைகளில் வெளிவந்திருக்கக்கூடிய அளவுதான் அவற்றின் மதிப்பு இருக்கும்.

சில பத்திகளும் அலுப்பூட்டும்படியான வசன அமைப்புகளுடன் பாடசாலை மாணவர்கள் எழுவது போல் உள்ளது. இவற்றை தவிர்த்தால் இதழ் இன்னும் சீரிய வாசகர்களை உருவாக்கக் கூடிய கனதியைக் "கலைமுகம்" பெறும்.







அநுராதபுரத்தில் இருந்து தொடர்ச்சியாக வெளிவரும் இலக்கிய இதழாகவும் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து தொடர்ந்து ஒலிக்கும் சிற்றிதழாகவும் படிகள் தொடர்ந்து வளருகின்றது. இலக்கியத்தின் புதிய கதையாடல்கள் பற்றியும், புதிய பரிமாணங்கள் பற்றியும் உரையாட வேண்டியதன் தேவையை வலியுறுத்திய படி தொடங்கும் இதழ், கவிஞர் தாரீன் தத்தூர் பற்றிய குறிப்புடன் விரிகிறது. சிரேஷ்ட எழுத்தாளரும் சினிமா விமர்சகரும் இதழியலாளருமான அ.யேசுராசா உடனான வாழ்க்கை அனுபவப் பகிர்வுகளை இலக்கியத்தில் அவர் கண்டது என்ன? என்பது பற்றியதுமான சுருக்கமான நேர்காணல் ஒன்று வெளியாகியுள்ளது. மறைந்த முஸ்லிம் இலக்கிய செயற்பாட்டாளரான கவின் கமல் பற்றிய விரிவான ஆளுமைக் குறிப்பை வைத்திய கலாநிதி தாசிம் அஹமது எழுதியுள்ளார்.

இதழின் விசேட அம்சமான சிங்கள் சினிமா பற்றிய தொடர் நாச்சியாதீவு அபு நுஹா வால் எழுதப்படுகிறது. சினிமா பற்றியதான அதுவும் குறிப்பாக சிங்கள சினிமா பற்றியதான உரையாடல்கள் பெரும்பாலான தமிழ் சிற்றிதழ் மரபில் இடம் பெறுவது குறைவு. படிகள் அதனை நிவர்த்தி செய்வதாக ஒரு தொடரை வெளியிடுவது முக்கியமானது.

ஒன்றிரண்டு கவிதைகளைத்தவிர மொழி பெயர்ப்போ அல்லது கவிதைப்பிரதிகளோ சொல்லிக் கொள்ளும் படியாக இல்லை. சிறுகதைகளும் அப்படியே. அதேபோல் இப்னு ஆயிஷா எழுதியுள்ள முகநூல் கவிதை முகங்கள் என்ற கட்டுரையும் மிகவும் பலவீனமாக இருக்கிறது.

அதற்கு காரணம் பின் நவீன கவிதை என்று சொல்லி அடிப்படையான கோட்பாட்டு புரிதல் இன்றி கட்டுரை தொடங்கியிருக்கிறது. பின்னர் மேம் போக்காக பொது வெளியில் பின் நவீனத்துவம் என்று சொல்லி வலம் வரக்கூடிய கருத்துக்களையே ரியாஸ் குரானா, கருணாகரன், அனார், ஆதிபார்த்தீபன் ஆகியோரது கவிதைகள் மேல் வாசிப்பாக வைத்திருக்கின்றார். ஒரு தீவிர இதழில் கட்டுரைகளை வெளியிடும்போது முடிந்தவரை போதிய வாசிப்பை மேற்கொண்ட பின் எழுத ஆரம்பிப்பது, இதழின் தரத்தையும் எழுதுபவரின் கருத்துக்கள் மூலம் புதிய திறப்புக்களையும் அளிக்க முடியும். இவற்றையும் கவனித்துக் கொண்டு தொடர்ந்து வளரும் படிகள் என்று நம்புகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 06 உன்னை நீயே அறிவாய்!

### நிறம்

உங்கள் நிறுவனத்தின் பெயரையோ, லோகோவையோ நீங்கள் பெயர்ப் பலகையிலோ, விளம்பரங்களிலோ அச்சிட்டோ, விஷுவலாகவோ வெளியிடும் போது அவை பார்ப்பவரைக் கவரும் வகையில் இருக்கவேண்டும். அதற்கு அதன் நிறம் பார்ப்பவர்களைக் கவரும் வகையில் இருக்க வேண்டும்.

லோகோ, பெயர் மட்டுமல்ல, நம் விற்பனை நிலையத்தின் இன்டீரியர் முதற்கொண்டு அனைத்திலும் பயன் படுத்தப்படும் நிறத்தில் மிகவும் கவனம் தேவை. ஏனெனில் ஃபர்ஸ்ட் லுக் இஸ் தி பெஸ்ட் லுக் என்பார்கள். இப்போது பேஸ்புக் என்றால் நீலம், வட்ஸ்அப் என்றால் பச்சை என்கிற அளவுக்கு நாம் வைக்கும் நிறம் நம் பிராண்டைக் குறிப் பிடும் அளவுக்கு இருக்க வேண்டும்.

அதேபோல், நாம் வைத்துள்ள பெய ருக்கேற்ப நாம் பயன்படுத்தும் நிறம் இருக்க வேண்டும். பிங்கி என்று பெயர் வைத்துவிட்டு, அதன் லோகோவிலோ அல்லது பெயர் பலகையிலோ கறுப்பு நிறத்தைப் பயன்படுத்தக்கூடாது. ப்ளூ அப்பிள் என்று பெயர் வைத்துவிட்டு, சிவப்பு நிற அப்பிள் படத்தைப் போடக் கூடாது. எனவே, நாம் பயன்படுத்தும் நிறங்களில் கவனம் தேவை. பொதுவாக, கறுப்பு நிறத்தைத் தவிர்ப்பது நல்லது. நம் வாடிக்கையாளர்களுக்கு அதிகம் பிடிக்கும் நிறங்களைப் பயன்படுத்தலாம்.

இப்போது, நாம் தயார் செய்த பொருளை பொதி செய்யும்போது கவனிக்க வேண்டிய விடயங்களைப் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

நாமே உற்பத்தி செய்த பொருளாக இருந்தாலும் சரி, பிறரிடமிருந்து வாங்கி விற்கும் பொருளாக இருந்தாலும் சரி, பொதியிடல் என்பது மிகவும் முக்கிய மானது. ஏற்கனவே மக்களிடையே பிரபல மாக இருக்கும் நிறுவனங்களின் பொருட் களை நாம் வாங்கி விற்கப்போகிறோம் எனில், நாம் தனியாகப் பொதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

### பொதியிடல் முறைமைகள்

பொதியிடல் என்று வரும்போது, ஒரு பொருளைத் தனியாக பொதி செய்வது, அதே பொருளை அதிக எண்ணிக்கையில் பொதி செய்வது என இரண்டாகப் பிரிக்க லாம். ஒரு பொருளைத் தனியாகப் பொதி செய்யும்போது, அதில் கவனிக்க வேண்டிய சில விடயங்கள் உள்ளன.

நாம் பொதி செய்யப்போகும் பொருள் என்ன, அதன் தன்மை, அளவு (Unit), அதனுடைய வாழ்நாள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் பொதியிடல் முறை களைத் தெரிவு செய்ய வேண்டும். ஏனெ னில், நம்முடைய பொருள் எவ்வளவு தரமானதாக இருந்தாலும், அதனை சரியான முறையில் பொதி செய்யாவிட்டால், அவை கெட்டுப் போகவோ அல்லது வாடிக்கையாளரைக் கவராமல் போகவோ வாய்ப்பிருக்கிறது. மேலும், நம்முடைய பொதியிடல் முறைகள் பயனாளரால் எளிதில் கையாளக் கூடிய வகையில் இருக்க வேண்டும். முக்கியமாக, கையாளும் போது விபத்து நடக்காத வகையிலும் இருப்பது அவசியம்.

தற்போது பெரும்பாலான பொருள்கள் பொதி செய்வதற்கு பிளாஸ்ரிக் பயன் படுத்தப்படுகிறது. ஆனால், உணவுப் பொருள்களில் பிளாஸ்ரிக் பயன்படுத்தும் போது நாம் கவனமாக இருக்கவேண்டும். யூஸ் அண்ட் த்ரோ, அதாவது உடனடி யாகப் பயன்படுத்தப்படும் வகையில் இருக்கும் பொருள்களை பிளாஸ்ரிக் கொண்டு பொதி செய்யலாம். மற்றப்படி நீண்ட நாட்கள் வைத்திருந்து பயன்படுத்தும் உணவுப் பொருள்கள் எனில், அவற்றை கண்ணாடிக் கலன்கள், அலுமினியக் கலன்கள் போன்றவற்றை வைத்துப் பொதி செய்வது நல்லது. மேலும், கிலோ கணக்குகளில் பொதி செய்யும்போது, அதன் எடையைப் பொறுத்து பொதியிடும் பொருள்களும் மாறும்.

இயந்திரங்கள் தொடர்பான பொருள் களை பொதி செய்யப் போகிறீர்கள் என்றால், ப்ளைவுட் பெட்டியில் ஸ்டாண்ட் வைத்து பேலட்டில் நிற்க வைத்து பொதி செய்ய வேண்டும். அதேபோல், உடைந்து போகக் கூடிய தன்மை கொண்ட கண்ணாடி, பீங்கான் போன்ற பொருள்களை ஹொட்டன் பெட்டியில்தான் பொதி செய்ய வேண்டும். இலத்திரனியல் சாதனங்களையும் ஹொட்டன் பெட்டியில் தெர்மாகோல் உதவியுடன் பொதி செய்ய வேண்டும். ஹொட்டன் பெட்டியில் பொதி செய்யும் போது, அவற்றை பொதி செய்யத்தேவை யான உபகரணங்களுடன் பாதுகாப்பாக பொதி செய்ய வேண்டும்.

ஹொட்டன் பெட்டி தேவைப்படாத அரிசி, உப்பு போன்ற பொருட்களை அதிக அளவில் பொதி செய்ய வேண்டும் என்றால், சாக்குப் பைகளாகப் (Gunny bag) பிடித்து அடுக்கலாம். சாக்குப் பைகள் மட்டும் இல்லாமல் ஓவன் பைகளையும் (Oven bag) பயன்படுத்த லாம். அதிக அளவிலான உப்பு, அரிசி போன்றவற்றை கன்டெய்னர்களில் கொண்டு செல்ல வேண்டுமென்றால், பேலட்டுகளில் உப்பு அல்லது மணல் மூட்டை அடுக்கி அவற்றை ஸ்ரிங் ரேப்பிங் (Shrink wrapping) மூலம் பொதி செய்யலாம். இந்த முறை ஏற்றுமதி மற்றும் இறக்குமதியில் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

உப்பு, சர்க்கரை, சொக்லேட், இனிப்பு போன்ற ஈரப்பதமுள்ள, உருகும் தன்மை யுடைய பொருள்களை பிளாஸ்ரிக் அல்லது அலுமினியம் ஃபொயில் பேப்பர்களில் பொதி செய்ய வேண்டும். காற்றில் உள்ள ஈரப்பதத்தினால் தன்னுடைய தரத்தை இழக்கும் பிஸ்கட், சிப்ஸ் போன்றவற்றை பேக்கிங் செய்யும்போது, காற்று புகாத வாறு பொதி செய்ய வேண்டும்.

தற்போது பிளாஸ்ரிக் பொருள்களுக்கு மாற்றாக மறுசுழற்சி செய்யக்கூடிய வகை யிலான பொருள்கள் பிரபலமடைந்து வருகின்றன.

வாடிக்கையாளர்களைக் கவர காகிதப் பைகள், சாக்குப் பைகள், ஓவன் பைகள் மற்றும் காகிதத்தைக் கொண்டு செய்யப்பட்ட கலன்கள், பனை மர ஓலைகளில் செய்யப்பட்ட கலன்கள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

### வாடிக்கையாளர்களைக் கவரும் லேபிளிங்

பொதி செய்யப்பட்ட ஒரு பொருளை வாடிக்கையாளருக்குக் கொண்டு சேர்க்கும் முகவரியே அதன் மீது செய்யப்படும் பிறிண்டிங். அதாவது, நீங்கள் தயாரிக்கும் பொருளின் பெயர், அதில் பயன்படுத்தப் படும் நிறம், அளவு, உற்பத்தி செய்யப்படும் இடத்தின் முகவரி என பல விடயங்கள் அந்த பிறிண்டிங்கில் இடம் பெற வேண்டும்.

1. முதலில் பெயரும், நிறமும் பார்ப்பவர்களைக் கவரும் வகையில் இருக்க வேண்டும். அந்த பையின் உள்ளே என்ன பொருள் இருக்கிறது என்பதைப் பார்த்தவுடன் தெரியும் வகையில் அந்தப் பொருளின் படத்தை அச்சிட வேண்டும் அல்லது பொதியிட லில் சிறு பகுதியை எதுவுமில்லாமல் விட்டு, உள்ளே இருக்கும் பொருள் வெளியே தெரியும் வகையில் செய்யலாம்.

2. பொதியிடல் அளவு, அதாவது கிராம், லீற்றர், மில்லி, கிலோகிராம் என அதன் எடை, எவ்வளவு யுனிட் என்பதைக் குறிப்பிட வேண்டும். வெளி நாடுகளில் விற்பதாக இருந்தால், அங்கு புழக்கத்தில் உள்ள அளவு முறைகளில் குறிப்பிட வேண்டும். பெரும்பாலும் இறாத்தல் lbs என்று குறிப்பிடுவார்கள். ஒரு lbs = 453 கிராம் ஆகும்.

3. பொருட்களின் பொதியிடல் சில விடயங்களை வாடிக்கையாளருக்கு நாம் சொல்லியாக வேண்டும். எங்கே உற்பத்தி செய்யப்பட்டது என்பதை Made in India, Made in China எனக் குறிப்பிட வேண்டும். சாப்பிடும் பொரு ளாக இருக்கும்பட்சத்தில் அது சைவமா, அசைவமா என்று குறிப்பிடும் நிறக் குறி யீட்டை குறிப்பிட வேண்டும். அடுத்து, பொருளின் தொகுதி இலக்கம், காலாவ தியாகும் திகதி, உற்பத்தி செய்த திகதி ஆகியவற்றையும் குறிப்பிட வேண்டும்.

மேலும், ரெடி டு ஈட், ரெடி டு குக், டயட் கோக், சுகர் ஃப்ரீ, ப்ளக் இன் ப்ளக் போன்ற முக்கியமான தகவல்களையும் குறிப்பிட வேண்டும். இப்படி செய்வது வாடிக்கையாளர் தனக்குத் தேவையானது எது என்பதை விரைவில் முடிவெடுக்க உதவியாக இருக்கும். மேலும், சலுகைகள் ஏதேனும் தருகிறீர்கள் எனில், அதை முக்கியத்துவப்படுத்தும் வகையில் டிசைன் செய்யலாம்.

4. எந்த இடத்தில் நாம் பொருளை விற்பனை செய்கிறோமோ, அந்த இடத்தின் மொழியையும் பயன்படுத்த வேண்டும். பிற மாநிலங்களில் விற்பனை செய்தால், அந்த மாநில மொழிகள் பிரின்ட் செய்ய வேண்டும். டுபாய் போன்ற அரபு நாடுக ளில் விற்பனை செய்வதாக இருந்தால், அனைத்து விவரங்களும் அரபு மொழி யில் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

5. மதிப்புக் கூட்டுப் பொருட்களாக இருந்தால், அவற்றில் பயன்படுத்திய உட்பொருட்கள் என்னென்ன, எந்த அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைச் சேர்க்க வேண்டும்.

(இன்னும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி



# களங்கமா? சாதனையா?

அவுஸ்ரேலிய அணியின் துடுப்பாட்ட வீரரான டேவிட் வோணர் சில தினங்களுக்கு முன்னதாக அஸ்வினின் சாதனை குறித்து கருத்தொன்றைத் தெரிவித்திருந்தார். சமீபத்தில்தான் அஸ்வின் 45 டெஸ்ட் போட்டிகளில் 250 விக்கெட்டுக்களை வீழ்த்திச் சாதனை புரிந்திருந்தார். அதைக் கருத்திற்கொண்டே "டேல் ஸ்ரெயின் 9,579 பந்துகளில் 250 விக்கெட்டுக்களை வீழ்த்த, அஸ்வினோ, ஸ்ரெயினை விட 550 ஓவர்கள் அதிகம் பந்து வீசியே சாதனை படைத்துள்ளார். அத்தோடு வக்கார் யுனுஸ், முரளிதரன், டெனிஸ் லில்லி, ஷேரன் வோர்ண், மக்கிறாத், மிட்செல் ஜோன்சன் ஆகியோர் குறைந்த பந்துகளில் 250 விக்கெட்டுக்களை வீழ்த்தி உள்ளார்கள்" என்று ஒரு புள்ளிவிவரத்தை வெளிப்படுத்தி உள்ளார். அஸ்வினின் பந்து வீச்சுக்கு முகம்கொடுக்க முடியாமல் திணறும் வோணர், இதுவரை 10 தடவைகள் அவரது பந்துவீச்சில் ஆட்டமிழந்துள்ளார். அந்த ஆற்றாமையினாலேயே இவ்வாறு புலம்பி உள்ளதாக இந்திய ரசிகர்கள் கருதுகிறார்கள். ஆனாலும், வோணரின் கருத்தை முற்றாக மறுதலிக்கவும் முடியவில்லை.

ஏனென்றால் பொதுவாகவே டெஸ்ட் போட்டிகளில் வேகப்பந்து வீச்சாளர்களைவிட சுழற்பந்துவீச்சாளர்களே அதிகளவு ஓவர்கள் வீசுகின்றனர். அதிலும் ஆசியாவைப் பொறுத்தவரையில் முரளிதரன் விளையாடிய போதிலும், சரி அனில் கும்ளே, ஹற்பஜன் சிங் போன்றவர்கள் விளையாடிய போதிலும் சரி சுழலுக்குச் சாதகமான சொந்த மண்ணில் போட்டி நடைபெறும் பொழுது அவர்களே அதிக ஓவர்களை வீசுகிறார்கள். அவர்களே தங்களுடைய அணியின் நட்சத்திரப் பந்து வீச்சாளர்களாகவும் விளங்கியதனால் அது தவிர்க்க முடியாத ஒன்றாகவே காணப்பட்டது. இதற்கு அஸ்வினும் விதிவிலக்கல்ல. 250 விக்கெட்டுக்களை வீழ்த்தியதில், முரளி குறைந்த ஓவர்களை வீசி இருக்கலாம். ஆனால் ஷேன் வோர்ண் கைப்பற்றிய 708 டெஸ்ட் விக்கெட்டுக்களுடன் ஒப்பிடும்பொழுது ஷேன் வோர்ணை விட முரளிதரன் வீசிய ஓவர்கள் அதிகம் என்பதே நிதர்சனமானது.


அந்தவகையில் விளையாடிக் கொண்டிருக்கும் ஒரு வீரரின் பந்துவீச்சு சாதனையில் எத்தனை டெஸ்ட் போட்டிகளில், எத்தனை இனிங்ஸ்களில் அந்தச் சாதனையைப் புரிந்தார் என்று இதுவரை ஒப்பிட்டுப் பேசப்பட்டு வந்ததே தவிர, பெரும்பாலும் அதில் எத்தனை ஓவர்கள் வீசினார்கள் என்பது கவனிக்கப்படுவதில்லை. ஏனென்றால் ஒரு வீரர் ஓய்வுபெறும்பொழுது அவர் எத்தனை ஓவர்களை வீசியுள்ளார் என்பதும் ஒரு தனிச்சாதனையாகவே கருதப்படுகின்றது.

இந்நிலையில், வோணர் விளையாடிக் கொண்டிருக்கும் வீரர் ஒருவரின் வீசப்பட்ட ஓவர்களை முன்வைத்து, ஒரு சர்ச்சையைக் கிளப்பி உள்ளார். ஆனாலும், அவரது கேள்வியை ஒட்டி அவர் கேளாத இன்னொரு கேள்வியும் இங்கே எழுகிறது. அதுதான் துடுப்பாட்ட வீரர்களை அச்சுறுத்தும் பந்துவீச்சாளர் யார் என்ற கேள்வி. ஏனென்றால் அதற்கும் வீசப்படும் ஓவர்களின் எண்ணிக்கைக்கும் தொடர்பு இல்லாதபோது அஸ்வினையும் ஸ்ரெயினையும் வேறுபடுத்திப் பார்க்க முடியுமா?

அதேசமயம் அஸ்வின் 5 ஆண்டுகள் மற்றும் 3 மாதங்களில் வீழ்த்திய 250 விக்கெட்டுக்கள் சாதனையை இங்கிலாந்தின் கிரீம் ஸ்வான் கிட்டத்தட்ட 5 ஆண்டுகளுக்குள்ளேயே விக்கெட்டை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார் என்று வோணர் ஒப்பிட்டதும் தவறான ஒரு கண்ணோட்டமாகவே தோன்றுகிறது. ஏனெனில் ஒப்பீட்டளவில் இந்திய அணியை விட இங்கிலாந்து அணிக்கு வருடந்தோறும் நடைபெறும் டெஸ்ட் போட்டிகளின் எண்ணிக்கை அதிகம் என்பது வெளிப்படையானதே. எனவே ஸ்வான் குறைந்த வருடங்களில் சாதனை புரிந்தார் என்ற வோணரின் வாதமும் ஏற்புடையதொன்றல்ல.

# நடுநிலை தவறிய தீர்ப்பா?

இங்கிலாந்தின் உள்ளூர் கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் எவ்ஏ கிண்ணத் தொடரில் செல்சி – மன்செஸ்ரர் யுனைற்றட் அணிகளுக்கிடையில் கடந்தவாரம் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் செல்சி 1 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. எவ்ஏ கிண்ணத் தொடரின் நடப்புச் சம்பியனாக மன்செஸ்ரர் யுனைற்றட் விளங்குவதனால், அதனைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டிய நெருக்கடியிலேயே அவ்வணி களமிறங்கியது. அதேசமயம் தற்போது நடைபெற்றுவரும் பிறீமியர் லீக் போட்டிகளில் புள்ளிப்பட்டியலில் முன்னிலை வகிக்கும் செல்சியும் இம்முறை கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற முனைப்பிலேயே களமிறங்கியது.



ஆனாலும் மன்செஸ்ரர் யுனைற்றட் அணியின் தோல்விக்கு முக்கிய காரணம் அவ்வணி 10 வீரர்களுடன் விளையாட வேண்டிய துரதிர்ஷ்டநிலை ஏற்பட்டதே. போட்டியின் 35 ஆவது நிமிடத்தில் அவ்வணி வீரரான அண்டர் ஹெரேராவுக்கு நடுவர் மைக்கல் ஒலிவர் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றினார். இதன்போது மன்செஸ்ரர் வீரர்கள் நடுவரைச் சூழ்ந்து, அவருடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். தற்போது இந்தச் சிவப்பு அட்டை விவகாரம் ஒருபுறம் சர்ச்சையை ஏற்படுத்தினாலும், மறுபுறம் மன்செஸ்ரர் யுனைற்றட் அணிக்கு வீரர்களைக் கட்டுப்படுத்தத் தவறிய காரணத்தால் எவ்ஏ நிர்வாகத்தால் 20,000 ஸ்ரேலிங் பவுண்டுகள் அபராதமாகவும் விதிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இதை எதிர்த்து மன்செஸ்ரர் யுனைற்றட் மேன்முறையீடு செய்வதற்கும் காலப்பகுதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி சிவப்பு அட்டை விவகாரத்தால் முதற்பாதியிலேயே மன்செஸ்ரர் யுனைற்றட் அணியின் முகாமையாளரான ஜோஸ் மௌறின்கோவுக்கும் செல்சி அணியின் முகாமையாளரான அன்ரோனியோ கொன்ரேக்கும் இடையில் வார்த்தை மோதலும் இடம்பெற்றிருந்தது. எனினும் இந்தப்போட்டி குறித்து மௌறின்கோ 'போட்டியில் தோல்வி அடைந்தாலும் வீரர்களின் செயற்பாட்டை நினைத்துப் பெருமையடைகின்றேன். நடுவரது செயற்பாட்டை விமர்சிக்க வேண்டிய தேவை எனக்கில்லை. ஆனால் நடுவர் மைக்கல் ஒலிவர் வீடு சென்று நிதானமாக தான் மைதானத்தில் நடந்து கொண்டமை குறித்து சிந்திக்க வேண்டுமென' தெரிவித்துள்ளார்.

# நட்டமில்லா இழப்பு

இந்தியாவுக்கெதிரான தொடரில் மிட்செல் ஸ்ராக் காயமடைந்ததனால் 23 வயதான வலதுகை வேகப்பந்துவீச்சாளர் கமின்ஸ்'க்கு மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் வாய்ப்புக் கிடைத்தது. கமின்ஸ் 18 வயதில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபதுக்கிருபது தொடரில் அறிமுகமானவர். சர்வதேச போட்டிகளில் அவருக்கான வாய்ப்புக்கள் அதிகம் கிடைக்கவில்லை என்பது உண்மையானாலும் அவுஸ்ரேலியாவின் உள்ளூர் போட்டிகளில் நியூசவுத்வேல்ஸ் அணியின் முக்கிய பந்துவீச்சாளராகவே இருந்து வருகின்றார்.

இந்தியாவுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் கமின்ஸ் பந்து வீசிக்கொண்டிருக்கும் பொழுது, தொலைக்காட்சி வர்ணனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளரான பிரட் லீ அவர் குறித்த ஒருதகவலைக் கூறியிருந்தார். கமின்ஸினுடைய வலதுகை நடுவிரல் ஏனைய மூன்றாவது நான்காவது விரல்களை விடச் சற்று நீளம் குறைந்தது எனவும் இது ஒன்றும் பிறவியிலேயே இருந்து வந்ததல்ல என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். கமின்ஸினுடைய மூன்றாவதோ நான்காவதோ வயதில் ஒருநாள் அவர் வீட்டில் உள்ள கதவிடுக்கினுள் விரலை வைத்திருந்ததை அறியாத அவரது சகோதரி கதவைப்பூட்டி உள்ளார். இதனால் ஏற்பட்ட காயத்தினால் வலது கை நடுவிரலில் சில சென்றிமீற்றர்களை அவர் இழக்க வேண்டியதாயிற்று. கமின்ஸ் அந்த வயதில் அழுததைவிட அவரது சகோதரியே இன்றுவரை அதுகுறித்து அதிகம் கவலைப்படுவதாகவும் 2011ஆம் ஆண்டு கமின்ஸ் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியதை பிரட்லீ நினைவு கூர்ந்துள்ளார்.



வேகப் பந்துவீச்சாளர்கள் அவுட்ஸ்விங் பந்துவீச்சை துல்லியமாக வீசுவதற்கு நடுவிரல் மிகவும் முக்கியமானது. அத்தோடு ஒரே அளவில் பந்து வீசுவதில் சிறிய விரலைத் தொடர்ந்த இரண்டு விரல்களின் பங்களிப்பும் காத்திரமானது. ஆனாலும் கமின்ஸ் விடயத்தில் என்ன ஆச்சரியம் என்றால் இந்தப்பாதிப்பு கமின்ஸின் பந்துவீச்சை எந்தவகையிலும் பாதிக்கவில்லை என்பதுதான். அவர் சராசரியாக 140 கிலோமீற்றர் வேகத்தில் பந்தை வீசி வருகின்றார் என்பதையும் பிரட்லீ குறிப்பிட்டுள்ளார்.

## றண்டி ஓர்ட்டனும் பிறே யார்ட்டும் என்ன பேசியிருப்பார்கள்?




இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 25.03.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org